
Sangathamil
# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

குரல் – 79 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 ஆகத்து 2024




**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**




























விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203


Sangathamil
சங்கத்தமிழ்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.**







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# கடற்புலிகளின் மகளிர் அணித் துணைப் பொறுப்பாளர்

# லெப். கேணல் பாமா (கோதை)




விடுதலைப் புலிகள் மகளிர் படையணி சந்தித்த பெருமளவான சண்டைகளில், அது தரைச் சண்டையாயினும் சரி கடற் சண்டையாயினும் சரி அவற்றிலே தனது பங்களிப்பைச் செய்து தனக்கென ஒரு தனி இடத்தை பிடித்துக் கொண்டவள் எங்கள் பாமா!


எல்லாவற்றிலுமே குறிப்பிடத்தக்க திறமையுள்ள, நிறைவான போராளியாக நாம் அவளைக் கண்டோம். நெஞ்சுக்குள் உறைந்து போன அவளது உருவமும் உறுதியான நடவடிக் கைகளும் எந்த ஒரு போராளியையும் அடிக்கடி நினைவு கூரச்செய்யும்.

“எங்கட பாமாக்காவோ?”

என்று அவளைப்பற்றிக் கூறி கண்கலங்கும் போராளிகள் அனேகம். நேற்றுவரை இந்தப் தென்னந்தோட்டங்களிலும், கடலின் உப்பு நீரிலும் கால்களை நீள நீள வைத்தபடி உலா வந்தவள். இன்று எங்கள் நினைவுக்குள் நீளமாய் உறைந்து போனாள்.

பருத்திதுறையிலுள்ள இன்பருட்டி கடற்கரை ஓரத்தில் சின்னக் குழந்தையாய் விளையாடி சிப்பிகளும் கிழிஞ்சல்களும் பொறுக்கி... அவள் குழப்படிக்காரியாகத்தான் இருந்தாள். சண் முகசுந்தரம் ஐயாவுக்கும், இரத்தினேஸ்வரி அம்மாவுக்கும் நாலாவது பிள்ளையான அவள் சியாமளாவாக வலம் வந்து அந்த வீட்டை நிறைய வைத்தவள். 1971.03.28ல் அவள் பிறந்த போது அந்த வீடு நிறைந்துதான் போனது. சியாமளா சரியான துடியாட்டக்காரி அம்மாவுக்கு விளையாட்டுக் காட்டி விட்டு, இன்பருட்டிக் கடற்கரை ஓரங்களில் கால்கள் மண்ணிற் புதைய, சின்னக் குழந்தையாய் தத்தித் தத்தி வருவாள். தொடு வானைப் பார்த்தபடி, எறிகின்ற அலைகளில் நனைந்தபடி நீண்ட நேரங்கள் நிற்பாள். அம்மா அவளைக் காணாது தேடி வரும் வேளைகளில் ஓடி ஒளித்து, அவளது குழந்தைக் காலக் குழப்படிகள் சொல்லிமாளாது.

அவள் தனது பள்ளிக்கூட வாழ்க்கையிலும் மிகவும் கெட்டிக் காரியாக இருந்தாள். தனது உயர்தரக் கல்வியை பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரியில் கற்றபோது உயிரியல் மருத்துவத்தை தேர்ந்தெடுத்திருந்தாள். படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி என்றுமே பின்தங்கியது இல்லை. விளையாட்டுப் போட்டிகளில் அவள் பெற்ற சான்றிதழ்கள் ஏராளம்.




இப்படி இருந்தவளது வாழ்வின் அமைதியை இந்தியப் படை நடவடிக்கைகள் குலைத்தன. அவளது அண்ணன் கடற்புலி லெப்டினன்ட் வெங்கடேஸ் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போது, படிப்பை விட நாடடுப்பணி மேலாகப்பட்டது. அண்ணன் கொண்ட இலட்சியப்பணியைத் தொடர சியமளா இயக்கத்தில் இணைந்தாள்.

1989 ஆம் ஆண்டு பங்குனி மாதம் அவள் இயக்கத்துக்கு வந்த நேரம். தமிழீழத்தில் வழுக்கி விழுகிற இடமெல்லாம் இந்திய இராணுவம். புலிகளை இரவும் பகலும் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்த நேரம். புலிகளின் முக்கியமான நடவடிக் கைகள் யாவும் காட்டிலே மேற்கொள்ளப்பட்டன. அப்போதிருந்த சூழ்நிலையில் இயக்கத்தில் போராளிகளின் எண்ணிக்கை மிகக்குறைவு. அதுவும் பெண் போராளிகளின் எண்ணிக்கை ஒரு சில நூறுகளுக்குள் மட்டுமே. இத்தகைய சூழ்நிலையில் சியாமளா, பாமாவாக தன் பெயரை வைத்துக் கொண்டு நான் காவது பயிற்சி முகாமில் பயிற்சி எடுத்தாள். பயிற்சிகளில் அவள் காட்டிய திறமையும் உயர்ந்த திடமான உடல் அமைப்பும் அவளை 50 கலிபர் துப்பாக்கியின் உதவிச் சூட்டாளராக செயற் பட வைத்தது. தனது கனரக ஆயுதத்தை தோளிலே சுமந்தபடி இணைப்பிகளை (லிங்குகள்) தோளின் குறுக்காகப் போட்டபடி அவள் நடப்பது தனியான கம்பீரம்! காட்டுக்குள் நீண்ட தூரங்கள் நடந்து, காடு முறித்து, எமக்குத் தேவையான பொருட் களை நாம் சுமந்து வருவது வழக்கம் பெரும் சுமைகள் தோளை அழுத்த அந்த வேளையிலும் இவள் கலகலத்தபடி வருவாள். எங்களுக்குப் பாரங்குறைந்தது போறதோன்றும்.

1990ம் ஆண்டின் முற்பகுதியில் இந்திய படைகள் எம் நாட்டை விட்டு வெளியேறிய போது, காட்டில் இருந்த இருநூறு பேர் கொண்ட குழு யாழ்ப்பாணம் வந்தது. இக் குழுவில் பாமாவும் ஒருத்தியாக இருந்தாள். அன்றிலிருந்து விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி சந்தித்த அனேகமான சண்டைகளில் அவ ளது தடயங்கள் பதிந்த வண்ணமிருந்தன.

கோட்டை, பலாலி, காரைநகர், சிலாவத்துறை, பலவேகய ஒன்று, மணலாறு என்ற நீண்ட பட்டியலில் அங்குள்ள காவ லரண்களில் அவளது கால்கள் அகலப்பதிந்தன.

பாமா! குறிப்பிட்ட சில காலப்பகுதியினுள்ளே இவளது வளர்ச்சி அபாரமானது. இவளின் உறுதியான செயற்பாடுகளும் நினைத் தகைச் சாதிக்கும் பண்பும் இவளைப் படிப்படியாக வளரச் செய்தன.

பலாலி காவலரண்களில் பாமா நின்றபோது அவளது செயற் பாடுகள் யாவும் மறக்க முடியாதவை. எந்த வேலையையும் எனக்கு தெரியாது என்று இவள் தலையாட்டியதை நாங்கள் காணவில்லை.

“வீட்டிலிருந்து எல்லாம் தெரிஞ்சு கொண்டே வந்தனாங்கள். இயக்கத்தில் இவ்வளவு தூரம் வளர்ந்து விட்டோம். எல்லாம் முயற்சியாலைதான்” என்று அடிக்கடி கூறுவாள்.

அவற்றை நாம் பலாலியில் நேரில் கண்டோம்.

அது 1990ம் ஆண்டின் மழைக்காலப் பகுதி. பலாலியின் செம்பாட்டுமண் மழை ஈரத்தில் பிசுபிசுத்தது. கால்கள் சேற்றில் புதைந்தன. சேற்றுக் குழம்புகளின் நடுவே இருந்த அந்தக் காவலரண் அடிக்கடி எதிரியின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் கொண்டிருந்தது. ஓயாமல் எறிகணைகள் விழுந்ததால், நிலம் கரியாகிப் போனது. அடிக்கடி அவ்விடத்துக்கு முன்னேற படை யினர் முயற்சிப்பதும் நாம் அடித்துத் துரத்துவதும் வழக்கமான ஒரு நிகழ்வாகிப் போனது.

இத்தருணத்தில், முதல் நாள் நடந்த கடுமையான சண்டையில் பதின்னான்கு பேர் காயம் அடைந்தனர். எதிரியின் இலக்கான அந்த இடத்தில் தொடர்ந்தும் எமது குழுவை நிலை நிறுத் துவதற்கு நாம் ஒரு பொறுப்பான ஆளைத் தேடிக் கொண்டிருந்த போது பாமாவின் செயற்பாடு நம்பிக்கை ஊட்டுவதாய் அமைந்தது.

“நான் குறூப்பை கொண்டு போறன்.”

அவள் எழுந்து சொன்னாள். இதுவரையும் பெரிய களங்களைக் கண்டவள் அல்ல அவள். ஆனால் அவளிடம் ஒரு வித்தியாச




மான திறமை இருக்கத்தான் செய்தது. அவளுக்குக் கொடுக்கப்பட்ட குழுவை திறமையாகச் செயற்படுத்திய விதம் எமக்கு நிறைவைத்தந்தது. அடிக்கடி படையினருக்குத் தலையிடி கொடுப்பதும் பாமாவின் வேலையாக இருந்தது. அந்தக் காலங்களில் பலாலியின் பனை வெளிகளை ஊடறுத்தபடி எதிரியின் தேடொளி இரவைப் பகலாக்கும். மிகமிகக் கிட்டவாக தனது ஒளியைப் பாய்ச்சியபடி இருக்கும்போதெல்லாம் பாமா அதற்கு குறி வைப்பாள் அவளது 'பிறண்' குறி தவறியதாக நாங்கள் கேள்விப்படவேயில்லை. பயிற்சி முகாமிலும் சரி... சண்டைகளிலும் சரி அவள் நன்றாக குறிபார்த்துச் சுடும் திறமை பெற்றவளாக இருந்தாள்.

அப்படி ஒரு இடத்தில் தேடொளி உடைய, மறு இடத்தில் எதிரி அதைப் பொருத்த மீண்டும் உடைய வைத்து, உண்மையில் அவர்களைச் சலிப்படையவே செய்துவிட்டாள். அந்த நீண்ட பனைகளில் நிலையெடுத்தபடி இராணுவக் காவலரண்களை நோக்கி அடிக்கடி அருள் 89 ஐ அடிப்பாள். அது ஒரு விளையாட்டுப் போல... ஆனால் குறி தப்பாத ஒன்றாக அவளுக்கு இருக்கும்.

இப்படி எத்தனை நிகழ்வுகள்! பாமாவின் துடிப்பான அந்த நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் பலாலியின் புழுதி படிந்த செம்பாட்டுமண் சொல்லும் கனத்த காற்று சொல்லும்.

பலாலிக்கு பிறகு பெரிய களமாக இவளுக்கு ஆனையிறவுக் களம் அமைந்தபோது, அதிலும் தன் திறமைகளை வெளிப்படுத்தத் தவறவில்லை. ஆ.க.வெ நடவடிக்கையில் மகளிர் படையணியின் பக்கம் மும்முரமான சண்டையில் இவள் நின்றாள். உக்கிரமான மோதல், மழை போல ரவைகள் காதை உரசுவதாக வரும் மயிரிழையில் தப்பித்த எறிகணை வீச்சுக்கள்... பாமாவின் குழுவிலும் அனேகம்பேர் காயம் பட்டுத்தான் போனார்கள். எதிரி பின்வாங்கும் வரை பாமா மட்டும் தனித்து நின்று அடிபட்டதை நினைக்கிறோம். கடைசியாக காலிலே பலத்த காயமடைந்த ஒரு போராளியை அந்தக் கும்மிருட்டு நேரத்திலே கண்டுபிடித்து பின்னுக்கு கொண்டு வந்து இவள் மூச்சுவிட்ட போது தனியொருத்தியாக நின்று தடயங்கள் எல்லாவற்றையும் பொறுக்கியபோது...

ஆனையிறவுச் சண்டையில் இவள் தலையில் காயப்பட்டாள். இவள் தப்பி வருவாள் என்பதில் எங்களுக்கு ஒரு துளியளவு நம்பிக்கையே இருந்தது. ஆனால் பாமாவின் திடமான உடல் அமைப்பும் உறுதியுமே அவளைத் தப்ப வைத்தது. மீண்டும் பழைய நிலைக்கு இயங்கவைத்தது.

நிறையக் களங்கண்ட ஒரு போராளியாக, ஒரு குறும்புக்காரியாக, எல்லோருக்குமே உதவுகின்ற இளகிய மனம் படைத்தவளாக நாம் அவளைக் கண்டோம்.

இப்படித்தான் ஒருநாள்...

அது லெப். கேணல் ராஜனின் வழிநடத்தலில் நடைபெற்றுக் கொண்டிருந்த அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி. அதில் இவள் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, இவளது முகாமுக்கு ஒரு சிறுமியும் சிறுவனும் சாப்பாடு கேட்டு வந்தனர். அப்போது அங்கு உணவேதும் இருக்கவில்லை. இதை அவதானித்த இவள், எல்லோரிடமும் இருக்கும் காசு எல்லாவற்யையும் சேர்க்க ஐம்பது ரூபா வந்தது. அதை அவளிடம் கொடுக்கச் சென்றபோது, அச்சிறுமியிடம்;

உங்களது பெயர் என்ன?

என்று கேட்க, அப்பிள்ளை வாய்திறக்க முடியாத நிலையில்



இருந்ததைக் கண்டு இவள்...

ஏன் என்று விசாரித்தாள். விமான குண்டு வீச்சின்போது சன்னமொன்று தாடைக்குள் தாக்கியதால் வாய்திறக்க முடியாது என்ற விபரத்தை அந்தச் சிறுமி சைகை மூலம் கூற, இவளது கண்கள் குளமாகின.

அந்தக் காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு, "இந்தச் சின்னப் பிள்ளை என்ன பாவம் செய்தது? இதுக்கு இவங்களிற்கு முறையான பாடம் படிப்பிக்கவேணும்" என்று சொல்லிய போது, இவளது குரல் தழுதழுத்தது. அடிக்கடி "இந்தக் கஸ்ரமெல்லாம் எங்களோட முடிஞ்சிடவேணும். எங்கட சின்னனுகள் அனுபவிக்க கூடாது. அதுகள் சந்தோசமாக தங்கட தாய், தகப்பனோட வாழனும்" என்று கூறி, அவள் கண்கள் கலங்கி தவித்ததை நினைக்கும் போது...

அன்று படைத்துறைக் கல்லூரியில், தொலைத்தொடர்பு பற்றிய வகுப்பு, புதிய வகைகள், புதிய தொழிற்பாடுபாடுகள் நுட்பமாக ஆராய்ந்து விளக்கப்பட்டது. இறுதியாக விரிவுரையாளர் "இந்த (CI 25) வோக்கி புதிசு. இதன் தொழிற்பாட்டை நான் உங்களுக்கு சொல்லித்தரமாட்டன். நீங்கள்தான் இதை ஆராய்ந்து கண்டு பிடிக்கவேணும். குறிப்பிட்ட காலம் தருவன்" என்று கூறி முடித்த போது பாமா அதோடு முழு மூச்சாய் அதனோடு ஒன்றி அதன் தொழிற்பாட்டை அறிவதில் நேரங்காலம் இல்லாது கண்ணாய் இருந்ததை இப்போது நினைத்தாலும்...

அந்த முயற்சியில் அவள் வெற்றி பெற்றாள். அதன் தொழிற்பாட்டை, முதலில் கண்டு பிடித்து விளங்கப்படுத்தினாள். அப்போது எல்லாப் போராளிகள் மத்தியிலும் இவளின் திறமை வெளிப்பட்டது. இவளின் விடாமுயற்சியை நாம் எங்களுக்குள் சொல்லிச் சொல்லி வியந்து போனோம்.

சதுரங்கம் விளையாடுவது இவளுக்கு பிடித்தமான ஒரு விளையாட்டு. நுட்பமாகவும் திறமையாகவும் அவன் விளையாடுவது யாவரையும் வியக்கவைக்கும். பார்ப்பவரைப் பார்த்துக் கொண்டு நிற்க வேண்டும் போல நினைக்கத் தூண்டும். அவளின் இராசாவும் இராணியும் தோற்றதாக வரலாறு இல்லை. அந்தளவுக்கு எதிரே விளையாடுபவரை விழுத்துவதில் குறியாக இருப்பாள். அவளின் இன்னொரு விருப்பமான விளையாட்டு கரப்பந்தாட்டம். மாலை நேரத்தில் அவள் விளையாட வந்துவிட்டாள் என்றால், விளையாட்டுத்திடல் கலகலத்துப் போகும். தள்ளி எட்டி ஓடி ஓடி அடிப்பது அவளுக்கொரு கலையாகத்தான் இருந்தது.

இவளது குறும்புகளுக்கும் குறைச்சலில்லை. நேரங்காலம் பாராமல், சுற்றி நிற்பவர்களை வயிறு குலுங்க சிரிக்கவைத்துவிட்டு நழுவிவிடுவாள்.

ஒரு தடவை இவளது தோழியும் ஒரு உந்துருளியில் இரவு ஒன்பது முப்பது மணியளவில், வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டு இருந்தனர். அவளது உந்துருளியில் வெளிச்சம் மிகவும் மங்கலானது. பாதை தெளிவாகத் தெரியவில்லை. புறாப்பொறுக்கியடியில் வந்துகொண்டிருந்தபோது ஒரு சரக்குந்துருளி மிகுதியான ஒளியைப் பாய்ச்சியபடி எதிர்ப்பக்கமிருந்து வந்துகொண்டிருந்தது. பாமா உடனடி

www.sangathamil.ca

யாகத் தனது வெளிச்சத்தை அணைத்துவிட்டு கையைமேல் நோக்கிக் காட்டினால். உடனே சரக்கு உந்துருளியின் ஓட்டுனர், உலங்குவானூர்த்தி வருவதாக எண்ணி, தனது வெளிச்சத்தை அணைத்துவிட்டு, ஓரமாக வாகனத்தை நிறுத்தவும், இவள் தனது உந்துருளியை வேகமாக ஓட்டிச்சென்று விட்டாள். இப்படி நான்கு, ஐந்து வாகனங்களை நிறுத்தி, அந்த இடைவெளியைப் பயன்படுத்தி தன் வாகனத்தை ஓட்டினாள். முனியப்பர் கோயிலடியில் செல்லும்போது ஒரு வாகனம் வர அதற்கும் அவள் மேல்நோக்கி கையைக் காட்டி நிறுத்திய பின்னர்தான் பார்த்தாள், அது எமது போராளிகளின் வாகனம். ஒரு நிமிடம் அதிர்ந்து போனாலும் உடனே விறுவிறு என்று உந்துருளியை அதிவேகமாக ஓட்டியபடி வந்து சேர்ந்து. சிரிசிரிஎன்று சிரித்த பாமா, இப்போதும் கண்ணுக்குள்ளேதான் நிற்கின்றாள்.

இவளுக்கு எதுவும் ஏறுமாறாகச் சொல்லி கோபப்பட வைப்பது எங்களுக்கு பெரிய விளையாட்டுப்பார்த்தாக இருக்கும். எதற்காவது இவளுக்கு கோபம் வந்தால் கடகடவென்று பேசிவிட்டு அடுத்த நிமிடம் மறந்து போய் நின்று சிரிப்பாள். பேசுவது முழுக்க அடுக்கு மொழியில் தான். கதைக்கும் போது வேகமாக கதைப்பதால் அவளது கதை மற்றவர்களுக்கு விளங்குவது கடினம். அதனால் அவளை 'நடுங்கல்' என்று கேளிசெய்வோம். இப்படிக்கேலி செய்தால் ஓடித்தூரத்தி அடித்துவிடுவாள்.

1992.03.01 இல் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி தன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டது. அன்று கடற்புலிகள் மகளிர் அணி தோற்றம் பெற்ற நாள். எங்கள் தலைவரின் கனவுகளுக்கு அபார நம்பிக்கை ஊட்டும்படியாக கடற்புலிகளின் வளர்ச்சியில் பாமா வகித்த பங்கு அளப்பரியது.

1992ம் ஆண்டின் பிற்பகுதியில் பாமா கடற்புலிகளின் அணியில் தன்னை இணைத்துக் கொண்டாள். அன்றிலிருந்து கடற்புலிகள் மகளிர் படையணியை வளர்ப்பதில் அவள் தீவிர அக்கறை செலுத்தினாள். சகபோராளிகளுக்கு அணிநடை பழக்குவதிலிருந்து முக்கியமான வகுப்புக்களை எடுப்பது வரை, எல்லாவற்றிலும் பங்கேற்றாள். தலைமையேற்று நடத்தினாள்.

கிளாலில் மக்கள் பாதுகாப்புக்காக எம்மால் நடத்தப்படும் பாதுகாப்புப் பணியில், இவளுடன் ஒரு குழு பங்களித்துக் கொண்டிருந்தது. கிளாலிக் கடலில் கொட்டும் பனியிலும், மழையிலும் ஊசியாகக் குத்தும் உப்புக் காற்றின் மத்தியிலும் அவள் விடிய விடிய காத்திருந்த காலங்களை நினைக்கின்றோம். தூரத்தே புள்ளியாய் விசைப்படகுகள் தெரியும். கடற்பரப்பில் மக்களின் படகுகள் ஆடிச் செல்லும். நெஞ்சு நீரற்று வரண்டு போய் கண்கள் பீதியாய் வழிய துயரப்படும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய கடற் சண்டைகளில் பாமா பங்கேற்றதை நினைக்கிறோம்.

'நீ வீட்டில் மிகுந்த பிடிவாதக்காரியாய் இருந்தாயாமே? நினைத்ததைச் செய்து முடித்து நினைத்ததை வாங்கித் தரும்படி அந்தப் பிடிவாதம்தான் கடலிலும் உன்னைச் சாதிக்க வைத்ததோ…

“வோட்டர் ஜெட்டை ஏன் நீங்கள் எடுக்கவில்லை?” என்று பாமாவின் மாமா கேட்ட பொழுது “மாமா அதைக் கொண்டு வந்துவிட்டுதான் உங்களுடன் கதைப்பேன்”. என்று கூறினாளாம். இதைக் கண்கலங்கியவாறு மாமா கூறினார். நினைத்ததைச் சாதித்து முடிக்கும் அந்த இயல்பு பாமாவுடன் கூடப்பிறந்தது. என்பதை நாம் பல நிகழ்வுகளில் கண்டோம்.

இத்தகைய நினைத்ததைச் சாதிக்கும் பண்புதான் சாவின் இறுதிக் கணங்களிலும் அவளை இறுகப் பற்றியிருந்து.

பூநகரி கூட்டுப்படைத்தளம் மீதான தாக்குதல் திட்டமிடப்பட்டது. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி முக்கிய பங்கேற்றது. இந்தச் சமரில் கடற்புலிகளின் பங்கு அளப்பரியது.






அந்த வகையில் நாகதேவன்துறையில் கடற்படைத்தளம் மீதான தாக்குதலுக்கு, ஒரு படகுப் பொறுப்பாளராக பாமா அனுப்பப்பட்டாள். சண்டைக்குத் தனது படகைத் தயார் படுத்திக் கொண்டிருந்த பாமா கரையில் நின்ற போராளிகளிடம் ஆளை ஆள் தெரியாத இருளில், நம்பிக்கை தொனிக்க, “இந்தச் சண்டையிலே நாங்கள் வோட்டர் ஜெட் ஒண்டைக் கொண்டு வருவோம்” என்று சொல்லிவிட்டுப் போனாள். சொன்னபடி நாகதேவன் படைத்தளத்தை தகர்த்துவிட்டு ஒரு நீருந்து விசைப்படகோடு முகமெல்லாம் சிரிப்பாக வெற்றிப் பூரிப்போடு கரைக்கு வந்தாள்.

அதிகாலை திரும்பவும் அவளை வருமாறு தொலைத்தொடர்பு கருவி கூப்பிட்டது. எல்லா ஆயுதங்களுடனும் அவளது படகு ஒரு குருவியைப் போல புறப்பட்டுப் புள்ளியாய்ப் போனது. ஏதோ ஒன்று அவளிடம் வித்தியாசமாகத் தென்பட்டது. வழமைக்கு மாறாக ஏதையோ கூற நினைப்பது போல அவளது கையசைப்பு அந்த இருளில் மங்கலாகத் தெரிந்தது. காற்றைக் கிழித்தபடி ஓயாத ரவைகள். காதை உரசுவதான அவற்றின் சத்தங்கள். அவைகளின் மத்தியில் அவளது படகு தூரத்தே மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்தோம். கடலலைகள் ஆர்த்தெழுந்து படகை மறைத்தன. நிலவை விழுங்கிய வானத்தில் ஒளிப்பொட்டாய் விளங்கிய நட்சத்திரங்கள். வானம் அமைதியாகத்தான் இருந்தது. கனதியான குண்டுச் சத்தங்கள் கண்ணிமைக்கும் இடைவெளியில் அதற்கும் இடைவிடாத நேர இடைவெளிகளில் ஓசைகள் கேட்டு கொண்டே இருந்தன.

“பாமா… பாமா வோக்கி கூப்பிட்டது. விரைவாக தொடர் எடுக்க முயன்று தோற்றுப் போய் …

ஒரு ரவை அவளது காலை ஆழமாக பிய்த்துச் சென்றது. பீறிட்ட இரத்தக்குளியலில் பாமா வீழ்ந்த போது…

மீண்டும் மங்கலான குரலில் அவள் கட்டளை பிறப்பித்துக் கொண்டுதான் இருந்தாள். மெல்ல மெல்ல குரல் மங்கி, துடிப்படங்கி…

“காலிலைதான் காயம் என்று… பிரச்சனை இல்லை என்ற எங்கள் எல்லலோரினதும் நம்பிக்கைகளை பொய்யாக்கிக் கொண்டு மெல்ல மௌனித்துப் போனாள். அந்தப் பிடிவாதக்காரி. உப்புக் கரிக்கும் கடல் நீரேரியில் கலந்து போனாள். கிளாலிக் கடல் உதிரத்தில் தோய்ந்தபடி மீண்டும் மீண்டும் பொங்கியெழுந்தது.

ஆயிரம் ஆயிரம் மாவீரர்களோடு எங்கள் பாமா, விடுதலையின் பெருநெருப்பை சுவாசித்தபடி… வெற்றியின் வேராய் உறங்கட்டும் அமைதியாய்…

சுதாமதி - களத்தில் இதழ் (16.09.1994).




# ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 01, 2024

ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தில் அமையத்தின் தலைவர் கு. செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்திற்கு மலர் மாலை அணியப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலை கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும், சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும், யாழ். மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ஆம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை , அவரது வீட்டிற்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுதாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர்கள் முன்னிலையில் சுட்டுப்படுகொலை செய்தனர்.




# இனப்பிரச்சினைக்கான தீர்வாக சுயாட்சி மிக்க பிரதேசங்கள்; இனங்களிற்கான சுயாட்சி!

### மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந்

ஆகத்து 01, 2024

சுயாட்சி மிக்க பிரதேசங்கள், இனங்களிற்கான சுயாட்சி உரிமை அவர்களிற்கு மீளப்பெறமுடியாத அதிகாரங்கள் குறித்து அரகலய போராட்டக்காரர்களின் மக்கள் போராட்ட முன்னணி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற கட்சியின மக்கள் போராட்ட முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வில் கட்சியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் இதனை தெரிவித்தார்.

எங்களை பொறுத்தவரை மக்கள் என்பது ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து நிற்கின்றன அதிகார வர்க்கமோ அல்லது இந்த கொடுர ஆட்சியிலே தங்களிற்குரிய வருமானத்தை ஈட்டும் செல்வந்தர்களே முதலாளிகளோ இல்லை என மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவித்துள்ளார்

கொழும்பில் இன்று இடம்பெற்ற கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் நிகழ்வில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

நாங்கள் ஒரு இருண்ட யுகத்திலே மிக மோசமான சூழ்நிலையிலே மிக மோசமான ஆட்சியாளர்களின் கரங்களிலே எங்களின் அன்றாட வாழ்வை நகர்த்திக்கொண்டிருக்கின்றோம்,

இந்த சந்தர்ப்பத்திலே, மீண்டும் மீண்டும் இந்த அதிகார வர்க்கம் எங்களை மிக மோசமான ஆட்சிக்குமுறைக்குள் வைத்துக் கொண்டு, செல்வந்தர்களிற்காகவும் பெருநிறுவனங்களின் முதலாளிமார்களிற்காகவும் ஒரு அரசாங்கத்தை மீண்டுமொரு முறை அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இவர்கள் அடிக்கடி மக்கள் என்ற வார்த்தை பிரயோகத்தினை பயன்படுத்தி வருகின்றனர் உண்மையில் இவர்கள் மக்கள் என்ற வார்த்தை பிரயோகம் எதனை சொல்கின்றது என்பதை இவர்கள் அறிவார்களா?

மக்களின் கொள்கை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்துடன் நாங்கள் இன்று உங்கள் அனைவரையும் சந்திக்கின்றோம்.

எங்களை பொறுத்தவரை மக்கள் என்பது ரணில் விக்கிரமசிங்கவுடன் கைகோர்த்து நிற்கின்றன அதிகார வர்க்கமோ அல்லது இந்த கொடுர ஆட்சியிலே தங்களிற்குரிய வருமானத்தை செல்வந்தர்களே முதலாளிகளோ இல்லை.

இந்த நாட்டில் அன்றாடம் வாழ்வதற்கு தவித்துக் கொண்டிருக்கும் விளிம்புநிலை மக்கள், அன்றாட வாழ்க்கையை முன்னநகர்த்துவதற்கு கஸ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்கள். விவசாயிகள் மீன்பிடித்தொழிலாளர்கள் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் மலையக தமிழ் மக்கள் முஸ்லீம்கள், இவர்களை தான் நாங்கள் பெரும்பாலும் மக்கள் என்ற அந்த வரையறைக்குள் கொண்டுவருகின்றோம்.

எங்களை பொறுத்தவரை யாரின் பக்கம் நாங்கள் நிற்க வேண்டும் என்ற தெளிவு எங்களிற்குள்ளது.

எந்தவொரு விடயத்தை எடுத்தாலும் பலவீனமானவர்களின் பக்கம் நின்று பேசுவதுதான் அரசியலில் நியாயமான விடயம் என்பதை நாங்கள் அறிவோம்.

எனவே தான் எங்களின் கொள்கை பிரகடனம் பலவீனமானவர்களை பலப்படுத்துவதற்கான பல அடிப்படைகளை கொண்டிருக்கின்றது.

இன்று நாங்கள் வெளியிடவுள்ள இந்த கொள்கை பிரகடனம் பல கேள்விகளிற்கு பதிலாக அமையும்.

ஏன் நாங்கள் அரசியலுக்குவரவேண்டிய தேவையிருந்தது ஏன் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யவேண்டிய தேவையிருந்தது என்பதை எங்கள் கொள்கை விஞ்ஞாபனம் தெரிவிக்கும்.

எங்களின் கொள்கை ஒன்றே எங்களின் நம்பிக்கை.

ஏனைய வேட்பாளர்களிடம் இல்லாத பல விடயங்கள், மக்கள் என்ற ஒரு சக்தியை நம்பி மக்களின் கரங்களில்தான் இறைமை உள்ளது என்பதை நம்பி நாங்கள் இந்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குகின்றோம்.

நாங்கள் பணக்காரர்களோ அதிகார வர்க்கத்தினரோ முதலாளிகளோ இல்லை.

நாங்கள் பணக்காரர்களோ செல்வந்தர்களோ இல்லை, முதலாளிகளோ அதிகாரவர்க்கத்தினரோ இல்லை, நாங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் ஒடுக்கப்பட்ட மக்களின் அடித்தட்டு மக்களின் பிரதிநிதியாகத்தான் இந்த கொள்கை பிரகடனத்தை முன்வைக்கின்றோம்.



ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏற்கனவே இந்த தேசத்திலிருந்து ஜனாதிபதிகளாக வந்தவர்கள், குறிப்பாக இந்த தேசத்தில் இருக்ககூடிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பல்வேறு விடயங்களை பல பொய்களை கூறியிருக்கின்றார்கள்.

ஆனால் எவருமே இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த தேசிய இனப்பிரச்சினைக்கு, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை சுட்டிக்காட்ட தவறியுள்ளார்கள்.

முதன்முதலாக நாங்கள் இந்த இனவாதிகளின் முகத்திரையை கிழித்தெறிந்து உண்மையான பிரச்சினையை அடையாளம் கண்டு, இன்று எங்களின் தேர்தல் விளக்கவுரையில் கொள்கை பிரகடனத்தில் மிக அழகாக, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை மிகவும் தெட்டத்தெளிவாக விளக்கியிருக்கின்றோம்.

குறிப்பாக சுயாட்சி மிக்க பிரதேசங்கள், இனங்களிற்கான சுயாட்சி உரிமை அவர்களிற்கு மீளப்பெறமுடியாத அதிகாரங்கள், வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மிக நீண்டகாலமாக எதிர் நோக்குகின்ற காணிப்பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களமயப்படுத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை அரசியல்கைதிகளின் பிரச்சினை, போன்றவற்றை தெட்டத்தெளிவாக அடையாளம் கண்டுள்ளோம்.

மக்களுடைய பிரச்சினை அவர்களின் தேவை அடிநாதம் என்னவென்பது எங்களிற்கு தெரியும்.

நாங்கள் மக்களிடமிருந்து வேறுபட்ட ஒரு குழுவாக அதிகாரம் மிக்க ஒரு குழுவாக நிற்பதற்கு ஒருபோதும் விரும்பவில்லை நாங்கள் மக்களோடு மக்களாக நிற்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களது போராட்டத்தை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்த பொலிஸ் புலனாய்வாளர்!

ஆகத்து 01, 2024

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் புதன்கிழமை (31) காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுத்த சிவில் உடை தரித்த பொலிஸ் புலனாய்வாளரை அவ்விடத்திலிருந்து துரத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.





யுத்தம் நிறைவடைந்த நாள்முதல் தமது உறவுகளுக்கான நீதி கோரி போராடிவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் போராட்டங்களை இராணுவத்தினர், பொலிஸார், சிவில் உடை தரித்த புலனாய்வாளர்கள் போன்றோர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், இன்றைய தினம் போராட்டத்தில் பங்கேற்றவர்களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் முயற்சியில் ஈடுபட்ட சிவில் உடை தரித்த பொலிஸ் புலனாய்வாளரை துரத்திய போது மீண்டும் வீதியோரத்தில் நின்று புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் விதமாக செய்யப்பட்டிருந்தார்.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் கனிய மணல் அகழ்வாய்விற்கு மக்கள் எதிர்ப்பு – ஆய்வுப் பணி கைவிடப்பட்டுள்ளது!

ஆகத்து 01, 2024

கனியவள மணல் அகழ்விற்கான முன்னாயத்த ஆய்வுப் பணி மேற்கொள்வதற்காக கனிய மணல் திணைக்களத்தினருடன் இணைந்த சில திணைக்களங்களின் நடவடிக்கைக்கு முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து ஆய்வுப் பணி கைவிடப்பட்டு அவ்விடத்திலிருந்து சென்றிருந்தனர்.

மீண்டும் பிறிதொரு இடத்தில் குறித்த திணைக்களம் உள்ளிட்ட குழுவினர் கனிய மணல் ஆய்வில் ஈடுபட சென்றபோது அங்கும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட மக்கள் குழுவினர் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, திணைக்களத்தினருடன் கடுமையான வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றதையடுத்தும் குறித்த ஆய்வு நடவடிக்கையும் கைவிடப்பட்டிருந்ததுடன் தாம் அவ்விடத்திலிருந்து செல்வதாக கூறி குறித்த ஆய்வு திணைக்களத்தினர் சென்றுள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கும் கனிய வள மணலை அகழ்வதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று (31.07.2024) முல்லைத்தீவு மாவட்ட. செயலகத்தில் இடம்பெற்றதனை தொடர்ந்து இரகசியமான முறையில் முல்லைத்தீவு அளம்பில் கடற்கரையில் இருந்து தீர்த்த கரைவரை ஆய்வு பணியினை மேற்கொள்ள சென்றிருந்தார்கள்.

குறித்த ஆய்வு பரிசோதனையை மேற்கொள்வதற்காக கடலோர பாதுகாப்பு திணைக்களம், கனிய மணல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் , சுற்றுச்சூழல் திணைக்களம், நீர் வள முகாமைத்துவத்தினர், புவிசரிதவியல் திணைக்களம் இவர்களுடன் இணைந்து கரைதுரைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தர் மற்றும் அப்பகுதி கிராம சேவையாளர், ஆகியோர் இணைந்து ஆய்வு நடவடிக்கையை மேற்கொள்வதற்காக குறித்த இடத்திற்கு விஜயம் செய்திருந்தமை குறிப்பிடதக்கது.













# வைத்தியர் அருச்சுனா மன்னாரில் கைது!

ஆகத்து 03, 2024




மன்னார் பொது வைத்தியசாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை உள்ளிட்ட ஏழு குற்றச்சாட்டுகளின் கீழ் வைத்தியர் இராமநாதன் அருச்சுனா கைது செய்யப்பட்டு எதிர்வரும் 7ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்ர.

மன்னார் பொது வைத்தியசாலைக்குள் நேற்றைய நாள் வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்து வீடியோ எடுத்தமை, வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியர், பணியாளர்களை அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் மன்னார் பொது வைத்தியசாலை நிர்வாகத்தினால், மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்ட வைத்தியர் அர்ச்சுனா பொலிசாரினால் விசாரணைக் குட்படுத்தப்பட்டு, வாக்குமூலத்தினை பொலிஸார் பெற்றுக் கொண்டனர்

அதனைத்தொடர்நது வைத்தியரை பொலிசார் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# மூதூரில் 17 பேர் சிங்கள படைகளால் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 18 ஆண்டுகள்!

ஆகத்து 04, 2024

மூதூரில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டில் இயங்கும் தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் (ACF) என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் உயிரிழந்து இன்றுடன் (04) 18 வருடங்களாகின்றன.

இந்நிலையில், தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

2006 யூலை மாதம் 31ஆம் திகதி வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த இப்பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் 2006 ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 உள்ளூர் பணியாளர்கள் உயிரிழந்தனர்.



இப்படுகொலையில் முத்துலிங்கம் நர்மதன், சக்திவேல் கோணேஸ்வரன், ரிச்சட் அருள்ராஜ், சிங்கராஜா பிறீமஸ், ஆனந்தராஜா மோகனதாஸ் ரவிச்சந்திரன், ரிஷிகேசன், கனகரத்தினம் கோவர்த்தனி, கணேஷ் கவிதா, செல்லையா கணேஷ் சிவப்பிரகாசம் றொமிலா, வயிரமுத்து கோகிலவதனி, அம்பிகாவதி ஜெயசீலன், கணேஷ் ஸ்ரீதரன், துரைராஜா கேதீஸ்வரன், யோகராஜா கோடீஸ்வரன், முரளீதரன் தர்மரட்ணம், ஏ.எல்.மொகமட் ஜப்பா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மூதூர் பொது வைத்தியசாலைக்கு அருகில் இயங்கிவந்த அக்ஷன் பாம் எனும் சர்வதேச தொண்டர் நிறுவனத்தில் 17 பணியாளர்களும் கடமையாற்றிக் கொண்டிருந்த போது, சீருடை அணிந்து ஆயுதம் தரித்தோர் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து, பணியாளர்களை நில த்தில் குப்புறப்படுக்கச் செய்து, தலையில் சுட்டு படுகொலை செய்ததாக அன்றைய செய்திகளில் குறிப்பிடப்பட்டது.



# 1989 ஆண்டு இந்திய இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட வல்வைப்படுகொலையின் 35 ஆம் ஆண்டு நினைவேந்தல்!




# அழிவின் விளிம்பில் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய்; பணிப்பாளரின் ஆசியுடன் சட்டவிரோத மணல் அகழ்வு!

**பூநகரி பிரதேச மக்கள்**

ஆகத்து 06, 2024




கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளை இலக்கு வைத்து மீண்டும் பாரிய மணல் கொள்ளை நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றையதினம் செவ்வாய்க் கிழமை ஊடகவியலாளர்களை சந்தித்த போதே அவ்வாறு தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் போராட்ட அமைப்புக்களது போராட்டத்தையடுத்து கடந்த நான்கு வருடங்களிற்கு மேலாக நீதிமன்றினால் தடை விதிக்கப்பட்டிருந்த மணல் அகழ்வு தற்போது கனியவள திணைக்கள அதிகாரிகளது பங்கெடுப்புடன் பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாள் தோறும் நூற்றுக்கணக்கிலான டிப்பர்கள் கனரக வாகனங்கள் மூலம் மணல் ஏற்றியவாறு வெளியேறிக்கொண்டிருக்கின்றன.

அதனால் கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் ஆகிய இரு கிராமங்களும் அடுத்து வரும் ஒரிரு வருடங்களில் இல்லாது போய்விடுமென அஞ்சுகின்றோம்.

ஏற்கனவே போதிய போக்குவரத்து, வீதி வசதிகளற்ற நிலையில் கைவிடப்பட்டுள்ள எமது மக்கள் தற்போதை கனரக வாகன பயன்பாட்டால் முற்றாக பரமன்கிராய் மற்றும் கௌதாரிமுனை பகுதிகளிலிருந்து வெளியிடங்களிற்கான போக்குவரத்து முடக்கத்திற்குள்ளாகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே கௌதாரிமுனை வீதியை வழிமறித்து போக்குவரத்திற்கு தடையேற்படுத்தியுள்ள மணலை அகற்றி போக்குவரத்தை சீர் செய்ய கனியவளத்திணைக்களம் அனுமதிக்காமையால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதனை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கனிய வளத் திணைக்கள யாழ்ப்பாண அலுவலக பணிப்பாளர் தனது பெயர் பலகையற்ற வாகனத்தில் இரவு பகலாக அப்பகுதிகளில் நின்று மணல் அகழ்வினை முன்னெடுக்கும் அதிசயம் இங்கு மட்டுமே நடக்கின்றது.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் மணல் கொள்ளையை தலைமை தாங்கிய நபரே தற்போது வடக்கிற்கு பணிப்பாளராக அனுப்பட்டுள்ளதால் பரமன்கிராய் மற்றும் கௌதாரிமுனை கிராமங்கள் இல்லாதொழிந்து போகும் அபாயத்தை எதிர் கொண்டுள்ளது.

இலங்கை கனிய வளத்திணைக்களத்தினால் பூநகரியின் பொன்னாவெளி பகுதியில் முன்னெடுக்க அனுமதிக்கப்பட்ட முருகைகல் அகழ்விற்கு எதிரான மக்கள் போராட்டம் அனைவரும் அறிந்ததே.

இந்நிலையில் தற்போது கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் பாரிய மணல் அகழ்விற்கென வழங்கப்பட்டுள்ள அனுமதிகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு மக்களது கிராமங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

தவறுமிடத்து பூநகரி பொன்னாவெளியில் இதே கனியவளத் திணைக்கள பங்கெடுப்புடன் முன்னெடுக்கப்படவிருந்த பாரிய முருகைக்கல் அகழ்வு எவ்வாறு தடுக்கப்பட்டதோ அதே போன்று மக்கள் வீதிகளில் களமிறங்கி பாரிய போராட்டத்தின் மூலம் அரச அலுவலகங்களை முடக்கி போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதனை வெளிப்படுத்தி நிற்கின்றோம்.

அத்துடன் ஒட்டுமொத்த மக்கள் போராட்ட குழு அழைப்பின் பேரில் எதிர்வரும் 9ம் திகதியினுள் வழங்கப்பட்ட பெமிட் அனுமதிகள் இரத்துச்செய்யப்படாவிட்டால் கிளிநொச்சி மாவட்டம் தழுவிய போராட்ட நடவடிக்கைகளிற்கு எமது உறவுகளிற்கு பகிரங்க அழைப்புவிடுக்கின்றோம்.

ஏற்கனவே பொன்னவெளியில் இணைந்து போராடிய உறவுகள் எம்முடன் இணைந்துகொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

01.ஜனாதிபதி தேர்தலை ஒட்டு மொத்த மக்களும் புறக்கணிப்போம்.

02.கௌதாரிமுனை மற்றும் பரமன்கிராய் பகுதிகளில் திட்டமிடப்பட்டுள்ள அதானி குழுமத்தின் காற்றாலை பணிகளை முடக்க போராட்டங்களை ஆரம்பிப்போம்.

03.மக்கள் பயணிக்க கௌதாரிமுனை வீதியை திருத்தி தர இயலாத வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மணல் எடுத்துச்செல்ல வீதியை அனுமதித்தமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

03.கனிய வளத்திணைக்கள வடமாகாண பணிப்பாளர் உடனடியாக இடமாற்றம் செய்யப்படாதவிடத்து மாவட்ட செயலகம் மற்றும் பூநகரி பிரதேசசெயலக அலுவலக முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுப்போம். அவரது யாழ்ப்பாணத்திலுள்ள ஆடம்பர பங்களா முன்னதாகவும் முற்றுகை போராட்டத்தை முன்னெடுப்போம்.

ஆதானி காற்றாலை மூலம் எமது பகுதிக்கு பாலும் தேனும் ஓடப்போவதாக சொல்லிக்கொண்டு எமது கிராமங்களையே இல்லாதொழிக்கும் மண் மாபியாக்களின் பின்னணியிலுள்ள அரசியல் தரப்பினையும் நாம் அறிந்துள்ளோம்.

அத்தகைய தரப்பினை எமது போராட்டத்தின் மூலம் விரைவில் அம்பலப்படுத்துவோமென்பதையும் அறியத்தருகின்றோம் என தெரிவித்தனர்

# ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்க வேண்டும்; யாழில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி துண்டுபிரசுரம்!

ஆகத்து 06, 2024

ஜனாதிபதி தேர்தலை புறக்கணிக்ககோரி துண்டு பிரசுரம் வழங்கும் நிகழ்வுவொன்று யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (06) முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வாராஜா கஜேந்திரன் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி புறநகர் பகுதிகள் ஆகியவற்றில் பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரத்தினை வழங்கி ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு கூறினர்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் நிறுத்துவதோ அல்லது பெரும்பான்மை இனத்தவர் ஒருவரை தெரிவு செய்வதில் எவ்வித பயனும், இல்லை என தெரிவித்த செல்வராஜா கஜேந்திரன் ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பது தமிழர்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு எனவும் இதன் போது சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் நீதிமன்றத்தில் பிணையில் மருத்துவர் அர்ச்சுனா விடுதலை!

ஆகத்து 07, 2024

மன்னார் நீதிமன்றத்தினால் புதன்கிழமை (7) நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட வைத்தியர் அர்ச்சுனாவிற்கு மன்னார் மாவட்ட மக்கள் அமோக வரவேற்பை வழங்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை(2) இரவு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையினுள் அத்துமீறி நுழைந்து கடமைக்கு இடையூறை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்தியசாலை தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வைத்தியர் அர்ச்சுனா மன்னார் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட வைத்தியரை சனிக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போது அவரை இன்றைய தினம் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில் இன்றைய தினம்(7) குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது வைத்தியர் அர்ச்சுனா மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

வைத்தியர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்டன் புனிதநாயகம் தலைமையிலான சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

மன்னார் நீதிவான் நிபந்தனையின் அடிப்படையில் தலா 50,000 ரூபாய் இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

இந்த நிலையில் மன்றிலிருந்து வைத்தியர் வெளியேறிய போது மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன் மக்கள் ஒன்று கூடி வரவேற்றனர்.

பின்னர் மன்னார் மாவட்ட மக்கள் வைத்தியரை மன்னார் பொது விளையாட்டு மைதான பகுதிக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்து தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவமானது கடந்த 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் பட்டப்படிப்பை நிறைவு செய்த



மரியராஜ் சிந்துஜா வயது (27) எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியிலிருந்தவர்களின் அசமந்த போக்கே காரணம் எனக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே வைத்தியர் அர்ச்சுனா மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற நிலையில் அங்கு கடமைக்கு இடையூறை ஏற்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இருநாட்டு அரசாங்கங்களும் மீனவர்களும் இணங்கிய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துங்கள்!

## அகில இலங்கை மீனவ மக்கள் தொழில் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா

ஆகத்து 07, 2024

இரு நாட்டு வெளிவிவகார அமைச்சுகளும் மீனவர்களும் இணங்கிய ஒப்பந்ததை நடைமுறைபடுத்துங்கள் அதுமட்டுமன்றி இந்திய மீனவர்கள் வடபகுதிக்கு நேரில் வந்து எமது வாழ்கை முறைகள் பற்றி கலந்துரையாடுவதற்கு விரைவான ஏற்பாடுகளை செய்யுமாறு யாழ்.மாவட்ட கடற்மொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் முன்னாள் தலைவரும் அகில இலங்கை மீனவ மக்கள் தொழில் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தொரிவித்தார்.

இலங்கை இந்திய பிரதிநிதிகள் இடையே சந்திப்பை ஏற்படுத்தி மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரதீர்வு காணப்படும் என இந்திய வெளியுறவுதுறை அமைச்சர் என்.ஜெய்சங்கர் உறுயளித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் முறைகளால் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கபடுவது மட்டுமன்றி ஒட்டுமொத்த வடக்கிற்கான வாழ்வாதாரம் பொருளாதரம் பாதிக்கப்படுகின்றது கடற்தொழிலை கைவிட்டு வேறு தொழிலுக்கு செல்லவேண்டிய சூழலே தோன்றியுள்ளது.

இந்திய மீனவர்களது அத்து மீறல்களை நிறுத்தக்கோரி போராட்டங்களை கோரிக்கைகள் என் பலவிதமான போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டோம் பல கட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 2016 ஆம் ஆண்டு இருதரப்பு போச்சுவார்த்தையில் பல இணக்கம் காணப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனை நடைமுறைப்படுத்தினாலே தீர்வினை ஏட்டக்கூடியதாக இருக்கும் 2016 ஆம் ஆண்டில் எட்டப்பட்ட தீர்மானங்களில் குறிப்பாக இழுவைமடி தொழில் முறைக்கான மாற்றத்தினை துரிதமாக மேற்கொள்ளுதல், ரோந்து நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்புக்கான சாத்தியங்களை ஆராய்தல், கைதான மீனவர்கள் தொடர்பான சட்ட நடவடிக்கைகளை கடினமாக்குதல், கைதான மீன்பிடி படகுகளை விடுவிக்கும் பிரச்சினைகள் குறித்து ஆழமாக அவதானம் செலுத்துதல் போன்றன இணக்கம் காணப்பட்டது.

இவற்றை நடைமுறைபடுத்தினாலே மீனவர்கள் பிரச்




சினைகளை குறைத்துகொள்ள முடியும். இது மட்டுமன்றி தமிழ் நாட்டு மீனவர்கள் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்து எமது மீனவர்களது வாழ்வாதாரங்களை அறிவதற்கு கலந்துரையாடலை மேற்கொள்வதன் மூலமும் இந்த பிரச்சினைகளை அவர்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் இது எவ்வாறு இருப்பினும் வெகு விரைவில் ஒரு தீர்வினைக் கண்டு வடகிழக்கு மீனவர்களின் பிரச்னைக்கு தீர்வினை கண்டுக் கொள்ள இந்தியா உதவி செய்யவேண்டும் என்றார்

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# தமிழ் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா அரியநேந்திரன்!

ஆகத்து 08, 2024



தமிழ் பொது வேட்பாளராக இலங்கைத்தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேந்திரன், அறிவிக்கப்பட்டுள்ளார்.

சிவில் அமைப்புகளின் ஒருங்கிணைவுடன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச்சபையின் ஏழு பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகள் ஏழினது பிரதிநிதிகளும் கூட்டிணைந்து தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியிருந்தனர்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் வியாழக் கிழமை கூடி தமிழ் பொது வேட்பாளரை அறிவித்துள்ளனர்.

அதேவேளை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோரது பெயர்களும் இறுதிப் பட்டியலில் இருந்ததாக தெரிவிக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கேரள வயநாடு கிராமத்தை போன்று பொன்னாவெளி மற்றும் கவுதாரிமுனை கிராமம் அழிவடையும்!

## பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்

ஆகத்து 08, 2024

கேரள மாநிலத்திலுள்ள வயநாடு கிராமம் அழிவடைந்ததை போன்று இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொன்னாவெளி, கவுதாரிமுனை கிராமமும் அழிவடைந்து, இலங்கையின் வரைபடத்தில் இருந்து இல்லாமல் போகும் அபாயம் காணப்படுகிறது. பேரழிவை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (07) இடம்பெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்த வயநாடு தற்போது காணாமல் போயுள்ளது. 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களை காணவில்லை. ஒரே இரவில் நடந்த அனர்த்தத்தில் ஒரு ஊரே காணாமல் போயுள்ளது. ஊரை காணவில்லை, இங்கிருந்த மக்களை காணவில்லை என கதறி அழுதார்கள், இணையத்தளங்களில் பார்த்தேன். மனிதனின் கண்டுபிடிப்புகள் இங்கே தோற்றுப் போயுள்ளன.

இயற்கை பேரழிவுக்கு முன்னால் மனிதன் மண்டியிட்டு கிடக்கின்றான் என்பதையே இந்த சம்பவம் எமக்கு பாடமாக காட்டி யுள்ளது. சாதி மதம் இன்றி, ஊர் கடந்து எந்த வேறுபாடுகளும் இன்றி உதவுகின்ற மக்களை பார்க்கின்றோம். முண்டக்கை, சூரல்மலை உள்ளிட்ட சில கிராமங்களையும் காணவில்லை. தாயை காணவில்லை, தந்தையை காணவில்லை என்று பிள்ளைகள் கதறுவதை பார்க்கும் போது மனம் வெதும்பியது.



இது இயற்கை பேரிடராகும். இந்த நிலைமைகளை பார்க்கும் போது 2008 மற்றும் 2009 காலப் பகுதியில் எமது மக்கள் முள்ளிவாய்க் காலுக்கு சென்ற போது நேர்ந்தவையே விடயங்களே எனக்கு நினைவுக்கு வந்தது. வயநாடு நிலைமை இயற்கை யானது. ஆனால் இங்கே நடந்தது செயற்கையானது.

மிகப்பெரிய மனித பேரவலத்தை சந்தித்தவர்களாக ஈழத் தமிழர்கள் உள்ளனர். தொடர்ந்தும் இந்த நாட்டில் நடக்கும் விடயங்களை கூறாமல் இருக்க முடியாது. தீர்வு காண்போம், ஒற்றுமையாக இருப்போம் என்றெல்லாம் வெறும் வாய் பேச்சாகவே கூறுகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பொன்னாவெலியில் உள்ள முருங்கை கற்களை தோண்டியெடுக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. தமிழ் அமைச்சர் ஒருவர் அந்தக் கற்களை தோண்டியெடுப்பதில் கவனமாக இருக்கின்றார். இயற்கையின் அனர்த்தம் ஆரம்பிக்கின்றது.

கேரளா வயநாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தத்தை செயற்கையாக செய்வதற்கு இந்த அமைச்சரும் அரசாங்கமும் பொன்னாவெளி கிராமத்தில் காத்திருக்கின்றனர். அதனை அண்மித்த கிராமங்களில் உள்ள மக்கள் அந்த முருங்கைக் கற்களை பாதுகாப்பதற்காக போராடுகின்றனர். ஒரு வருடம் கடந்தும் அது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வில்லை.

அதேவேளை கவுதாரிமுனையில் மக்கள் 6 வருடங்களுக்கு முன்னர் மக்கள் போராடினர். மண் மேடுகளை அள்ள வேண்டாம் என்றும் கோரினர். அந்த பிரதேசத்தை வரைபடத்தில் இருந்தே இல்லாமல் போகுமளவுக்கு நீதித்துறையே அனுமதி வழங்கியுள்ளதென்றால் நீதி தராசு எங்குள்ளது என்பதை புரிந்துகொள்ளலாம். இயற்கையை காப்பாற்ற மக்கள் போராடினர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னாவெளி கிராமமும் மற்றும் கவுதாரிமுனை கிராமமும் இலங்கையின் வரைபடத்தில் இருந்தே காணாமல் போகப் போகின்றது. இந்த இரண்டு கிராமங்களையும் காப்பாற்ற வேண்டும். அங்குள்ள இயற்கைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கேயும் ஒரு வயநாடு உருவாகி விடக்கூடாது என்று உயரிய சபையில் வலியுறுத்துகின்றேன் என்றார்.


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவு!

ஆகத்து 08, 2024

வியாழக்கிழமை (08) இன்று, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் கொக்குத்தொடுவாய் புதைகுழி வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம் (ஓ.எம்.பி ) சார்பில் அந்த அலுவலகத்தின் சட்டத்தரணிகளும், சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா மற்றும் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணிகளான இரட்ணவேல் மற்றும் நிரஞ்சன் ஆகியோரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவினர்களும் மன்றில் ஆஜராகி இருந்தார்கள்.

ஏற்கனவே நீதிமன்றால் இந்த புதைகுழி அகழ்வு தொடர்பில் அறிக்கைகள் சமர்ப்பிக்க கோரியிருந்தமை தொடர்பில் கொக்குத்தொடுவாய் கிராம அலுவலரால் இன்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த அகழ்வில் ஈடுபட்டிருந்த தொல்லியல் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் இறுதி அறிக்கை ஒரு மாத காலப்பகுதிக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மனித புதைகுழி அகழ்வு பணிகளின் போது எடுக்கப்பட்ட இருபத்தைந்து வகையான எலும்புக்கூட்டு தொகுதிகள் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ பீட கட்டடத்தில் உள்ள சட்ட மருத்துவ பிரிவுக்கு இடமாற்றப்பட்டு கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் அது சம்பந்தமான பகுப்பாய்வு பணிகள் இரு நாட்களாக இடம்பெற்றன. இப்பாகுப்பாய்வு பணிகளானது எதிர்வரும் வாரங்களில் தொடர்ந்தும் நடைபெறவுள்ளது என இந்த புதைகுழி அகழ்வில் தலைமை தாங்கிய சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா நீதிமன்றுக்கு தெரியப்படுத்தினார்.



அத்தோடு காணாமல் போனோர் அலுவலகம் புதைகுழி அகழ்வு இடம்பெற்ற இடத்தை பூரணமாக பொதுமக்களிடம் கையளிப்பது சம்பந்தமாக அடுத்த வழக்கு தவணையில் முடிவுக்கு வருவதாக நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியிருந்தார்கள்.

அத்தோடு காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் சார்பில் சில விண்ணப்பங்களை அவர்களது சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் முன்வைத்திருந்தார்கள்.

அதாவது தடயவியல் பொலிசாரினால் எடுக்கப்பட்ட குறிப்புகள் நீதிமன்றத்துக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகள் மற்றும் சான்றுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அத்தோடு இந்த அகழ்வில் பொழுது பல இலக்கத்தகடுகள், இலக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதை துலாம்பரமாக பத்திரிகைகளில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற பதிவாளரினால் பிரசுரிக்கப்படவேண்டும் என்றும் அந்த இலக்கங்கள் அதனோடு இணைந்த போராளிகளுக்கும் உறவினர்களுக்கும் குடும்பத்தாருக்கும் தெரியும் என்ற அடிப்படையில் அவர்கள் அந்த தகவல்களை நீதிமன்றுக்கு தெரிவிப்பதன் மூலம் ஆய்வுப்பணிகளையும் அந்த புதைகுழி தொடர்பான காலப்பகுதியையும் கண்டுபிடிப்பதற்கு இலக்கு என்ற அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சட்டதரணிகளால் தெரிவித்ததன் அடிப்படையில் அது சம்பந்தமாகவும் கட்டளை ஆக்கப்படுள்ளது. இந்த வழக்கு மீண்டும் செப்டம்பர் மாதம் 26 ஆம் திகதி தவணையிடப்படுள்ளது.

இந்த வழக்கு விசாரணை சம்பந்தமான விடயங்களை கண்காணிக்க இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி சுசாந்தி கோபால கிறிஸ்ணன் நீதிமன்றத்துக்கு வருகை தந்திருந்தோடு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் நீதிமன்றுக்கு வருகை தந்திருந்தார்.

# தமிழ் தேசியத்தின் குறியீடாக நான் இருப்போன் தமிழ் தேசியத்திற்காக மக்கள் வாக்களிக்க வேண்டும்!

## தமிழ் பொதுவேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா. அரியநேத்திரன்

ஆகத்து 08, 2024

தமிழ்தேசியத்தின் குறியீடாக நான் இருப்பேன் தமிழ் தேசியத்திற்காக மக்கள் வாக்களிக்க வேண்டும் என தமிழ் பொதுவேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

தமிழ்தேசியபொதுக்கட்டமைப்பின் பெதுவேட்பாளரை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இன்று வியாழக்கிழமை (08) இடம்பெற்ற போது அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியத்தின் குறியீடாக மாத்திரமே நான் இருப்பேன் இலங்கை சோசலிச குடியரசின் ஜனாதிபதியாக வருவதற்காக அல்ல. தமிழ்த்தேசிய மண்ணில் இனப்படுகொலை செய்யப்பட்ட இனமாக நாங்கள் இருக்கின்றோம் எங்களுக்கான உரிமை கிடைக்கவேண்டும் என்பதற்காக சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் வலியுறுத்துகின்ற அடையாளமாக இந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளேன். எனது பணி செப்டம்பர் 22 ஆம் திகதி மட்டுமே இருக்கும் அதற்கு பிற்பாடான பணிகளை தமிழ் பொதுக்கட்டமைபே எடுக்கும்.

தந்தை செல்வா காலம் தலைவர் பிரபாகரன் காலம் அதற்குப் பின்னர் சம்பந்தன் தலைமையின் கீழ் வழிநடத்தப்பட்டோம். இதில் பலர் இருந்திருந்தாலும் தந்தை செல்வாவின் போராட்டம் அகிம்சை ரீதியாக பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருந்தாலும் பல ஏமாற்றங்களை கண்டிருந்தது பின்னர் ஆயுதப்போராட்டம் அது மௌனிக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஜனநாயக ரீதியான போராட்டங்கள் நடைபெற்று வந்தபோதும் ஏமாற்றங்களே எமக்கு மிஞ்சியது.



சர்வதேச ரீதியாக நாங்கள் பேச்சுவார்த்தைக்குச் செல்லுகின்ற போது சர்வதேசம் ஒரு குரலில் வரவேண்டும் என்பதைத்தான் நமக்கு கூறியது இவ்வாறாக அனைத்து விடையங்களை நாங்கள் சீர்தூக்கிப் பார்க்கும் போது ஒரு குரலில் ஒருமித்த கருத்துக்களை முன்கொண்டு செல்வதற்காக நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக அடையாளப்படுத்தப்பட்டு அதற்கான ஆதரவை வாக்குகளாக செலுத்துகின்றபோது தமிழ் மக்களின் இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாது உள்ளது அவை தீர்க்கப்படவேண்டும் என்பதை வெளிக்காட்டுகின்ற முயற்சியே இந்த பொதுவேட்பாளர் முயற்சியாகும்.

பொதுக் கட்டமைப்பு சார்பில் பலரையும் ஆராய்ந்த பின்னர் இறுதியாக சட்டத்தரணி தவராசாவும் எனது பெயரையும் இறுதித் தெரிவில் இருந்தது. நாங்கள் இருவரும் நண்பார்களாகவே இருக்கின்றோம். எவ்வாறாயினும் நானே அவரோ எவ்விதமான சர்ச்சைகளும் இல்லாமல் என்னை தெரிவு செய்தார்கள். இதனால் தமிழ்தேசியத்தின் அடையாளமாக நான் இருப்பேன். இவ்வாறான சூழலில் இந்த ஜனாதிபதித் தேர்தலில் எத்தகையவர்கள் போட்டடியிடுகின்றார்கள் என்பது அனைவரும் அறிந்த விடையம் மிக முக்கியமாக போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளராக இருக்கின்றவர்கள் விடுதலைப்புலிகளை நான் தான் பிரித்தேன், கட்சிகளை பிரித்தேன், என்னை மாற்றமாட்டேன் என்று போட்டிபோட்டு செல்லும் நிலையே காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் மக்களை பிரித்தாளுகின்றவர்களுக்கு வாக்குகளை வழங்கப்போகின்றோமா? வடக்கில் ஒன்று தெற்கில் ஒன்று கதைப்பவர்களுக்கு வாக்குகளை வழங்கப்போகின்றோமா? வடக்கு கிழக்கை பிரித்தவர்களுக்க வாக்குகளை வழங்கப்போகின்றோமா? என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். தமிழ்த்தேசிய இனத்தின் விடிவுக்காக பல இலட்சம் மக்களையும் போராளிகளையும் இழந்துள்ள நாம் உரிமையற்றவர்களாக இருக்கும் நிலையில் பல ஜனாதிபதிகளைக் கண்டு ஏமாற்றம் அடைந்துள்ள நிலையில் இன்னும் பேரம் பேசத்தான் போகின்றோமா? இவை தொடர்பில் சிந்திக்கவேண்டும். இவற்றுக்காகத்தான் பொது வேட்பாளராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளேன். எனவே ஒட்டுமொத்த தமிழ் மக்களும் எங்கள் விடிவுக்காக வாக்களிக்கவேண்டும் என்றார்.

# "கிழக்கு பறிபோவதை வடக்கு, வேடிக்கை பார்க்காது" தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி!

ஆகத்து 13, 2024

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம். கிழக்கு பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு வடிவம் வருமாறு:-

"கிழக்குப் பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது"

கிழக்கின் முதுசமும் தமிழர்களின் அடையாளமுமான திருகோணமலை திருக்கோணேச்சரம் ஆலயத்தை யாப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்பட்டு அரசுடைமையாக்கத் திட்டமிடும் கிழக்கின் ஆளுநர் செந்தில் தொண்டமானின் அடாவடிகளை வன்மையாகக் கண்டிப்பதோடு ஆலயச் செயற்பாடுகள் சுயாதீனமாக இடம்பெற வேண்டுமென்று கோருகின்றோம். ஆளுநரின் அடாவடிகள் தொடர்தால் வடக்குக் கிழக்கில் தொடர் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய நிலமை ஏற்படும் என்பதை இத்தால் சம்பந்தப்பட்டோருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம். கிழக்கு பறிபோவதை வடக்கு வேடிக்கை பார்க்காது என்பதை ஆளுநர் அறிவாராக! அரசின் எலும்புத் துண்டுகளுக்காகத் தமிழரின் வரலாற்றுத் தொன்மைகளைச் சீரழிக்கும் நிகழ்ச்சி நிரலைக் கைவிடுமாறு கிழக்கின் ஆளுநரைக் கோருகின்றோம்.

க. சுகாஷ்,
பேச்சாளர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.



# தமிழர்களின் கோரிக்கைகளை அங்கீகரிக்க வைக்கவே பகிஷ்கரிப்பு ஆயுதம்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன்

ஆகத்து 10, 2024



இந்தத் தேர்தலிலே தமிழர்களுடைய வாக்குகளை பெற்றுக் கொள்ள விரும்புகின்ற, வெற்றி பெறக் கூடிய வேட்பாளர களிடத்தில் தமிழர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய சூழலை உருவாக்குவதற்கு பகிஷ்கரிப்பு என்ற ஆயுதத்தை நாங்கள் கையில் எடுத்திருக்கின்றோம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று (09) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பகிஷ்கரிப்பு என்ற முயற்சியை முழுமையாக தோற்கடித்து, தமிழர்களை ஏதோ ஒரு வகையில் இந்த தேர்தலில் வாக்களிக்க செய்வதற்கான முயற்சிகளில் பலதரப்பினர் ஈடுபட்டு இருக்கின்றார்கள்.

அதிலே ஒரு சாரார் நேரடியாக பேரினவாத வேட்பாளர்களுக்கு வாக்குகளை பெற்றுக் கொடுப்பதிலும், இன்னுமொரு சாரார் தமிழ் பொது வேட்பாளர் என்ற பெயரிலே தமிழர்களுடைய வாக்குகளை குறிப்பிட்ட நபருக்கு திரட்டி கொடுக்கும் நோக்கத்தோடும் முயற்சிகளில் இறங்கி இருக்கின்றார்கள்.

அந்தவகையில் சிவில் அமைப்புகளும், கட்சிகளும் இணைந்து பொது கட்டமைப்பு என்ற பெயரிலே பொது வேட்பாளர் ஒருவரை தாங்கள் அறிமுகப்படுத்திருப்பதாக அறிவித்திருக்கின்றார்கள்.

தமிழரசு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனுடைய பெயர் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்தை நாங்கள் அடியோடு நிராகரிக்கின்றோம்.

இவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே எந்த விதமான சம்பந்தமும் கிடையாது.

இதிலே ஒரு சில தரப்புகள் தம்மை சிவில் அமைப்புகள் என்று சொல்லிக் கொண்டு, ஒரு சில அரசியல் கட்சிகள் இந்திய நிகழ்ச்சி நிரலிலே, இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒற்றையாட்சிக்குள் தமிழர்களுடைய அரசியலை முடக்குவதற்காக கடந்த 15 வருடங்களாக செயற்பட்டு கொண்டிருக்கின்றன.

அந்தவகையில், தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்கு மாறாக செயல்படுகின்ற தரப்புக்கள் ஒன்று கூடி இந்த தமிழ் தேசிய அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கின்ற நோக்கோடு, தமிழர்களை நிரந்தரமாக தோல்வியடைய செய்கின்ற எண்ணத்தோடும் இங்கே ஒரு வேட்பாளரை கொண்டு வந்து நிறுத்திவிட்டு அவரை பொது வேட்பாளர் என்று சொல்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்ட தரப்பினருடைய வேட்பாளராக அரியநேத்திரனை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாமே தவிர, அவரை தமிழ் மக்களுடைய ஒரு பொது வேட்பாளர் என ஏற்றுக்கொள்ள முடியாது” என கூறியுள்ளார்.

# மன்னாரில் சிந்துஜாவிற்கு நீதி கோரி மக்கள் போராட்டம்!

ஆகத்து 13, 2024

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த சிந்துஜாவிற்கு நீதி கோரி இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சிகிச்சைக்காக வருகை தந்த நிலையில், நோயாளர் விடுதியில் இருந்த வைத்தியர் மற்றும் பணியாளர்களின் அசமந்த போக்கு காரணமாக உயிரிழந்த சிந்துஜா மரியராஜின் மரணம் தொடர்பாக ஆரம்ப கட்ட விசாரணைகள் நடைபெற்று ஒரு வாரம் கடந்த போதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலையின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் இறந்தவருக்கு நீதி வேண்டும். இப்படி இன்னொரு கொலை நடைபெறக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் சிந்துஜாவின் தாய், சிந்துஜாவின் பிள்ளை கலந்து கொண்டதோடு, பெண்கள் அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அருட் தந்தையர்களும் கலந்து கொண்டிருந்தனர்.









# யாழ் முனியப்பர் கோயில் முன்றலில் செஞ்சோலை படுகொலை நாளின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல் – 14.08.2024!







# முல்லைத்தீவு வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் உயிரிழந்த மாணவர்களின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 14, 2024

செஞ்சோலை வளாகத்தில் சிறீலங்கா விமானப்படையினரின் வான் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களுக்கான வணக்க நிகழ்வு இன்றைய நாள் நினைவு கூறப்பட்டது!

முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது சிறீலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் இன்றைய நாள் நினைவு கூறப்பட்டது.

கடந்த 2006.08.14 ஆம் திகதியன்று வள்ளிபுனம் - இடைக்கட்டு பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் இன்று (14.08.2024) இந் நிகழ்வு உணர்வு பூர்வமாக நடைபெற்றுள்ளது.

உயிரிழந்த உறவுகளுக்கு சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது. குறித்த வணக்க நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் சிவபாதம் குகநேசன், இளைஞர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டு நினைவு வணக்கம் செலுத்தியிருந்தனர்.







# வவுனியாவில் செஞ்சோலை மாணவர்களின் 18 வது ஆண்டு நினைவேந்தல் !

ஆகத்து 14, 2024

முல்லைத்தீவு செஞ்சோலையில் விமானத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் 18 வது ஆண்டு நினைவு வணக்கம் செலுத்தும் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம் பெற்றுள்ளது.

நினைவு வணக்க நிகழ்வொன்று இன்று (14.8.2024) வவுனியா வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தால் நினைவு கூறப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - வள்ளிபுனம், இடைக்கட்டு பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் 2006 ஆம் ஆண்டு தலைமைத்துவ பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய தாக்குதலில் பாடசாலை மாணவர்கள் 53 பேர் உட்பட 61 பேர் உயிரிழந்தனர்.






# வவுனியா சிங்கள குடியேற்றத்தில் நிறுவப்பட்ட சபுமல்கஸ்கட விகாரை வரும் 31ஆம் திகதி திறந்து வைக்கப்பட இருக்கின்றது!

ஆகத்து 13, 2024

ஜனாதிபதி தேர்தல் பரபரப்புகளுக்கு மத்தியில் வவுனியா சிங்கள குடியேற்றத்தில் நிறுவப்பட்ட சபுமல்கஸ்கட விகாரை வரும் 31 ஆம் திகதி திறந்து வைக்கப்பட இருக்கின்றது

நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திலிருந்த போது வவுனியாவின் கொக்கச்சாங்குளம்-ஊற்றுக்குளம் பகுதியில் 'சபுமல்கஸ்கட தொல்லியல் வேலைத்தல' என்கின்ற பலகை நாட்டப்பட்டு இவ் விகாரைக்கான கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தன.

2009 இற்கு பின் பெருமெடுப்பில் பரவலாக்கப்பட்ட சிங்கள குடியேற்றத்தின் மையங்களில் ஒன்றாக இந்த விகாரை உருவாக்கபட்டு இருக்கின்றது.

வவுனியாவின் குடியேற்றங்கள் கச்சல்சமளங்குளம், முதலிக்குளம், ஊற்றுக்குளம், கொக்கச்சாங்குளம் ஆகிய தமிழ் கிராமங்களின் எல்லைக்கோட்டின் வழி நகர்ந்து வவுனியா வடக்கின் வெடிவைத்தகல்லு வரை பரவலாக்கப்பட்டு தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாறு (வெலிஓயா) சிங்கள குடியேற்றங்கள் வரை பரவி வருகின்றது.

அதாவது வெலிஓயா குடியேற்றங்களை தற்போது சம்பத்நுவர பிரதேச செயலகமாக மாற்றி அதற்குள் இந்தக் வவுனியா சிங்கள குடியேற்ற கிராமங்களை இணைக்க தொடங்கி இருக்கின்றார்கள்.

அந்த வகையில் இந்த சிங்கள பிரதேச செயலக பிரிவிற்குள் ஊஞ்சல்கட்டி, மருதோடை, பட்டிக்குடியிருப்பின் பெரும் பகுதிகள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு செறிவாக பரவலாக்கப்படும் ஆக்கிரமிப்பை மையப்படுத்தி அதன்பௌத்த சிங்கள அடையாளமாக சபுமல்கஸ்கட விகாரை நிறுவப்பட்டுள்ளது.

குறுந்தூர் மலையில் கட்டப்பட்டுள்ள விகாரையின் தலைமை பிக்கு கல்கமுவ சாந்தபோதி தேரர் அவர்கள் தா ன் சபுமல்கஸ்கட விகாரையையும் நிர் வகிக்கின்றார்.




திருகோணமலை துறைமுகம் ஊடக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட புத்தரின் பல் அனு ராதபுரம் கொண்டு செல்லும் போது இந்த சபுமல்கஸ்கட வழி யாக பயணித்தது என்பதற்கு பல ஆதாரம் இருப்பதாக இந்த பிக்கு உரிமை கோருகின்றார்.

இதற்கிடையில் இந்த ஆக்கிரமிப்புக்குள் சிக்கியுள்ள ஊஞ்சல் கட்டி கிராமத்தின் காஞ் சூரமோட்டை (பழைய டொலர் பாம்) எனும் பகுதியியுள்ள சுமார் 50 வரையான தமிழ் குடம் பங்களுக்கு உகந்த வீதி, குடிதண்ணீர் வீட்டுத்திட்டங்கள், மருத்துவ வசதிகள் என எதுவுமில்லமால் அந்தரிக் கின்றார்கள்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தொல்லியல் திணைக் களம், இராணுவம் என பலமிக தரப்புகள் துணை நிற்க தமிழர்களின் நிலத் தொடர்ச்சியை சிதைத்து வவுனியாவிலிருந்து மண லாறு வரையில் குறுக்காகப் நிறுவப்படும் தனி பெரும் சிங்கள நிலப்பரப்க்குள் எந்த உதவிகளுமின்றி தடுமாறுகின்றார்கள்




# கனடாவின் நியூ ஃபவுண்ட்லாண்ட் பகுதியில் 19 நாய்களை கொன்ற நபர் ைது!

ஆகத்து 1, 2024

கனடாவின் நியூ ஃபவுண்ட்லாண்ட் பகுதியில் 19 நாய்கள் கொல்லப்பட்டிருந்த நிலையில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் ஒன்ராரியோவை சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. மிருக வதையில் ஈடுபட்டதாக குறித்த நபர் மீது பொலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

குறித்த நபரின் வீட்டிலிருந்து 19 நாய்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபரின் வீட்டின் பின்புறத்தில் நாய்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கொல்லப்பட்ட நாய்களில் நாய்க்குட்டிகளும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

கவனயீனமாக ஆயுதங்களை பயன்படுத்தியாகவும் விலங்குகளை சித்திரவதை செய்ததாகவும் குறித்த நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.


என்ன காரணத்தினால் குறித்த நபர் நாய்களை கொன்றார் என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.




# புதிய வான்வழிப் பிரிவினூடாக வாகனத் திருட்டு மற்றும் குற்றங்களை ஒன்ராரியோ கட்டுப்படுத்தவுள்ளது!

ஆகத்து 01, 2024

134 மில்லியன் முதலீட்டில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து உலங்குவானூர்திகள் மூலம் வாகனத் திருட்டு மற்றும்



திட்டமிட்டு நடத்தப்படும் குற்றங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒன்ராரியோ அரசு தீவிரப்படுத்தவுள்ளது. "கடினமாக உழைக்கும் ஒன்ராரியோ மக்களிடமிருந்து கோழைத்தனமான வாகனத் திருட்டுகள் மற்றும் குற்றங்களில் ஈடுபடுவோர் மட்டில் எமது அரசு பொறுமையிழந்துள்ளது. எனவே, எமது நெடுஞ்சாலைகளையும் சாலைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் நடவடிக்கைகளை நாம் இரட்டிப்பாக்கியுள்ளோம்" என முதல்வர் டக் போர்ட் தெரிவித்தார். இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி, பிணை விதிமுறைகள் இறுக்கமாக்கப்பட வேண்டும் என்று கூறியதுடன், மத்திய அரசு மற்றும் நீதிமன்ற அமைப்பு பிணை முறையை வலுப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

குறிப்பாக தெற்கு ஒன்ராரியோவில் நடைபெறும் வாகனத் திருட்டு, அதிவேக வாகன ஓட்டம், நிதானமிழந்த நிலையில் வாகனம் ஓட்டுதல் போன்ற குற்றங்களைத் தடுக்க இவ்வதி நவீன உலங்குவானூர்திகள் முக்கிய பங்காற்றும். "இவை குற்றவாளிகளை விட எமது காவற்றுறையினர் அதிநவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்தும் வசதியினை ஏற்படுத்திக் கொடுக்கும்" என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். இவ்விரிவாக்கம், புதிய தொழில்நுட்பங்கள் வாயிலாக காவற்




றுறையை மேம்படுத்தி, துப்பாக்கிப் பாவனை மற்றும் குழு மோதல்களைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தியின் ஒரு பகுதியாகும். இதன்மூலமாக சமூக பாதுகாப்பை மேம்படுத்தி குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த உதவும்.

# கனடிய மக்கள் அதிக அளவு வரி செலுத்துவதாகவும் தெரிவிப்பு!

ஆகத்து 02, 2024

கனடிய மக்கள் அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது அதிக அளவு வரி செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.




கனடாவின் குடும்பங்கள், பெருந்தொகையை வரிக்காக செலவிடுகின்றனர் என அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரேசர் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் சராசரியாக குடும்பம் ஒன்று தங்களது வருமானத்தில் 43 வீதம் வரையில் வரியாக செலுத்தியுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த வரிகளில் அனேகமானவை மறைமுக வரிகள் என தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் சராசரி குடும்பம் ஒன்று வருடாந்த வருமானமாக 109235 டொலர்களை பெற்றுக் கொள்வதாகவும், இதில் 46 988 டொலர்களை வரியாக செலுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1961 ஆம் ஆண்டில் சராசரி வருமானம் 5000 டொலர்கள் எனவும் இதில் 1625 டொலர்கள் வரியாக செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**Table 1: Tax bill of the average Canadian family (families and unattached individuals), 2023**

| Taxes | In dollars ($) | As % of total taxes |
|---|---|---|
| Income taxes | 14,918 | 31.7% |
| Payroll & health taxes | 10,079 | 21.5% |
| Sales taxes | 6,971 | 14.8% |
| Property taxes | 3,862 | 8.2% |
| Profit tax | 5,911 | 12.6% |
| Liquor, tobacco, amusement, & other excise taxes | 1,724 | 3.7% |
| Fuel, motor vehicle licence & carbon taxes | 1,334 | 2.8% |
| Other taxes | 1,248 | 2.7% |
| Natural resource taxes | 656 | 1.4% |
| Import duties | 284 | 0.6% |
| Total taxes | $46,988 | |
| Total cash income | $109,235 | |
| Taxes as a percentage of cash income | 43.0% | |

www.sangathamil.ca

# பிரித்தானியாவிற்கான பயணங்கள் தொடர்பில் கனடா அறிவுறுத்தல்!

ஆகத்து 07, 2024

பிரித்தானியாவிற்கான பயணங்கள் தொடர்பில் கனடா அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பிரித்தானியாவில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பொலிசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் அமைதியான போராட்டங்கள் கூட வன்முறைகளாக வெடிக்கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கலகங்கள், வன்முறைகள், கொள்கைகள் போன்றன இடம் பெறக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டங்கள் காரணமாக பொதுப் போக்குவரத்திற்கும் பாதிப்பு ஏற்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய வெளிவிவகார அமைச்சு அதிகாரபூர்வமாக இந்த பயண அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

போராட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்கு செல்வதனை தவிர்க்குமாறு கனடிய அரசாங்கம், பிரித்தானிய வாழ் கனடியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. .





# மக்கள் போக்குவரத்தை எளிதாக்க கார்டினர் நெடுஞ்சாலை புனரமைப்பை ஒன்ராரியோ அரசு விரைவுபடுத்துகிறது!

ஆகத்து 08, 2024

கார்டினர் நெடுஞ்சாலை புனரமைப்பு வேலைகளை வேகப்படுத்த 73 மில்லியன் டொலர்களை ஒதுக்கி, அவை நடைபெறும் காலத்தை ஒரு வருடத்தால் ஒன்ராரியோ அரசு குறைத்துள்ளது. இக்காலச்சுருக்க விரைவு வேலைத்திட்டமானது, வாரத்தில் ஏழு நாட்களும் 24 மணிநேர புனரமைப்பு வேலைகளை அனுமதிப்பதன் மூலம் ரொரான்ரோ மற்றும் அதனைச் சூழவுள்ள பீல், ஹோல்டன், யோர்க், ஹமில்ட்டன் உள்ளடங்கலான பகுதிளிலிருந்து நாள்தோறும் பயணிக்கும் 140,000 வாகனங்களின் நெரிசலைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

“அன்றாடம் கார்டினர் நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் 140,000 வாகன ஓட்டுநர்கள் தாம் செல்ல வேண்டிய இடங்களை விரைவாக அடைய எமது அரசாங்கத்தின் இந்நடவடிக்கை உதவும்” என அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார். தாமதங்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, ஏப்ரல் 2026க்குள் முடிவடையவுள்ள இத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் 273 மில்லியன் டொலர்களை மீதப்படுத்தலாம். இம்முக்கியமான நெடுஞ்சாலையைப் பயன்படுத்தும் அனைவருக்கும் அவர்களது பயணங்களை இலகுவாக்க நெடுஞ்சாலை உள்நுழைவு மற்றும் வெளிறும் வழிகளின் திருத்தம், புதிய போக்குவரத்து மேலாண்மைத்துவம் ஆகியவை இம்மேம்பாட்டுத் திட்டத்தில் அடங்கும்.




# ஒன்ராரியோவில் 3 நாட்களில் 8,000 பேருக்கு எதிராக போக்குவரத்து விதிமீறல் குற்றச்சாட்டு!

ஆகத்து 12, 2024

ஒன்ராரியோவில் கடந்த வார இறுதி நாட்களில் போக் குவரத்து விதிமுறைகள் தொடர்பில் 8000 பேருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆகத்து 2ம் திகதி முதல் 4ம் திகதி வரையிலான நீண்ட வார இறுதி நாட்களில் இவ்வாறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்ராரியோ மாகாண பொலிசார் இந்த விடயத்தை தெரிவித்துள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் பொலிசார் விசேட நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இதன் அடிப்படையில் மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள் வேகமாக வாகனம் செலுத்தியவர்கள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இடம் பெற்றிருந்தன.

மேலும் இருக்கைப் பட்டிகளை அணியாத சாரதிகள் மற்றும் பயணிகள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் அவசரமாக பயணம் செய்யும் வாகனங்களுக்கு சில சாரதிகள் இடத்தை ஒதுக்கி தர வில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வார இறுதி நாட்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் எட்டு பேர் உயிரிழந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வேகக்கட்டுப்பாட்டை மீறி அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்தியமை தொடர்பில் சுமார் 4000 முறை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பான வழிமுறைகளை பயன்படுத்தி வாகனத்தை




செலுத்தும் போது உயிர் சேதங்களை தவிர்க்க முடியும் என பொலிசார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

# கனடாவின் மனிற்றோபா பகுதியில் காட்டுத்தீ காரணமாக காற்றின் தரம் பாதிப்பு!

ஆகத:து 12, 2024

கனடாவின் மனிற்றோபா பகுதியில் காட்டுத்தீ காரணமாக காற்றின் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் பல இடங்களில் காட்டுத்தீ பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் நிறுவனம் இது தொடர்பான எச்சரிக்கை விடுத்துள்ளது.

சர்ச்ஹில், தொம்சன் மற்றும் பிலிம் ப்லோன் உள்ளிட்ட மனிற்றோபாவின் பல பகுதிகளில் இவ்வாறு காற்றின் தரம் மோசமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காற்றின் தரம் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை, புகை மூட்டமாக காணப்படுவதாகவும் வாகன சாரதிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான புகை மண்டலமாக காணப்படும் நிலைமை அனைவருக்கும் ஆபத்தானது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக சிரேஸ்ட பிரஜைகள், சிசுக்கள், சிறுவர்கள், கர்ப்பிணி தாய்மார் மற்றும் திறந்த வெளியில் பணிகளில் ஈடுபடுவோர் போன்றவர்கள் அதிக அளவு பாதிப்புகளை எதிர் நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் இல்லாத சந்தர்ப்பங்களில் திருந்தவெளியில் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தல்



வழங்கப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# தமிழக செய்திகள்



## நெடுந்தீவு கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையில் படகு மோதி தமிழக மீனவர் ஒருவர் உயிரிழப்பு; மற்றுமொருவரை காணவில்லை!

ஆகத்து 01, 2024

சிறீலங்கா சிங்களக் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் தமிழக மீனவர்களின் ஒரு விசைப்படகு மூழ்கிய நிலையில் இரண்டு மீனவர்களை உயிரிடனும், ஒரு மீனவரின் உடலையும் சிறீலங்கா சிங்களக் கடற்படையினர் மீட்டுள்ளனர். அதேவேளை காணாமல் போன மற்றொரு மீனவரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்த பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறீலங்கா சிங்களக் கடற்படையினர் எல்லை தாண்டியதாகச் சொல்லி மீனவர்களை கடற்படை ரோந்து கப்பலில் துரத்தியுள்ளனர். அப் போது தமிழக மீனவர் ஒருவரின் விசைப்படகில் கடுமையாக மோதியதில், அந்தப் படகு நடுக்கடலில் மூழ்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிறீலங்கா காவல்துறை முன்னெடுத்துள்ளனர்.

சிறீலங்கா சிங்களக் கடற்படையின் தாக்குதலால் விசைப்படகில் இருந்த ஒரு மீனவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு மீனவர் காணாமல் போயுள்ளார். இருவர் இலங்கை கடற்படையினரால் காங்கேசன்துறை கொண்டுவரப்பட்டுள்ளனர். இதனிடையே தாக்குதலைக்கண்டித்து இராமேசுவரம் மதுரை தேசிய நெடுங் சாலையில் தமிழக மீனவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

முன்னதாக கடந்த யூன் 25 அன்று சிறீலங்கா சிங்களக் கடற்படையினர் தமிழக மீனவர்களது விசைப் படகை கைப்பற்றி, படகிலிருந்த 10 பேரை கைது செய்திருந்தனர். கைது நடவடிக்கையின் போது, சிறீலங்கா ரோந்துப் படகிலிருந்த சிறீலங்கா சிங்களக் கடற்படை சிப்பாய் காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும்போது



உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறீலங்கா கடற்படை கப்பல் மோதி தமிழக மீனவர் படுகொலை; வைகோ கண்டனம்!

ஆகத்து 01, 2024

இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று 397 விசைப் படகுகள் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று மீன்பிடிக்க கடலுக்குச் சென்றன. அதில் சுமார் 10-க்கும் மேற்பட்ட விசைப் படகு மீனவர்கள் நள்ளிரவில் இந்திய கடல் எல்லை பகுதியில் வங்கக்கடலில் நெடுந்தீவு அருகில் வலைகளை விரித்து மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர்.

அப்போது திடீரென்று அங்கு இலங்கை கடற்படைக்குச் சொந்த மான ரோந்து கப்பல் ஒன்று மின்னல் வேகத்தில் மீனவர்களின் படகுகளை நோக்கி வந்தது .

கார்த்திகேயன் என்பவரின் விசைப்படகு மீது இலங்கை கடற் படையினர் தங்களது ரோந்து கப்பலைக் கொண்டு வேகமாக மோதினர். இதில் நிலைகுலைந்த மீனவர்களின் விசைப்படகு மூழ்கியது. உடனடியாக வேறு வழியின்றி படகில் இருந்த மீன வர்கள் மூக்கையா, மலைச்சாமி, இராமச்சந்திரன், முத்து முனி யாண்டி ஆகிய நான்கு பேரும் உயிர் பிழைப்பதற்காக கடலில் குதித்தனர். பின்னர் இலங்கை கடற்படை கப்பல் அங்கிருந்து சென்றுவிட்டது.

கடலில் மூழ்கிய மீனவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் 3 மீனவர்களை தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.

இலங்கை கடற்படை நடத்தி இருக்கும் இப்படுகொலை கடும் கண்டனத்துக்கு உரியது.

நாகை மாவட்டம், அக்கரைப்பேட்டை மீன்பிடி துறைமுகத்தி லிருந்து 10 மீனவர்கள் கடந்த யூன் 23ஆம் நாள் வங்கக் கடலில் மீன்பிடிக்கச் சென்றனர். அவர்களின் படகு மீது இலங் கைக் கடற்படையினர் தங்கள் படகை மோதினர். ஆனால், அதில் சிங்களக் கடற்படை படகு கவிழ்ந்ததில் சிங்கள வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

சிங்கள கடற்படை வீரர் விபத்தில் உயிரிழந்தை இலங்கை அமைச்சரும், தமிழ் இனத்திற்கு துரோகம் இழைப்பதையே நோக்கமாக கொண்டிருப்பவருமான டக்ளஸ் தேவானந்தா தமிழக மீனவர்கள் மீது பழி சுமத்தினார்.

இலங்கை கடற்படையின் அட்டூழியங்களுக்கு இந்திய அரசு கடுமையான பதிலடி கொடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களின் படகுகளை மோதி மீனவரை படுகொலை செய்த சிங்கள கடற்கரையினர் மீது கொலை வழக்கு பதிவு



செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வைகோ
பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.க
'தாயகம்'

சென்னை – 8

01.08.2024

## ஈழத் தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி வெளியேற்ற முயற்சி!

### உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன்

ஆகத்து 03, 2024

ஈழத் தமிழ் அகதிகளை கட்டாயப்படுத்தி வெளியேற்றும் இந்திய அரசின் முயற்சிக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

விசா அனுமதியோ அல்லது வேறு தகுந்த ஆவணங்கள் இல்லா மலோ நீண்டகாலமாக இந்தியாவில் தங்கியிருப்பதாகவும், அதற்குரிய விளக்கத்தை ஒருவார காலத்திற்குள் நேரில் வந்து அளிக்கவேண்டுமென தமிழகத்தில் அகதிகளாக வந்து தங் கியுள்ள ஈழத் தமிழர்கள் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வெளி நாட்டினர் பதிவு அலுவலகத்திலிருந்து முன்னறிவிப்புக் கொடுக் கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் அரசியல் குழப்பமும், கடும் பொருளாதார நெருக் கடியும் நீடிக்கின்றன. தமிழர் பகுதியில் சிங்கள இராணுவத்தின் கெடுபிடிகள் தொடர்கின்றன. இந்த நிலையில் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழர்களை கட்டாயப்படுத்தி வெளி யேற்றும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டிருப்பதை வன்மை யாகக் கண்டிக்கிறேன்.

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த ஈழத் தமிழ் அகதிகளை 1992ஆம் ஆண்டில் இதுபோல வெளியேற்றும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்ட போது, சென்னை உயர்நீதிமன்றத்தில் நானும், மருத்துவர் இராமதாசு அவர்களும் தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்றம் அகதிகளை வெளியேற்றும் முயற்சிக்குத் தடை விதித்தது. மேலும், அகதிகள் தாமாக தங்கள் நாட்டிற்குச் செல்ல விரும்புகிறார்கள் என்பதை இந்தியாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணைய அதிகாரிகள் சரிபார்க்கவேண்டும். மேலும், எந்த அகதியையும் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கு நிரந்தரத் தடையை உயர்நீதிமன்றம் 27.08.1992 நாளிட்ட ஆணையின் மூலம் உறுதி செய்துள்ளது.

எனவே, உயர்நீதிமன்ற ஆணைக்கு புறம்பாக அவர்களை வெளியேற்ற இந்திய அரசு முயலுவது மனிதநேய மற்ற செயல் மட்டுமல்ல, உயர்நீதிமன்றத்தின் ஆணையை மதிக்காதப் போக்காகும். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,

பழ. நெடுமாறன்,
தலைவர்.



# தமிழக மீனவரின் உடலை இந்திய கடற்படையிடம் ஒப்படைப்பு!

ஆகத்து 03, 2024

சிறீலங்கா சிங்களக் கடற்படை ரோந்து படகு மோதியதில், மீன்பிடி படகு நடுக்கடலில் மூழ்கி உயிரிழந்த இந்திய மீனவரின் உடல் மற்றும் உயிருடன் மீட்கப்பட்ட இரண்டு மீனவர்கள் இன்றைய தினம் சனிக்கிழமை அதிகாலை கடல் வழியாக இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தை சென்றடைந்தனர்.

சிறீலங்கா சிங்களக் கடற்படை ரோந்து படகு மோதியதில் இரண்டு நிமிடத்தில் படகு மூழ்கியதாகவும் உள்ளாடைகளுடன் கடற் படை வீரர்கள் அழைத்துச் சென்று விசாரித்ததாக உயிர் தப்பி வந்த இந்திய மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இராமேசுவரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து புதன்கிழமை கடலுக்குச் சென்ற கார்த்திகேயன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகின் மீது சிறீலங்கா சிங்களக் கடற்படை ரோந்து கப்பல் மோதி யதில் படகிலிருந்து மலைச்சாமி (59) என்ற மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்ததுடன், இராமச்சந்திரன் (64) என்ற மீனவர் மாயமாகி உள்ளார்.

மேலும் முத்து முனியாண்டி, மூக்கையா ஆகிய இரண்டு மீனவர்கள் சிறீலங்கா சிங்களக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் அருகே காங்கேசன்துறையில் உள்ள கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்று மதியம் முத்து முனியாண்டி, மூக்கையா ஆகிய இரண்டு மீனவர்கள் வழக்கு எதுவுமின்றி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேலும் இரண்டாவது நாளாக நடுக்கடலில் மாயமாகிய மீனவர் இராமச்சந்திரனை தேடும் பணிகள் கடற்படையின் ஹெலிகாப்டர், கடலோர காவல்படையின் ரோந்து படகுகளின் மூலம் தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிலையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட மலைச்சாமியின் உடலை யாழ்ப்பாணம் அரசு மருத்துவ மனையில் உடற்கூறு ஆய்வு செய்து யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் ஒப்படைத்தனர்.

அதனைத் தொடர்ந்து உயிருடன் மீட்கப்பட்ட இரண்டு மீனவர்கள் மற்றும் மலைச்சாமியின் உடலை நேற்று இரவு காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருந்து சிறீலங்கா கடற்படைக்கு சொந்தமான ரோந்து படகில் அனுப்பி வைத்தனர்.

அனுப்பி வைக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் உடலை சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐஎன்எஸ் பித்ரா கப்பலில் ஒப்படைத்தனர். உடலை பெற்று கொண்ட கடற்படை வீரர்கள் இராமேசுவரம் மீன் பிடித்து துறைமுகத்திற்கு எடுத்து வந்து இராமேசுவரம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

உயிருடன் ஒப்படைக்கப்பட்ட மீனவர்கள் விசாரணைக்கு பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் மலைச்சாமியின் உடல் ஆம்புலன்ஸ் மூலம் எடுத்து செல்லப்பட்டு அவரது வீட்டில் ஒப்படைக்கபட்டது.

நடுக்கடலில் திடீரென வந்த சிறீலங்கா சிங்களக் கடற்படை ரோந்து படகு மீன்பிடி படகின் மீது மோதியதில் இரண்டு நிமிடத்தில் படகு மூழ்கியதாகவும், படகில் இருந்த மீனவர்கள் கடலில் தத்தளித்த நிலையில் இருவர் உயிருடன் கைது



செய்யப்பட்டதுடன், ஒருவர் பிணமாக மீட்கப்பட்டதாகவும், கடலில் காணாமல் போன மீனவர் இராமசந்திரனை சிறீலங்கா கடற்படை தேடி வருவதாக உயிர் பிழைத்து வந்த மீனவர் தெரிவித்தார்.

மேலும் தங்களை சிறீலங்கா சிங்களக் கடற்படை உள்ளாடைகளுடன் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்று உணவு கூட கொடுக்காமல் பல மணி நேரம் விசாரித்து பின்னர் காங்கேசன்துறை பொலிசாரிடம் ஒப்படைத்ததாக உயிர் பிழைத்து மீனவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

யாழ்பாணத்தில் உள்ள துணை தூதரக அதிகாரிகள் சிறப்பு கவனம் செலுத்தி தங்களை பத்திரமாக தாயகம் அனுப்பி வைத்ததாக மீனவர்கள் இந்திய துணை தூதரக அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்த கொண்டனர.

# தமிழ்நாட்டிற்குத் தஞ்சம் தேடி வந்த ஈழத்தமிழர்களை வலுக்கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பும் கொடும் போக்கினை உடனடியாக நிறுத்த வேண்டும்!

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான்

ஆகத்து 03, 2024

இலங்கையை ஆளும் சிங்கள இனவாத அரசின் கோர இன அழிப்புக்கு ஆளாகி, இனப்படுகொலையை எதிர்கொண்டு, அளவில்லா அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் முகங்கொடுத்து வீட்டை இழந்து, நாட்டை இழந்து, உறவுகளைப் பறிகொடுத்து, உரிமைகளும், உடைமைகளும் அற்றுப்போய் நிர்கதியற்ற நிலையில் இப்பூமிப்பந்தில் உயிர்வாழ்வதற்கு ஒரு இடம் கிடைக்காதா? என ஏக்கத்தோடும், தவிப்போடும் பத்து கோடி தமிழ் மக்களின் தாயகமாக விளங்கும் தாய்த்தமிழகத்தை நாடி வந்த ஈழச்சொந்தங்களை, இந்திய ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசும், தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசும் மனிதநேயம் சிறிதுமின்றி வலுக்கட்டாயமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது வன்மையான கண்டனத்துக்குரியது.

அடிப்படை உரிமைகள், வாழ்விட வசதிகள் என ஏதும் வழங்காமல் அடிமைகள் போலத் திறந்தவெளி சிறைச்சாலைகளான முகாம்களில் அடைத்துவைத்த போதிலும் உயிர்ப்பாதுகாப்பு என்ற ஒன்றாவது இருந்தது. தற்போது அதனையும் பறிக்கும் விதமாக ஈவு இரக்கமற்று இனவாத நாடான இலங்கைக்கு அனுப்புவது கொலைக்களத்திற்கு அனுப்புதற்கு ஒப்பாகும்.

தமிழினத்திற்கு யாதொரு தொடர்புமில்லாத பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளும், கனடா, ஆஸ்திரேலியா போன்ற மேலை நாடுகளும் தம்மை நாடிவந்த தமிழ் மக்களுக்கு அடைக்கலமளித்து, அரவணைத்து, ஆதரித்து அனைத்துவித அடிப்படை உரிமைகளையும் உறுதிசெய்து வாழ்வளிக்கின்றன. ஆனால், தனித்த பெரும் தேசிய இனமாகப் பத்து கோடி தமிழர்கள் பரந்து விரிந்து, நிலைத்து நீடித்து வாழும் இந்தியப்பெருநாட்டில், தொப்புள்கொடி உறவுகளான ஈழச்சொந்தங்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என விரட்டுவது தமிழ்த்தேசிய இனத்தையே அவமதிப்பதாகும்.


இலங்கையிலிருந்து வந்த ஈழச்சொந்தங்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்களா? பாகிஸ்தான், பங்களாதேசிலிருந்து அகதிகளாக வந்த இந்துக்களைச் சட்டவிரோதமாகக் குடியேறிவர்களென இந்நாடு கருதுமா? சீனாவிலிருந்து அகதிகளாக வரும் திபெத்திய மக்களை அவ்வாறு கூறி துரத்துமா? திபெத்தியர்களுக்கு இந்நாடு அளிக்கும் வசதிகள், சலுகைகள் என்னென்ன? அவர்களிடம் காட்டும் அக்கறை, பரிவு, பற்றில் நூற்றில் ஒரு பங்குகூட, நாட்டுக்குப் பெருத்த பொருளாதாரப் பங்களிப்புகளைச் செய்யும் தமிழ்ப்பேரினத்தின் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களிடம் காட்ட மறுப்பதேன்? அவர்கள் தமிழர்கள் என்பதற்காக இந்த நாடு எந்தக் கூடுதல் சலுகையும் அளிக்காவிட்டாலும், குறைந்தபட்சம் மனிதர்கள் என்ற அடிப்படையிலாவது அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்திருக்கலாமே! அதனைவிடுத்து, எவ்வித அடிப்படை வசதியுமின்றித் திறந்தவெளி சிறைக்கூடத்தில் கைதிகளைப் போல அவர்களை அடைத்துவைத்து, வந்தநாள் முதல் கண்காணித்துக் கடும் அடக்குமுறைகளுக்கும், சித்ரவதைகளுக்கும் ஆளாக்கி தற்போது சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக் கூறி திருப்பி அனுப்புவது தமிழினத்தின் தன்மான, இனமான உணர்வுகளைச் சீண்டிப்பார்ப்பதாகும்.

இந்தியாவைத் தந்தையர் நாடெனக் கருதி நேசித்து நின்ற எமது தொப்புள்கொடி உறவுகள் எப்படிச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் ஆனார்கள்? அவர்களைக் குடியமர்த்தும்போது அவர்கள் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று தெரியாதா? சட்டவிரோதமாக வந்தவர்கள் என்றால் எந்த அடிப்படையில் இந்நாடு குடியமர்த்தியது? அதிகாரிகள் முன்னிலையில் பதிவு செய்து, முகாம்களில் தங்கவைத்து, அவர்களின் எண்ணிக்கை, அவர்கள் வெளியே செல்லும் நேரம், உள்ளே வரும் நேரம் என அனைத்தையும் ஒவ்வொரு நாளும் கணக்கெடுத்து அவற்றைச் சட்டப்பூர்வமாக ஆவணப்படுத்திவிட்டு, தற்போது அவர்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்று வெளியேற்றுவது கொடுங்கோன்மையாகும்.

உலகின் மற்ற நாடுகள் எல்லாம் தங்களை நாடி வந்த மக்களை, தங்கள் நாட்டுக் குடிகள் போலப் பாவித்துக் குடியுரிமை வழங்கிப் பாதுகாக்கும் சூழலில், ஒரு தலைமுறை கடந்து இத்தனை ஆண்டுகளாக இந்த நிலத்தில் வாழ்ந்தும் எம்மக்களுக்குக் குடியுரிமையை மறுத்துப் புறந்தள்ளுவது எந்தவகையில் நியாயம்? ஈழத்தாயகத்தை முற்றாகச் சிதைத்தழித்து, அங்கு வாழ்ந்த தமிழின மக்களை நாடற்றவர்களாக்கி, ஏதிலியெனும் இழிநிலைக்குத் தள்ளி, நாடு நாடாக ஓடவைத்துவிட்டு இன்றைக்கு அவர்கள் தஞ்சம்கேட்டு நிற்கையில், அவர்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக்கூறி துரத்துவது எவ்வகையில் நியாயமாகும்?

இந்நாட்டின் விடுதலைக்காக அளப்பெரும் பங்களிப்பைச்செய்த இந்நிலத்தின் பூர்வக்குடி மக்களான தமிழர்களை மட்டும் மாற்றாந்தாய் மனப்போக்கோடு வெளியேற்றுவது பெரும்கோபத்தைத் தருகிறது.

இந்திய ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகளின் இக்கொடுஞ்செயல் நாட்டின் முன்னேற்றத்திற்கும், பொருளாதாரத்திற்கும்



பெரும் பங்களிப்புச் செய்து வரும் தமிழர்களின் உணர்வுகளை உரசிப்பார்ப்பதோடு, வருங்காலத் தலைமுறை பிள்ளைகளிடத்தில் இந்திய உணர்வே முழுமையாகப் பட்டுப்போகுமளவுக்கு ஆறாத ரணத்தை உருவாக்குமென எச்சரிக்கிறேன்.

ஆகவே, ஈழச்சொந்தங்களைச் சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் எனக்கூறி வெளியேற்றும் நடவடிக்கைகளை இந்திய ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் உடனடியாக நிறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன். மேலும், தமிழ்நாட்டை ஆளும் திமுக அரசு தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளவாறு ஈழத்தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சட்டப் போராட்டமும், அரசியல் நெருக்கடியும் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

www.sangathamil.ca

# தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது!

## மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ

ஆகத்து 06, 2024

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அவர்கள் இன்று (06.08.2024) இந்திய நாடாளுமன்ற மாநிலங்கள வையில், தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது என்று குற்றம் சாட்டி உரையாற்றினார். அவரது உரை வருமாறு:-

தமிழக மீனவர்களின் படகுகளை உடைத்தையும், வலைகளை அறுப்பதையும், துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்வதையும் தங்கள் பொழுதுபோக்காக இலங்கைக் கடற் படை செய்து வருகிறது.

கடந்த 45 வருடங்களில் 875 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையாலும், கடற்படை ஆணையினைச் செயல்படுத்தும் சிங்கள மீனவர்களாலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையே கிரிக் கெட் போட்டி நடந்து வருகிறது. இதே போல 2014 ஆம் வருடம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே கிரிக்கெட் போட்டி நடந்தது. அந்தப் போட்டி நடப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு இந்திய மீனவர்களைப் பார்த்து, கிரிக்கெட்டில் இம்முறை நாங்கள் தோற்றால் உங்களை எல்லாம் கடலிலேயே வெட்டி தலை வேறு, முண்டம் வேறு என்று ஆக்கிவிடுவோம் என மிரட்டினர். அம்முறை இலங்கை தோற்று, இந்தியா வெற்றி பெற்றுவிட்டது. அன்றைய நாளிலேயே கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நான்கு மீனவர்களை கொடூரமாக இலங்கைக் கடற்படை கொலை செய்தது. தலை வேறு, முண்டம் வேறாக நான்கு தமிழர்களின் உடல்களும் கடலில் மிதந்தன.

இப்பொழுது, பத்து நாட்களுக்கு முன்பே இலங்கைக் கடற்படை யினர் நமது கடல் ஆதிக்கம் உள்ள இடத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நமது மீனவர்களைப் பார்த்து, படகின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியும், தலையை தனியாக வெட்டியும் கோர கொலையைச் செய்தார்கள்.

இந்த 45 ஆண்டுகளில் நம்முடைய தமிழக மீனவர்களில் 850 மேற்பட்டவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தி கொலை செய்தது.

தற்போது 85 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டனர். ஒரு மீனவரைக் கொன்றுவிட்டனர். ஒருவர் காணாமலேயே போய்விட்டார். உடலும் கிடைக்கவில்லை. மற்ற இரண்டு மீனவர்களையும் கொன்று அவர்களின் உடல் களைத் துண்டு துண்டாக்கி கடலில் மிதக்க விட்டார்கள்.

இந்திய அரசு கண்டனம் தெரிவிக்கவில்லை. தற்போது 85 தமிழக மீனவர்கள் சிங்களச் சிறைகளில் அடைபட்டுக் கிடக் கிறார்கள். இந்திய அரசு, தமிழக மீனவர்கள் இப்படிக் கொல்லப் படுவதை வேடிக்கை பார்க்கிறது.

நேற்றைக்கு முந்தைய நாள், நான்கு மீனவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். ஒரு மீனவரைக் கொன்றுவிட்டார்கள். தமிழக மீனவர்கள் இந்தியாவின் குடிமக்கள் இல்லையா? இலங்கைச் சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் அனை வரையும் விடுதலை செய்ய நரேந்திர மோடி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழர்களை ஓரவஞ்சகமாக அடிமைப்படுத்தியும், பலத்த காயங்களை ஏற்படுத்தியதற்கு சிங்களப் படைகளும், சிங்கள அரசும் பொறுப்பேற்க வேண்டும்.

நான் இரண்டு முறை பிரதமரைச் சந்தித்து, தமிழக மீனவர் களைப் பாதுகாக்க வேண்டிய கடமையைச் சுட்டிக் காட்டினேன்.

வெளியுறவுத் துறை அமைச்சரைச் சந்தித்து, தமிழக மீனவர் களின் துயர நிலையை எடுத்துக் கூறி, இந்திய அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

அவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஸ்சிங் தலைமை தாங்கும் நாற்காலியில் வந்து அமர்ந்தார். சீக்கிரம் முடியுங்கள் சீக்கிரம் முடியுங்கள் என்று மணியை அடித்துக்கொண்டே இருந்தார்.



வைகோ: அவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஓரவஞ்சகமாகவே நடக்கிறீர்கள். வாய்ப்புக்களை மறுக்றீர்கள். சிறையில் உள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய ஒன்றிய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தமிழர்களைக் கிள்ளுக் கீரையாக நினைத்து இந்த மோடி அரசு பாதகம் செய் கிறது. இந்த நிலைமை தொடர்ந்துகொண்டே இருந்தால், தமிழக மீனவர்களின் இளம் தலைமுறையினரிடம் இந்தியா மீது வெறுப்புத்தான் உருவாகும்.

துணைத் தலைவர் பேச்சை முடியுங்கள் என்றார்.

இப்படி ஓரவஞ்சகமாக செயல்படத்தான் நீங்கள் இந்த நாற்கா லியில் உட்கார்ந்திருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

காலம் மாறும். தமிழக மீனவர்களை பாதுகாக்கின்ற நடவடிக் கைகளை இந்திய அரசு மேற்கொள்ளும் காலம் வரும்.

வைகோ இவ்வாறு உரையாற்றினார்.

# பள்ளிகளில் கஞ்சா பழக்கத்தை ஒழிக்க பழனிசாமி, அன்புமணி வலியுறுத்தல்!

ஆகத்து 09, 2024

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில், ஹசென்னை, பழவந்தாங்கல் அரசு மேல் நிலைப் பள்ளியில், ஒரு மாணவனின் புத்தகப் பையில் கஞ்சா பொட்டலங்கள் இருப்பது கண்டறியப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த தலைமுறையை பாழாக்கும் போதைப்பொருள் விற்பனையை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டிய காவல்துறையை, எதிர்கட்சியினரை மட்டும் பழிவாங்கும் ஏவல் துறையாக பயன்படுத்தும் திமுகவுக்கு எனது கண்டனம். எதிர்கால தலைமுறையினரை போதைப் பொருள் பழக்கத்திலிருந்து காப்பாற்ற இனியாவது போதைப் பொருள் விற்பனையை முழுமையாக கட்டுப்படுத்த காவல் துறைக்கு முழு சுதந்திரம் அளிக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்

இதேபோல, பாமக தலைவர் அன்புமணி வெளியிட்ட அறிக் கையில், ஹசென்னையை அடுத்த பழவந்தாங்கல் பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 மாணவர் ஒருவர் வகுப்பு நேரத்தில் கஞ்சா புகைத்துக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

மாணவருக்கு கஞ்சா விற்ற 3 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர். பள்ளிக்கு அருகிலேயே மாணவர்களுக்கு கஞ்சா விற்கப்படுவதும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. எனவே, இனியும் அலட்சியம் காட்டாமல் கஞ்சா பழக்கத்தை ஒழிக்க தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'





என்று தெரிவித்துள்ளார்.

# இராமேசுவரத்தில் இருந்து கடலுக்கு சென்ற மீனவர்கள் மீது கற்களை வீசி சிறீலங்கா கடற்படை தாக்குதல்: கடற்கொள்ளையர்களும் ஆயுதங்களால் தாக்கியத்தில் 4 இந்திய மீனவர்கள் படுகாயம்!

ஆகத்து 12, 2024

கடலுக்குச் சென்ற இராமேசுவரம் மீனவர்கள் மீது சிறீலங்கா கடற்படை கற்களை வீசி தாக்குதல் நடத்தி விரட்டியடித்தது. இதனால் மீன்பிடிக்க முடியாமல் கரைதிரும்பிய மீனவர்கள் இந்திய ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினர்.

இராமேசுவரம் மீனவர்கள் கடந்த 31ம் தேதி கடலுக்கு மீன் பிடிக்க சென்றபோது, சிறீலங்கா கடற்படை ரோந்து கப்பலால மோதியதில் மீனவர் மலைச்சாமி கொல்லப்பட்டார். இதை கண் டித்து 8 நாட்கள் வேலைநிறுத்தத்தப் போராட்டத்திற்கு பிறகு,



இராமேசுவரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்றுமுன் தினம் காலை 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன. நள்ளிரவில் மீன்பிடித்துக் கொண் டிருந்தபோது, ரோந்து வந்த சிறீலங்கா கடற்படை வீரர்கள் கற்களை சரமாரியாக வீசி தாக் குதல் நடத்தி விரட்டினர். இதனால் அச்சமடைந்த மீனவர்கள், மூன்று படகுகளில் இருந்த மீன் வலைகளை வெட்டிவிட்டு சிறீலங்கா கடற்படையிடம் சிக்காமல் உயிர்தப்பினர். இதை யடுத்து நேற்று காலை கரை திரும்பிய மீனவர்கள் வலையில் மிகவும் குறைவான மீன்களே இருந்தன. சிறீலங்கா கடற் படையின் தொடர் அட்டூ ழியங்களுக்கு இந்திய அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைத்து தங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என இராமேசுவரம், பாம்பன், மண்டபம் பகுதி மீனவர்கள் வலியுறுத்தினர்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆறுகாட்டுத் துறையில் இருந்து சிவசங்கர் தனது பைபர் படகில் இராஜ கோபால், தனசேகரன், செல்வ கிருஷ்ணன் ஆகியோருடன் நேற்று முன்தினம் மாலை கடலில் மீன் பிடிக்க சென்றார். கோடியக்கரைக்கு தென்கிழக்கே நடுக்கடலில் நேற்று முன் தினம் இரவு வலை விரித்து மீன் பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு பைபர் படகில் இலங்கையை (?) சேர்ந்த கடற்கொள்ளையர்கள் 4 பேர் வந்து மீனவர்களின் பைபர் படகை சுற்றி வளைத்து, கத்தி, கம்பு உள்ளிட்ட ஆயுதங்களுடன்




ஏறி சரமாரியாக தாக்கினர்.

படகில் வைத்திருந்த 700 கிலோ வலை, ஜிபிஎஸ் கருவி, செல்போன், டார்ச்லைட் மற்றும் செயின், மோதிரம் உள்ளிட்ட பொருட்களை பறித்து கொண்டு தப்பினர். அவற்றின் மதிப்பு ரூ.4 இலட்சம். தாக்குதலில் காயமடைந்த 4 மீனவர்களும், நேற்று முன்தினம் நள்ளிரவு ஆறுகாட்டுத்துறைக்கு திரும்பி கடலோர காவல் குழும பொலிசாரிடம் தெரிவித்தனர். பின்னர் 4 பேரும் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இது குறித்து பொலிசார் வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.




# பிரான்சில் பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 17 பணியாளர்களின் 18ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஆகத்து 04, 2024

சிறீலங்கா இனவாதப் படைகளால் 04.08.2006 அன்று மூதூரில் படுகொலைசெய்யப்பட்ட பட்டினிக்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 17 பணியாளர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு இன்று (04.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு, பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, பிரான்சு கிளிச்சி பிராங்கோ தமிழ்சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிச்சிப்பகுதியில் குறித்த பணியாளர்கள் நினைவாக அமைக்கப் பட்டுள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்க உபதலைவர் திரு . பரராஜசிங்கம் அவர்கள் ஏற்றிவைக்க



ஈகைச்சுடரை குறித்த படுகொலையில் சாவடைந்த பணியாளர்களுடன் பணியாற்றிய திரு.ஜெயகாந் கனகசபாபதி அவர்கள் ஏற்றிவைக்க குறித்த படுகொலையில் சாவடைந்த பணியாளர்களில் ஒருவரான கே.கோவர்த்தனி அவர்களின் சகோதரன் திரு. அமுதன் சிங்கநாயகம் மலர்வணக்கத்தை செலுத்தியிருந்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மலர்வணக்கம் செலுத்தினர்.

குறித்த படுகொலையில் சாவடைந்த செ.கணேஸ் மற்றும் புதல்வியான கணேஸ் கவிதா ஆகியோரின் உறவினரான திரு.து. ஜெயராஜா அவர்களும் கலந்துகொண்டு நினைவேந்தியதுடன் தனது கருத்தினையும் பதிவுசெய்திருந்தார்.

கிளிச்சி மாநகர முன்னாள் நகரபிதா Fille Catoire அவர்களும் கலந்துகொண்டு மலர்வணக்கம் செலுத்தி உரை நிகழ்த்தியிருந்தார்.

அவர் தனது உரையில், நான் தமிழ் மக்களுக்கு நடந்த வன்கொடுமைகளை நன்கு அறிபவன். அதனை அறிந்தே இத் தூபியை கிளிச்சியில் அமைக்க அனுமதி வழங்கி இருந்தேன். இதற்காக பல எதிர்ப்புகளையும் சவால்களையும் எதிர்கொண்டவன் நான். றுவாண்டா மக்களுக்கு நடந்த அவலங்களை 50 ஆண்டுகள் கடந்து இந்த சர்வதேசம் திரும்பிப் பார்த்தது போல தமிழ்மக்களின் பிரச்சனையையும் சர்வதேசம் விரைவில் திரும்பிப் பார்க்கும். அதனால் தொடர்ந்து போராடவேண்டும். அதற்கு எனது ஆதரவு எப்போதும் இருக்கும் என்றார்.

தொடர்ந்து குறித்த 17 பணியாளர்கள் தொடர்பான நினைவுரைகள் இடம்பெற்றன. நினைவுரைகளை கிளிச்சி பிராங்கோ தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. க.சச்சிதானந்தம் அவர்கள், சாவடைந்த பணியாளர்களுடன் பணியாற்றிய திரு.ஜெயகாந் கனகசபாபதி அவர்கள், குறித்த படுகொலையில் சாவடைந்த பணியாளர்களில் ஒருவரான கே.கோவர்த்தனி அவர்களின் சகோதரன் திரு.அமுதன் சிங்கநாயகம் அவர்கள், பிரான்சு தமிழீழ மக்கள் பேரவைப் பொறுப்பாளர் திரு.திருச்சோதி அவர்கள் தமிழ் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் ஆற்றியிருந்தனர்.

குறித்த நினைவுரைகளில் மூதூர் படுகொலைக்கான நீதி கிடைக்கவில்லை என்பதாகவே இவர்களின் உரைகள் அமைந்திருந்தன.

பிரெஞ்சு மொழியில் கிளிச்சி தமிழ்ச்சோலை மாணவர்களான செல்வி ரபிசா ரவிச்சந்திரன், செல்வி அன்சிகா ரவிச்சந்திரன், செல்வன் அமுதன் பிரமோத் ஆகியோர் ஆற்றியிருந்தனர்.



இவர்களுடன் ஏனைய கட்டமைப்புக்களின் செயற்பாட்



டாளர்கள், கிளிச்சி தமிழ்ச்சோலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு தமது நினைவு வணக்கத்தைச் செலுத்தியிருந்தனர்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்துடன் நிகழ்வு நிறைவடைந்தது.

# கலவரத்தில் ஈடுபடுவோருக்கு பிரித்தானியப் பிரதமர் எச்சரிக்கை!

ஆகத்து 05, 2024

பிரித்தானியால் வன்முறையில் கலந்து கொள்பவர்கள் சட்டத்தின் முழு தீவிரத்தையும் எதிர்கொள்ள நேரிடும் பிரித்தானிய என பிரித்தானிய பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பிரித்தானியாவின் Southport பகுதியில் சிறார்களுக்கான கோடைகால முகாமில் Axel Rudakubana என்ற 17 வயது சிறுவன் நடத்திய கொலைவெறி தாக்குதலில் 3 சிறுமிகள் உயிரிழந்த நிலையில் அங்கு கலவரங்கள் வெடித்துள்ளன.

இந்நிலையில் Southport, Liverpool, London போன்ற பல்வேறு பகுதிகளில் ஆர்பாட்டக்காரர்கள் போராட்டங்களை நடத்திவருகின்றனர். இரு தினங்களுக்கு முன்பு, Sunderland பகுதியில் நடந்த பேரணியில் பொலிசார் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தி இருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில் இன்று பிரித்தானியாவில் குடியேற்ற எதிர்ப்பு கிளர்ச்சியாளர்கள் ரோதர்ஹாமில் (Rotherham) உள்ள ஹோட்டலில் ஒன்றுக்குள் புகுந்து நாற்காலிகளை பொலிசார் மீது தூக்கி எறிந்து தாக்குதல் நடத்தியதுடன், ஹோட்டலின் ஜன்னல் கண்ணாடிகளையும் உடைத்தெறிந்து உள்ளனர்.

இந்த போராட்டங்கள் பெரும்பாலும் தீவிர வலதுசாரி ஆர்ப்பாட்டக்காரர்களாலும், குடியேற்ற எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது.

இந்த நிலையில், டவுனிங் தெருவில் பேசிய பிரித்தானிய பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர், வன்முறையில் கலந்து கொள்பவர்கள் சட்டத்தின் முழு தீவிரத்தையும் எதிர்கொள்ள நேரிடும்.

இந்த கலவரங்களில் நேரடியாகவோ அல்லது இணைய தளம் வழியாகவோ பங்கேற்கும் அனைவரும் இதில் பங்கேற்றதற்காக நிச்சயம் வருத்தப்படுவீர்கள் என்பதற்கு உறுதியளிக்கிறேன் என்று எச்சரித்துள்ளார்.

தற்போது ரோதர்ஹாமில ் (Rotherham) உள்ள ஹோட்டலில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது, இதற்கு எத்தகைய நியாமும் கற்பிக்க முடியாது எனவும் அவர் கூறினார்.




நாட்டில் இருக்கும் அனைவருக்கும் அமைதியாக வாழ் வதற்கான உரிமை உண்டு, ஆனால் இஸ்லாமிய சமுகம் மற்றும் அவர்களின் மசூதிகள் குறிவைக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளாகி இருப்பதை பார்க்க முடிகிறது, இது தீவிர வலதுசாரி குண்டர்த்தனம் என்றும் பிரதமர் குறிப்பிட்டு பேசியுள்ளார்.

இது வன்முறை, போராட்டம் கிடையாது என்றும் பிரித்தானிய பிரதமர் சர் கெய்ர் ஸ்டார்மர் மேலும், தெரிவித்துள்ளார்.

# ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன்?

## அவுஸ்திரேலிய செனெட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ்

ஆகத்து 04, 2024

நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள சிறீலங்காவின் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு வருகைதந்தபோது அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? என அவுஸ்திரேலிய செனெட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ் அந்நாட்டு சட்டமா அதிபர் திணைக் களத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இனப்படுகொலை தொடர்பில் வழக்குத்தொடர்வதற்கு சட்டமா அதிபரின் அனுமதி அவசியம் என்ற தேவைப்பாட்டை நீக்கும் சட்டமூலம் தொடர்பில் கடந்த வாரம் இடம்பெற்ற பொது அபிப்பிராயம் கோரலில் கருத்து வெளியிடுகையிலேயே அவுஸ்திரேலியாவின் கிரீன்ஸ் நியூ சௌத் வேல்ஸ் செனெட்டர் டேவிட் ஷூபிரிட்ஜ் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட காலப்பகுதியில் அழிவு இடம்பெற்ற அநேக பகுதிகளில் பணியில் இருந்தவரும், மிக மோசமான போர்க் குற்றவாளியாக பலரால் கருதப்படுபவருமான இலங்கையின் முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு வருகைதந்தபோது, அவருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் விசாரணை மேற்கொள்வதற்குத் தவறியது ஏன்? என அவர் இதன்போது வினவியுள்ளார்.

அக்காலப்பகுதியில் ஜகத் ஜயசூரிய மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விபரங்களை சில அமைப்புக்கள் அவுஸ்திரேலிய பெடரல் பொலிசாருக்கு வழங்கியிருந்ததாகவும், இருப்பினும் அப்போது நிலவிய சில நிர்வாக சிக்கல்களின் காரணமாக இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பெடரல் பொலிசில் எவருக்கும் அறிவுறுத்தப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டிய ஷூபிரிட்ஜ், 'இப்பின்னணி குறித்து நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா?' என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த அதிகாரி கிறிஸ்டோபர் மலோனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்குப் பதிலளித்துள்ள கிறிஸ்டோபர் மலோன், இவ்வாறான தனிநபர்கள் சார்ந்த மிகக் குறிப்பான விடயங்கள் தொடர்பில் தனக்குப் பரிச்சயம் இல்லை எனவும், இருப்பினும் இதுகுறித்து



அவதானம் செலுத்தத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# அமேசான் காடுகளின் அழிவு 15 மாத காலங்களில் முதல் முறையாக அதிகரிப்பு!

ஆகத்து 08, 2024

பிரேசிலின் அமேசான் மழைக்காடுகளில் காடழிப்பு 15 மாதங்களில் முதல் முறையாக யூலை மாதம் உயர்ந்தது, ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவின் கீழ் வீழ்ச்சியடைந்த அழிவின் தொடர்ச்சியை முறியடித்தது என அரசாங்க தரவு காட்டுகிறது.

சுற்றுச்சூழல் ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு மத்தியில் இது வந்துள்ளது.

யூலை மாதம் 666 சதுர கிலோமீட்டர் காடு பகுதி அழிக்கப்பட்டது. இது யூலை 2023 இல் அழிக்கப்பட்ட 500 சதுர கிலோமீட்டர் விட 33% அதிகம் என்று சுற்றுச்சூழல் அமைச்சகம் மற்றும் அறிவியல் அமைச்சகம் அறிவித்த பூர்வாங்க தரவு காட்டுகிறது.

கடந்த 12 மாதங்களில் காடழிப்பு கிட்டத்தட்ட 46% குறைந்துள்ளது. முந்தைய இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது. சுமார் 4,300 சதுர கிலோமீட்டர்கள் கேப் வெர்டேயின் அளவை விட பெரியதை இழந்தது.

2030 ஆம் ஆண்டிற்குள் அமேசானில் காடழிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக ஜனாதிபதி லுலா ட சில்வா உறுதியளித்துள்ளார்.

தென் அமெரிக்காவின் கிட்டத்தட்ட 40% பகுதியை உள்ளடக்கிய அமேசானில், காடழிப்பு பொதுவாக விவசாய விரிவாக்கம் மற்றும் சட்டவிரோத சுரங்கத்துடன் தொடர்புடையது. லூலா டி சில்வாவின் முன்னோடியான ஜெய்ர் போல்சனாரோவின் கீழ் இது கடுமையாக அதிகரித்தது.

யூலை 2024 இல் அதிகரிப்பு ஓரளவுக்கு காரணம், யூலை 2023 இல் மழைக்காடுகளில் சட்டவிரோத நடவடிக்கைகள் பெருமளவு குறைந்துள்ளது. மற்ற காரணங்களில் அமேசானில் வறட்சி, இந்த ஆண்டு நடைபெறும் நகராட்சித் தேர்தல்கள் மற்றும் யூன் மாதம் தொடங்கிய சுற்றுச்சூழல் ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஆகியவை அடங்கும் என்று பிரேசிலிய



சுற்றுச்சூழல் துணை அமைச்சர் ஜோவா கபோபியான்கோ கூறுகிறார்.

# பாரிஸ் ஒலிம்பிக் 2024 போட்டி நிறைவு: முதலிடத்தில் அமெரிக்கா!

ஆகத்து 11, 2024

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் அதிக பதக்கங்கள் வென்று பதக்க பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது அமெரிக்கா.

பிரான்ஸ் நாட்டில் ஒலிம்பிக் போட்டிகள் அனைத்தும் நடந்து முடிந்தது. அமெரிக்காவின் மகளிர் கூடைப்பந்தாட்ட போட்டியில் அமெரிக்கா தங்கம் வென்றது. இதனையடுத்து பதக்க பட்டியிலில் 40 தங்கம் வென்று அமெரிக்கா முதலிடத்தை பிடித்துள்ளது.

அதே அளவிற்கு தங்கம் வென்றுள்ளது சீனா. இருப்பினும் வெள்ளி, மற்றும் வெண்கலப்பதக்கம் வென்ற வகையில் சீனா இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

40 தங்கம் 44 வெள்ளி, 42 வெண்கலம் என மொத்தமாக 126 பதக்கங்களை பெற்று அமெரிக்கா முதலிடம் பிடித்துள்ளது.

40 தங்கம் 27 வெள்ளி 24 வெண்கலம் என மொத்தம் 91 பதக்கங்களை பெற்று சீனா இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

20 தங்கம், 12 வெள்ளி 13 வெண்கலம் என மொத்தம் 45 பதக்கங்களை பெற்று ஜப்பான் மூன்றாம் இடத்தை பிடித்துள்ளது.

18 தங்கம், 19 வெள்ளி, 16 வெண்கலம் என மொத்தம் 53 பதக்கங்களை பெற்று ஆஸ்திரேலியா நான்காம் இடத்தை பிடித்துள்ளது.

பதக்கப்பட்டியலில் இந்தியா ஒரு வெள்ளி மற்றும் 5 வெண்கலம் என மொத்தம் ஆறு பதக்கங்களை பெற்று 71 வது இடத்தை பிடித்துள்ளது.




# ரஷ்யாப் பகுதிக்குள் ஊடுருவிய உக்ரைன் படைகள் மீது தாக்குதலைத் தொடங்கிய ரஷ்யா!

ஆகத்து 13, 2024

ரஷ்யப் படைகள் செவ்வாய்கிழமை ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் வான்வழித் தாக்குதல்கள் மூலம் உக்ரைன் துருப்புக்கள் மீது பதிலடி கொடுத்தன.

ரஷ்ய பிரதேசத்தின் மீதான உக்ரைனின் மிகப்பெரிய தாக்குதலுக்குப் பின்னர் உக்ரைனின் முன்னேற்றத்தை நிறுத்தியதாக மூத்த தளபதி ஒருவர் கூறினார்.



உக்ரேனியப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க குர்ஸ்க் போர்முனை முழுவதும் தீவிரமான போர்கள் நடந்ததாக ரஷ்ய போர் பதிவர்கள் தெரிவித்தனர். இருப்பினும் ரஷ்யா வீரர்கள் மற்றும் கனரக ஆயுதங்களைக் கொண்டு வருவதாகவும், உக்ரேனிய தாக்குதல்கள் பலவற்றை முறியடித்ததாகவும் அவர்கள் கூறினர்.

சுகோய் சு-34 குண்டுவீச்சு விமானங்கள் குர்ஸ்க் எல்லைப் பகுதியில் உக்ரேனிய துருப்புக்கள் மற்றும் உக்ரேனிய நிலைகளை தாக்கிய காலாட்படையின் மீது தாக்குதல் நடத்திய காட்சிகளை ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டது.

உக்ரைன் படைகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுள்ளது என்று செச்சென் அக்மத் சிறப்புப் படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் அப்டி அலாடினோவ் கூறினார்.

ரஷ்ய நகரமான சுட்ஷாவின் கட்டுப்பாட்டில் எந்தப் பக்கம் உள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை, இதன் மூலம் ரஷ்யா மேற்கு சைபீரியாவிலிருந்து உக்ரைன் வழியாகவும் ஸ்லோவாக்கியா மற்றும் பிற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கும் எரிவாயுவை செலுத்துகிறது. காஸ்ப்ரோம் செவ்வாயன்று சுட்ஜா வழியாக உக்ரைனுக்கு எரிவாயுவை செலுத்துகிறது.

குர்ஸ்கின் செயல் ஆளுநர் அலெக்ஸி ஸ்மிர்னோவ், திங்கஎன்று உக்ரைன் பிராந்தியத்தில் 28 குடியேற்றங்களைக் கட்டுப்படுத்தியதாகவும், ஊடுருவல் சுமார் 12 கிமீ ஆழமும் 40 கிமீ அகலமும் கொண்டது என்றும் கூறினார்.

ஆனால் குர்ஸ்கிற்கு படைகளை அர்ப்பணிப்பதன் மூலம், ரஷ்யா முன்னேறி வருவதைப் போலவே உக்ரைன் முன்னணியின் மற்ற பகுதிகளையும் அம்பலப்படுத்தலாம். மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்ட ரஷ்யா, உக்ரேனியப் படைகளைச் சுற்றி வளைக்க முயற்சி செய்யலாம்.

உக்ரேனின் மேற்கத்திய ஆதரவாளர்கள், ரஷ்யாவிற் கும்



அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவக் கூட்டணிக்கும் இடையே ஒரு நேரடி மோதலாக போர் அதிகரிப்பதைத் தவிர்க்க ஆர்வமாக உள்ளனர், உக்ரேனிய தாக்குதல் குறித்து தங்களுக்கு முன் எச்சரிக்கை எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர்.

மேற்கத்திய நாடுகள் உக்ரைனை பயன்படுத்தி ரஷ்யாவுடன் பினாமி போரை நடத்துவதாகவும், எல்லை ஊடுருவல் ரஷ்ய உள்நாட்டு ஸ்திரத்தன்மையை குலைக்கும் முயற்சி என்றும் புடின் கூறினார்.

குர்ஸ்கில், 121,000 பேர் ஏற்கனவே வெளியேறிவிட்டனர் அல்லது வெளியேற்றப்பட்டுள்ளனர் மேலும் 59,000 பேர் வெளியேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். குர்ஸ்க் எல்லையை ஒட்டிய ரஷ்யாவின் பெல்கொரோட் பகுதியில், 11,000 பொதுமக்களும் வெளியேற்றப்பட்டதாக அப்பகுதியின் ஆளுநர் தெரிவித்தார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# "ஒரு சத்திய வேள்வியில் தர்மமே வெற்றிகொள்ளும்"

## –தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



ஒருபுறம் யுத்தத்தை தீவிரப்படுத்திக் கொண்டு, மறுபுறம் சமாதானப் பேச்சுக்களை நடாத்தி, புலிகள் மீது நெருக்குதல் கொடுத்து ஒரு தீர்வைத் திணித்துவிடலாம் என சிங்கள அரசு எண்ணுகின்றது. போரும், பேச்சும் என்ற இந்த இரட்டை வேட இணுகுமுறையை எமது விடுதலை இயக்கம் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. தமிழீழ மண்மீது பெரும் ஆக்கிரமிப்பு நடத்தப்பட்டு, தமிழ் மக்கள் பெருந்தொகையில் கொன்று குவிக்கப்பட்டால் நாம் திறந்து வைத்திருக்கும் சமாதானக் கதவு மூடப்பட்டுவிடும் என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூற விருப்புகிறேன்.

நாம் சமாதான மார்க்கத்திற்கு விரோதிகள் அல்லர். ஆனால், சமாதான அணுகுமுறை என்பது எமது மக்களின் உரிமைகளையும், நலன்களையும், விட்டுக்கொடுக்கும் விவகாரம் அல்ல. எனினும் எமது மக்களின் உரிமையை வென்றெடுக்க முடியுமானால், எமது மக்களின் நலன்களைப் பேணிப்பாதுகாக்க முடியுமானால் சமாதான வழிமுறையை நாம் தழுவிக் கொள்ளத் தயார். ஆனால், எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஒரு அரசியல் பொறியாகக் கையாள விரும்புகிறான். எனவே எதிரியின் தந்திரேபாயத்தையிட்டு நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

அஞ்சாத துணிவும், உறுதியும் எம்மிடமுள்ள வரை எந்தச் சக்தியாலும் எம்மை வென்றுவிடமுடியாது. ஒரு சத்திய யுத்தத்தில் தர்மமே வெற்றிகொள்ளும் என்பது வரலாற்று உண்மை.

*('எனது மக்களின் விடுதலைக்காக் கருத்துத் தொகுப்பிலிருந்து)*


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


DRIEBERG COLLEGE
Join us for our Annual Picnic
DRIEBERG COLLEGE CHAVAKACHCHERI
ALUMNI ASSOCIATION – CANADA
23rd Annual Picnic & Annual General Meeting
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்-கனடா
23வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலும்
வருடாந்த பொதுக்கூட்டமும்
திகதி: சனிக்கிழமை, ஆவணி 17, 2024 Saturday August 17, 2024
நேரம்: காலை10.00முதல்-மாலை7.00வரை-Time:10.00am to 7.00pm
இடம்: L'amoreaux Hydro Shelter
1785 McNicol Avenue
(Between Kennedy & Birchmount)
Scarborough ON M1V 3S8
பொதுக்கூட்டமும், புது நிர்வாகக்குழுத் தேர்தலும்
பிற்பகல் 1:00 மணிக்கு நடைபெறும்.
Election of the new Committee Members @ 1:00 pm
பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சிநேகிதர்கள், யாவரும் குடும்பத்துடன் சமூகம் தந்து, 23வது ஆண்டு கோடைக்கால ஒன்றுகூடலில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். காலை, மதிய, உணவும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்படும். விளையாட்டு போட்டிகளும் இடம் பெறும்.
RSVP before August 10, 2024 - Please Contact:
Gunam Hunt 905-472-0379; Mohan Devabalan 416-274-2169
Rajagopal Mathialagan 905-294-5419; Vasuki Devadason 416-266-1234
Reginald Thevaranjan 416-446-2965; Rohan Chelliah 647-855-9438


Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# எங்கள் வீதியை எமக்கென மீட்போம்

வீதியில் போகும்போது விபத்து நேராதிருக்க
விதிமுறை உள்ளன; விதிமுறை உள்ளன

விதிமுறை இருந்தும் விதிமுறை இருந்தும்
ஒதுங்கியே செல்லும் பாதசாரிகளின்
உயிர்களுக்கு ஏதும் உத்தவாதமே இல்லை.

உறுமியே செல்லும் ராணுவ உந்துகளின்
உள்ளிருந்து இயங்கும் துவக்குகளாலே
எந்நேரமும் இவர்தலை சிதறலாம்
எந்தச் சமயமும் எம்தலை உருளும்,
ஒதுங்கியே செல்லினம் ஒதுங்கியே செல்லினும்
எம்முயிர்க்கு இங்கு உத்தரவாதமே இல்லை.

சேதிகள் வருவன நாள்தோறும்
வீதியின்நடப்புக்கள் விபத்துக்கள் அல்லவே.

இப்போதெல்லாம்
எமது நகரத்து வீதிகள்
காவற் கருவிப் பேய்களுக்கென்றே
எழுதப்பட்டதாய் போனதே போலும்.

"எவரையும் சுடலாம் விசாரணையின்றியே
எரிக்கலாம் அன்றிப் புதைக்கலாம்" என்று
இயற்றப்பட்ட புதிய விதிகளால்
குருதியில் தோயும் நிகழ்வுகள் இங்கே.

இருளுக்கும் இருட்புலையர்க்கும் என்றே
விடப்பட்டுப் போன எங்கள் வீதியில்
வெளிப்படுவோரெல்லாம்
சுடப்படலாம் தெருநாய்களைப் போல.
எங்கணமேனும் எங்கணமேனும்
எமக்கிது நிகழலாம்.

குருதியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தே
கொழுத்துப் போகும் இரவுகள் நீளலாம்;
கடித்த ரத்தமாய் இரவுகள் தடிக்கலாம்.

வீதிகளை இருள் அரக்கனே ஆள
மின்விளக்கு அணைத்தே வீட்டினுள்
கூடியிருந்து பீதி வளர்ப்பவர் மத்தியில்
எத்தனை இரவுகள் இப்படிக் கழியலாம்?

குருதியை உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தே
கொழுத்துக் கிடக்கும் இருளரக்கனைத் தறிக்க
கோடரி ஏந்தி யார் வெளிவருவார்?

வீட்டினுள் பதுங்கி இருந்தே பீதியில்
ஒரிரா ஈரிராக் கழியலாம்;
எத்தனை இரவுகள் இப்படிக் கழியலாம்?

எத்தனை காலம் எங்கள் பூமியை
இருளரக்கனிடம் ஒப்படைத்திருக்கலாம்?

தூரத்தே விழும் எரி நட்சத்திரமல்ல,
உன் அயலவன் வீட்டு முகட்டிலே அரக்கர்
வீசி எறியும் தீப்பந்தம்.

தூரத்து இடியல்
அதோ அடுத்த வீதி வளையில்
அவன் தீர்க்கும் வேட்டொலி.

வீங்கிருள் நிகழ்வுகள் இவையே ஆக
வீடடினுள் உயிரோடு எத்தனை நாட்கள்?
வீடு நிறைந்த பீதி விடுத்தே
கோடரி ஏந்தி அனைவரும் வருக.

எங்கள் இரவை எமக்கென மீட்போம்
எங்கள் வீதியை எமக்கே ஆக்குவோம்.

இன்றைய இரவை அவனிடம் இழந்தோம்,
இனிவரும் பகலும் எமதென்பதில்லை;
எங்கள் வீதியை அவனிடம் இழந்தபின்
எங்கள் முன்றிலும் எமதென்றில்லை.

எங்கள் முன்றிலும் எறிந்த நிலவுமாய்
இன்புறு நாட்கள் என்றோ தொலைந்தன
இருட்டுள் சீவியம் எத்தனை நாட்கள்?

வீடு நிறைந்த பீதி விடுத்தே
கோடரி ஏந்தியே யாவரும் வருக
விழுதுகள் ஊன்றிய இருளரக்கதைத் தறிப்போம்.

எங்கள் வீதியை எமக்கென மீட்போம்;
எங்கள் முன்றிலை நிட்சயம் செய்வோம்.

சு. வில்வரத்தினம்






# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின்

## வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதுமலைப் பிரகடனம்! 04.08.1987





1987ம் ஆண்டு யூலை மாதத்தில் 'ஒப்பரேஷன் பூ மாலை' நடவடிக்கை இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தயாராகியிருந்தன.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அப்பொழுது ஈழ மண்ணில் தமது தலைமையகத்தை அமைத்து, ஈழ மண்ணிலேயே நிலை கொண்டிருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம் பற்றி பிரபாகரன் அவர்களுக்கு அறிவித்து அவரது ஒப்புதலையும் எப்படியாவது பெற்றுவிடுவதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி திட்டம் தீட்டினார். அந்த ஒப்பந்தம் பற்றி திரு.பிரபாகரனுடன் நேரடியாகப் பேசுவதற்காக திரு.பிரபாகரனை புதுடில்லிக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். இந்தியாவின் உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்ற ஹர்தீப் பூரி, கப்டன் குப்தா என்ற இந்திய தூதரக அதிகாரிகள் மூலமாக இந்த அழைப்பு திரு.பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டிருந்தது இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படப்போகின்றது என்றும், 'விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்' என்பதை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளதாகவும், அந்த ஒப்பந்தம் புலிகளின் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் அந்த இந்திய அதிகாரிகள் புலிகளிடம் தெரிவித்தார்கள்.

"தமிழீழத்தை கைவிடும் எந்தவொரு தீர்வுக்கும் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்" என்று புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

19.07.1987 இடம்பெற்ற இந்த சந்திப்பைத் தொடர்ந்து, பல தடவைகள் இந்திய அதிகாரிகளுக்கும் புலிகளின் தலைவருக்கும் இடையிலாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தவிர்க்க முடியாமல் இந்திய நேரடித் தலையீடுகள் ஈழப் பிரச்சனையில் ஏற்பட்ட பின்னர், அதனை எப்படியாகிலும் எதிர்கொண்டேயாக வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு இருந்தது. அதனால் இந்திய பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியா பயணமாக புலிகளின் தலைவர் பிரபாகரன் இறுதியில் தீர்மானித்தார்.

இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட கால விரோதத்திற்கு வித்திட்ட ஒரு பயணமாக விமர்சகர்களால் கருதப்பட்ட திரு.பிரபாகரன் அவர்களின் அந்த இந்தியப் பயணம், 1987ம் ஆண்டு யூலை மாதம் 24ம் திகதி இடம் பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள சுதுமலை அம்மன் கோவிலடி வயல்வெளியில் வந்திறங்கிய இந்திய ஹெலிக்காப்பரில் திரு.பிரபாகரன் புதுடில்லி அழைத்துச்செல்லப்பட்டார். புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்ட தமிழீழத் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான குழுவினர், இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள 'அஷோகா' ஹோட்டலில், 518ம் இலக்க விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறுவதை விட, 'சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

தமிழீழத் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் இருந்த விடுதியின் வெளியே இந்தியாவின் 'கறுப்புப் பூனைகள்' பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டிருந்தார்கள். அறையில் இருந்த தலைவர்கள் வெளியே நடமாட இந்தக் 'கறுப்புப் பூனை' பிரிவைச் சேர்ந்த வீரர்கள் அனுமதி மறுத்திருந்தார்கள். புலிகளின் தலைவர்கள் வெளியில் எவரையும் தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. விடுதியின் உள்ளே இருந்த தொலையேசியின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. பேச்சுவார்தைக்கு என்று கூறி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள், ஒருவகையில் சிறைவைக்கப்பட்டது போன்றே நடத்தப்பட்டார்கள்.

இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நேர்மையில் புலிகளைச் சந்தேகம் கொள்ளவைத்த மற்றுமொரு சம்பவமாக இந்த 'அஷோக்கா ஹோட்டல்' சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியா மீது புலிகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் சிதறடித்த ஒரு சம்பவமாக இந்த சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியாவை நம்பி அதன் விருந்தினராக வந்திருந்த புலிகளின் தலைவரை கைதுசெய்து சிறைவைத்தது போன்று நடந்துகொண்ட இந்தியாவின் நம்பிக்கைத் துரோகச் செயலே, இந்தியா பற்றிய ஒரு எதிர் நிலைப்பாட்டை புலிகள் பிற்காலத்தில் எடுப்பதற்கும் காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

இந்தியாவிற்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும், இந்தியாவின் முகத்தில் கரிபூசவேண்டும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனையும் நினைக்கவைத்த ஒரு சம்பவமாக இந்தச் சம்பவத்தைக் பல இராணுவ ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை அடைத்து வைத்து, பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒப்பந்தத்தை அவர் மீது திணித்த இந்திய அரசின் அடாவடித்தனத்தையும், எதேச்சாதிகாரத்தையும், நம்பிக்கைத் துரோகத்தையும், ஈழத் தமிழர்கள் இன்றுவரை மனதினில் நிறுத்தியபடிதான் இருக்கின்றார்கள்.

24ம் திகதி முதல் 'அஷோகா' ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் தலைவர்களை, 28ம் திகதியே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்தார். புலிகளின் தலைவர்கள் வெளித் தொடர்புகள் எதுவும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருந்ததால், 'புலிகள் ஒப்பந்தத்திற்குச் சம்மதித்துவிட்டார்கள்' என்று இந்திய தரப்பினரால் வெளி உலகிற்கு கூறப்பட்ட பொய்யையும் மறுப்பதற்கு எவருமே இல்லாமல் போயிருந்தது.

சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்த ராஜீவ் காந்தி, பலவாறான நெருக்குதல்களையும், மிரட்டல்களையும் பிரயோகித்து புலிகளை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார்.

வெறும் கலந்துரையாடல்களுக்கு என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டிருந்த தமிழீழ தலைவர்கள் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்ததானது, ஈழப் பிரச்சனையில் இந்தியாவின் மன்னிக்கமுடியாத துரோகத்தை ஈழத் தமிழருக்கு வெளிப்படுத்தியிருந்தது.

இந்தியத் தலைவருடனான சந்திப்பின் போதான அந்தச் சந்தர்ப்பத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் காணப்பட்ட மனநிலை பற்றி, அப்பொழுது தி.மு.கா. வின் 'போர் வாள்' என்று அழைக்கப்பட்டவரும், தற்போதைய ம.தி.மு.கா.வின் தலைவரும்,, ஈழ விடுதலை பற்றி பேசி 'பொடா' சட்டத்தின் கீழ் கைதாகி சிறை சென்றவருமான வை. கோபாலசாமி (வைகோ) பின்னர் ஒரு தடவை நினைவு கூர்ந்திருந்தார்.

அஷோகா ஹோட்டலில் பிரபாகரன் அவர்கள் மீதான கடும் பாதுகாப்பு தளர்த்தப்பட்ட பின்னர், திரு. பிரபாகரன் அவர்கள் வை.கோபாலசாமியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருந்தார். அப்போது திரு.பிரபாகரன் தன்னிடம் தெரிவித்ததை வை.கோபாலசாமி இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார்,

அவரது குரல் இப்பொழுதும் எனது நினைவுகளில் பசுமையாக உள்ளது. பிரபாகரன் என்னிடம் கூறினார்: நாங்கள் இந்திய அரசாங்கத்தினாலும், பிரதமர் ராஜீவ் காந்தியினாலும் ஏமாற்றப்பட்டுவிட்டோம். எனது முதுகில் குத்தப்பட்டுவிட்டது. என்னிடம் சயனைட் கழுத்தில் தொங்குகின்றது. தற்கொலை செய்துவிடலாமோ என்றுகூட நினைத்தேன். ஆனால், பல்லாயிரக்கணக்கான எனது சகோதர சகோதரிகளை நினைத்து என்னால் அந்த முடிவை எடுக்கமுடியவில்லை. இவ்வாறு திரு. பிரபாகரன் தெரிவித்ததாக வைகோ நினைவுகூர்ந்திருந்தார்.

இந்திய அரசினதும், பிரதமர் ராஜீவ் காந்தியினதும் இந்த துரோக நடவடிக்கையே, பின்னாளில் இந்தியாவிற்கு எதிராக பல நடவடிக்கைகளை புலிகள் எடுக்கக் காரணமாக அமைந்திருந்தன.

இந்தியத் தலைவருக்கு எதிரான துன்பியல் சம்பவம் இடம் பெறவும், இந்திய அரசின் இந்த நம்பிக்கைத் துரோகச் செயலே பிரதான காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்படியெல்லாம் இந்தியாவால் நெருக்கடிக்குள்ளான நிலையில் அந்த ஒப்பந்தத்தை ஏற்றதாகக் கூறி 02.08.1987 அன்று யாழ்ப்பாணம் திரும்பிய தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே. பிரபாகரன் அவர்கள் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் ஒரு உரையை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழப் பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்த்திய முதலாவது உரை என்று அந்த உரை பிரசித்தி பெற்றிருந்தது.

திரு.பிரபாகரன் அவர்களது அந்த உரை சுதுமலைப் பிரகடனம் என்றே வரலாற்றில் பதிவாகியுள்ளது. 'வட்டுக்கோட்டைத் தீர்மானம்', 'திம்புக் கோட்பாடு', என்பது போன்று சுதுமலையில் புலிகளின் தலைமை ஆற்றிய உரை 'சுதுமலைப் பிரகடனம்' என்றே அழைக்கப்படுகின்றது. இந்தியாவால் ஏமாற்றப்பட்ட நிலையில், இந்தியாவால் முதுகில் குத்தப்பட்ட நிலையில், இந்தியாவால் புலிகள் நிராயுதபாணிகளாக்கப்படுவது உறுதிப்படுத்



தப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகளின் ஆயுதக்களைவுத் திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில், இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் இந்தியப்படைகளுக்கு எதிராகப் போராடுவது என்று புலிகள் தீர்மானம் எடுத்துவிட்ட பின்னர்தான், புலிகளின் தலைவரது சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த பிரகடனம்:

எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ மக்களே!

இன்று எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவது போல, எமது சக்திக்கு அப்பாற்பட்டதுபோல இந்தத் திருப்பம் ஏற்பட்டு இருக்கிறது. இதன் விளைவுகள் நமக்குச் சாதகமாக அமையுமா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

திடீரென மிகவும் அவசரமாக, எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதியாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல் இந்தியாவும் – இலங்கையும் செய்துகொண்ட ஒப்பந்தம் இப் போது அவசர அவசரமாக அமலாக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும்வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது.

பாரதப் பிரதமர் என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்குக் காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன... பல கேள்விக்குறிகள் இருந்தன.

இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என் பதை இந்திய அரசுக்குத் தெள்ளத்தெளிவாக விளக்கினோம். ஆனால், நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சர்யப்பட வில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்னையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது, பிரதானமாக இந்திய – இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின்கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இலங் கையில் அந்நிய நாசகாரச் சக்திகள் காலூன்றாமல் தடுக்கவும் இது வழிவகுக்கிறது.

ஆகவேதான், இந்திய அரசு அதிக அக்கறை காட்டியது. ஆனால், அதேசமயம் ஈழத்தமிழரின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது. ஆகவேதான், எமது மக்களைக் கலந்தாலோசிக்காது எமது கருத்துகளைக் கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக எதிர்த்தோம். ஆனால், நாம் எதிர்த்ததில் அர்த்தமில்லை.

எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும்போது நாம் என்ன செய்வது?

இந்த ஒப்பந்தம் எமது இயக்கத்தைப் பாதிக்கிறது... எமது அர சியல் லட்சியத்தைப் பாதிக்கிறது... எமது போராட்ட வடிவத் தைப்... எமது ஆயுதப் போராட்டத்துக்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது. பதினைந்து வருடங்களாக ரத்தம் சிந்தி, தியாகம் புரிந்து, சாதனை ஈட்டி, எத்தனையோ உயிர்பலி கொடுத்துக் கட்டி எழுதப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒருசில தினங்களில் கலைக்கப்படுவதென்றால் அதை நாம் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

திடீரெனக் கால அவகாசமின்றி எமது போராளிகளின் ஒப்புத லின்றி, எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இன்றி இந்த ஒப்பந்தம் எம்மை நிராயுதபாணியாக்குகிறது. ஆகவே, நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம். இந்தச் சூழ் நிலையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி என்னை அழைத்துப் பேசினார். அவரிடம், எமது பிரச்னைகளை மனம்திறந்து பேசினேன்.

சிங்கள இனவாத அரசின்மீது எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதயும், இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறை வேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்னை பற்றியும் அதற்கான உத்தரவாதங்கள் பற்றியும் பேசினேன். பாரதப் பிரதமர் எமக்குச் சில வாக்குறுதிகள் அளித்தார். எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார்.

பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரது உறுதிமொழிகளில் நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கையில் இறங்க, இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்தியச் சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்கிறோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்புக்காக எத்தனை அளப்பரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. எமது லட்சியப் பற்றும் தியாக உணர் வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்புக்காக, உங்களது விடுதலைக்காக, உங்களது விடிவுக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம்.

நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியா விடம் ஒப்படைக்கிறோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்துவந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் பெற்றுக்கொள்வதிலிருந்து மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது, இந்தப் பொறுப்பு மாற்றத்தைக் குறிக்கிறது.


நாம் ஆயுதங்களைக் கையளிக்காதுப் போனால் இந்திய ராணுவத்துடன் மோதும் துர்பாக்ய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரருக்கு எதிராக நாம் ஆயுதங்கள் நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய ராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவருடைய உயிருக்கும், பாதுகாப்புக்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு அடித்துக் கூற விரும்புகிறேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர, எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம்.

ஆனால், இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழீழத் தனியரசே, தமிழீழ மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.



தமிழீழ லட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், போராட்ட லட்சியம் மாறப்போவதில்லை. எமது லட்சியம் வெற்றி பெறுவதானால், எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும்.

தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது ஏற்படலாம். ஆனால், நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபெறப் போவதில்லை. முதலமைச்சர் பதவியையும் ஏற்கப் போவ தில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்ல விரும்பு கிறேன்.


International Colloquium to Remember Tamil Victims of Enforced Disappearance and to Observe the
INTERNATIONAL DAY OF THE DISAPPEARED
அனைத்துலக காணாமல்போனோர் நாள்
SEARCHING FOR THE UNKNOWN
Feeling the Piercing Scream of the Disappeared in Sri Lanka
AUG
30
THE UN RANKS
SRI LANKA AS THE COUNTRY
WITH THE SECOND HIGHEST
NUMBER OF DISAPPEARED
IN THE WORLD
சங்கத்தமிழ்

# அகஸ்ட் 30, 2024 "வடக்கு கிழக்கில் பாரிய போராட்டம்"

# அனைத்து தரப்பின் ஆதரவையும் கோரி நிற்கும் வலிந்து காணாமலாக் கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்

06.08.2024




பன்னாட்டுச் சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் நாளன்று நாம் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு நிலத்திலும் புலத்திலும், தமிழ்நாட்டிலும் உள்ள அமைப்புக்களும் பிரதிநிதிகளும், மக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் போராட்டத்திற்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான விசேட ஊடக அறிக்கையும் வெளியிடப் பட்டது.

அந்த ஊடக அறிக்கையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இனவழிப்புக்கு சர்வதேச விசாரணை வழியாகவே நீதி வழங்க வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தி நிற்கின்றோம். 2700 நாட்களை கடந்தும் கடந்த 15 ஆண்டுகளாகவும் தெருவில் நின்று எம் பிள்ளைகளின் விடுதலைக்கும் நீதிக்குமாக தொடரும் போராட்டத்தை சிறீலங்கா அரசினால் ஒருபோதும் அடக்கி ஒடுக்க முடியாது பன்னாட்டு நீதி கிடைக்கும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என்பதையும் நாம் மீண்டும் சிறிலங்கா அரசுக்கு நினைவுபடுத்துகின்றோம்.

ஆகத்து 30ஆம் நாள் பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும் அன்றைய நாளில் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டத்தை நடாத்த இருக்கின்றோம்.

அது தொடர்பான தெளிவுபடுத்தலாக இந்த அறிக்கையை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினராகிய நாம் ஊடகங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

உலகமெங்கும் காணாமல் ஆக்கப்படுதல் என்பது ஒரு ஆயுதமாகவே கையாளப்படுவதாக ஐ.நா கூறுகின்றது. அதாவது ஜனநாயகத்திற்கு எதிரான மனித உரிமைகளுக்கு எதிரான இனங்களுக்கு எதிரான ஒரு ஆயுதமாக பிரயோகிக்கப்படுகின்றது.

அந்த வகையில் உலகம் முழுவதும் பல இலட்சக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. சில நாடுகளில் அதன் ஜனநாயகத்திற்கு எதிரான - மக்கள் விரோதப் போக்கிற்கு எதிராக செயற்படுகின்ற நபர்கள் குடும்பம் குடும்பமாகவும் தனி உறுப்பினர்களாகவும் காணாமல் ஆக்கப்படுகின்றனர்.

அந்த வகையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய சரியான புள்ளி விபரங்களை தொகுத்துக்கொள்ளுவதற்கு அந்த நாடுகள் திட்டமிட்ட அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்காமல் புள்ளி




விபரங்களை மறைத்து வருவதாகவும் ஐ.நா கூறுகிறது. போர், பஞ்சம், வன்முறை போன்ற சூழலில் காணாமல் ஆக்கப்படுதல்கள் சமூக அவலத்தை ஏற்படுத்தியுள்ளன.

முதலாம் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் தொடங்கிய காணாமல் ஆக்கப்படுதல் என்பது உலக அளவில் பரந்து விரிந்து செல்கிறது. அந்த வகையில் அர்ஜன்டீனா, சிறீலங்கா, வியட்னாம், குர்திஸ்தான், ஆப்கானிஸ்தான், பர்மா போன்ற பல நாடுகளில் இனங்களுக்கும் சமூகங்களுக்கும் எதிரான ஆயுதமாக கையாளப்படுகின்றது.

போரில் கொல்லப்படுவதை விடவும் ஒரு இனத்திற்கு நீண்ட துயரத்தையும் நீண்ட அழிவையும் நீண்ட மனச் சிதைவுகளையும் ஏற்படுத்தவே காணாமல் ஆக்கப்படுதல் என்பது கொடூரமான ஆயுதமாக பிரயோகிக்கப்படுகிறது ஈழத்தைப் பொறுத்தவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது முள்ளிவாய்க்காலிலோ, அதற்கு முந்தைய சில ஆண்டுகளிலோ தொடங்கிய நிகழ்வல்ல.

ஈழத் தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கோரி போராடத் துவங்கிய காலத்தில் இருந்தே வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது இன ஒடுக்குமுறையின் ஒரு ஆயுதமாக கையாளப்பட்டு வந்துள்ளது.

1996ஆம் ஆண்டு ஐ.நா அறிக்கையின்படி, 1980- 96 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 11,513 பேர் காணாமல் போயிருப்பதாகவும்; 1996-ஆம் ஆண்டு 'ஆசிய மனித உரிமை ஆணையத்தின்' அறிக்கைப்படி, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் 16,742 என்றும் கூறப்பட்டுள்ளது.

எனினும் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாக இருக்கலாம் என்பதை இலங்கை மனித உரிமை செயற்பாட்டாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதற்குப் பிந்தைய காலத்தில் கோத்தபாய ராஜபக்சவின் வெள்ளை வான் கடத்தல் வாயிலாக மாத்திரம் வடக்கு கிழக்கில் மாத்திரமின்றி தென்னிலங்கையிலும் வசித்த பல ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

அதாவது முள்ளிவாய்க்காலுக்கு முந்தைய காலத்தில்கூட தமிழ் இளைஞர்களை அடக்கி ஒடுக்கவும் ஆயுதப் போராட்டத்தின் மீது அச்சத்தை ஏற்படுத்தவும் இளைஞர் சக்தியை இல்லாமல் செய் யவும் ஈழத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது கட்டமைக்கப்பட்ட ரீதியில் சிறீலங்கா அரசின் இயந்திர நட வடிக்கையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரின் போது சுமார் ஒன்றரை இலட்சம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் ஒரு இலட்சம் பேரளவில் இறுதிப்போரில் இன வழிப்பு செய்யப்பட்டவர்களாக கருதப்படுகின்றது. இப்போரில் சுமார் ஐம்பதாயிரம் பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 21 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கையளிக்கப்பட்டும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யப்பட்டு தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதைப் போன்றே இன்னொரு உபாயமாக காணாமல் ஆக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் போதும் இறுதியாக முள்ளிவாய்க்காலிலும் அதன் பின்பும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதையே இன்று ஈழத் தமிழ் மக்கள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சரணடைந்தவர்கள் இறந்துவிட்டார் என்றும் சரணடைந்தவர்கள் இப்போது இல்லை என்றும் மழுப்பல் பதில் கூறுகின்ற சறிலங்கா அரசாங்கம் அவர்களை என்ன செய்தது என்பதை இந்த உலகத்திற்கு அறிவிக்க வேண்டும்? அவர்கள் எப்படி வலிந்து இல்லாமல் செய்யப்பட்டார்கள் என்றும் இவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் சிங்கள அரசு அறிவிக்க வேண்டும். கொன்றழிக்கப்பட்ட நிலையில் ஈழ இறுதிப் போரில் 59 மேற்பட்ட குழந்தைகள் சிறீலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

பல நூற்றுக் கணக்கான குழந்தைகள் முள்ளிவாய்க்காலில் 21 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்களுடன் 59 மேற்பட்ட குழந்தைகள் சரணடைந்துள்ளனர்.

இவர்களுக்கும் என்ன நடந்தது என்பதை சொல்ல வேண்டும் என்றே ஈழத் தமிழ் இனம் போராடுகிறது. 59 மேற்பட்ட குழந்தைகளை வலிந்து காணாமல் ஆக்குவதன் வாயிலாக உலகில் குழந்தைகளை வலிந்து காணாமல் ஆக்குவதில் முதல் தர நாடு என்ற பெருமையை சிங்கள தேசம் பெற்றுள்ளது.

குழந்தைகளின் உரிமை தொடர்பிலும் இனவழிப்பு தொடர்பிலும் வரைவிலக்கணங்களை கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையும் இன்ன பிற நிறுவனங்களும் சிங்கள இனவழிப்பு அரசை மயிலிறகால் தடவுவதே உலக மக்களுக்கு வேதனை தருகின்ற விடயமாகும்.

இந்த நிலையில் ஈழ மண்ணில் சிறீலங்கா அரசினால் இன வழிப்பு நோக்கத்திற்காக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளின் விடுதலை மற்றும் நீதியை வலியுறுத்தி பன்னாட்டுச் சமூகத்தின் நீதிக்கான தலையிடலை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான எதிர்வரும் 30ஆம் நாளன்று நாம் முன்னெடுக்கவுள்ள போராட்டத்திற்கு நிலத்திலும் புலத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள அமைப்புக்களும் பிரதிநிதிகளும், மக்களும் ஒத்துழைப்பை வழங்குமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது.




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# 1977ஆம் ஆண்டு இனப்படுகொலை ஆகஸ்ட் 12-22

1977ஆம் ஆண்டு யூலை மாதம் இருபத்தோராம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலின் விளைவாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது. அந்தப் பொதுத் தேர்தலில் இலங்கையில் மொத்தம் 168 தொகுதிகளில் நூற்றுநாற்பது தொகுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கைப்பற்றியது. இது 5/6 பங்கு. இந்த பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி இருபத்துநான்கு தொகுதிகளில் போட்டியிட்டு பதினெட்டு ஆசனங்களைக் கைப்பற்றியது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களைக் கைப்பற்றிப் படுதோல்வி அடைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தாம் பதவிக்கு வந்தால், தமிழீழ தேசிய மன்றத்தைக் கூட்டுவதாகவும், தமிழீழத்தைப் பெறுவதற்கான சகல நடவடிக்கையில் ஈடுபடுவதாகவும் கூறியிருந்தார்கள். தமிழ் மக்களும் அதனை ஏற்றுக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆணை பிறப்பித்தார்கள். இது சிங்கள ஆட்சியாளர்களிற்குப் பேரிடியாக அமைந்தது. அவர்கள் இனக்கொலையொன்றைத் தூண்டுவதற்கான வாய்ப்பொன்றை எதிர்பார்த்திருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று 1977ஆம் ஆண்டு காலகட்டத்தில் அவர்களுக்குக் கிடைத்தது.

இக் காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக் கண்காட்சிக்கு சிவில் உடையில் வந்த யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்தைச் சேர்ந்த சிறீலங்காக் காவற்றுறையினர் அங்கு வந்திருந்த பெண்களோடு பாலியற் சேட்டைகளில் ஈடுபட்டார்கள். இதனால் ஆத்திரமடைந்த யாழ்ப்பாணப் பொதுமக்களுக்கும் காவற்றுறையினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு அது கைகலப்பில் முடிந்தது. பொதுமக்களது எதிர்ப்புக்கு அஞ்சி சிவில் உடையில் நின்ற காவற்றுறையினர் ஓடித் தப்பினார்கள்.

யாழ்ப்பாணம் காவற்றுறை நிலையத்திற்குச் சென்ற அவர்கள் ஆயுதபாணிகளாகப் பல நூற்றுக்கணக்கான காவற்றுறையினரை இறக்குகளிலும், ஜீப் வண்டியிலும் ஏற்றிக் கொண்டு மீண்டும் பொருட்காட்சி நடைபெற்ற இடத்திற்கு வந்து குழப்பத்தில் ஈடுபடலானார்கள். பதிலுக்கு யாழ்ப்பாணப் பொதுமக்களும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடலானார்கள். யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியிலுள்ள மதுபானக் கடையை காவற்றுறையினர் உடைத்துவிட்டு மது போதையில் ஆடிப் பாடினார்கள். யாழ்ப்பாண நகருக்குத் தீமூட்டி எரித்தார்கள். இதனால் இச்சம்பவம் ஏற்பட்டது.

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிங்கள மாணவர்களும் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதற்காக யாழ் பல்கலைக்கழக நிஉவாகம் அவர்களை தென்னிலங்கைக்கு அனுப்பிவைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த இரவுத் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அதில் பயணம் செய்த சிங்கள மாணவர்கள், பௌத்த பிக்கு மாணவன் ஒருவனை இருக்கையில் படுக்கவைத்து வெள்ளைத் துணியால் மூடிவிட்டு அதன் மீது சிவப்பு மையை ஊற்றி தமிழர்கள் புத்த பிக்குவைக் கொன்று விட்டார்கள் என்றும் யாழ்ப்பாணத்தில் நயினாதீவுப் புத்த விகாரையை உடைத்து விட்டார்கள் என்றும் சத்தமிட்டு முழக்கமெழுப்பினர். இதனால் அந்த் தொடருந்தில் பயணம் செய்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள்.

இதேவேளையில் கொழும்பிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்த இரவுத் தபால் தொடருந்து அனுராதபுரம் தொடருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, அந்தத் தொடருந்தும் சிங்களவரால் தாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழர்களுக்கு எதிரான வன்செயல்கள் நாடு பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டன. திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி, கொழும்பு போன்ற பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.



இந்த இனக்கொலை பற்றிய விபரங்களை நாடாளுமன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எடுத்துக் கூறினார்கள். ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன எதையும் கேட்க வில்லை. அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தவும் இல்லை. ஊரடங்குச் சட்டத்தை அமுலாக்கவும் இல்லை. மாறாகத் தமக்கு முன்னைய அரசாங்கம் போல் அவசரகாலச் சட்டத்திற்கு நாட்டை ஆள விருப்பமில்லை என்றும் மாறாக சாதாரண சட்டத்தின் கீழேயே நாட்டை ஆளப்போவதாக கூறியதோடு "போரா? சமாதானமா?" என்ற போர்ப்பிர கடனம் ஒன்றையும் வெளியிட்டார். அதாவது தமிழ் மக்களைப் பார்த்து "நீங்கள் போருக்குத் தயார் என்றால் நானும் போருக்குத்தயார். உங்களுக்குச் சமாதானம் தேவை என்றால் நானும் சமாதானத்திற்குத் தயார். இதைத் தான் எமது மக்கள் சொல்கிறார்கள்" என்று நாடாளுமன்றத்திற்குள்ளேயே சன்னதம் போட்டார்.

இதன் விளைவு சிங்களக் காடையர்களுக்குத் தமிழ்மக்களைக் கொல்லவும், தமிழர் சொத்துக்களைச் சூறையாடவும் தமிழர் வீடுகளுக்குத் தீ வைக்கவும் ஜே.ஆர் அரசினால் வழங்கப்பட்ட வெளிப்படையான உரிமமாகவே கருதப்படலாயிற்று. 1977ஆம் ஆண்டு இனக்கொலையைத் தொடர்ந்து, இக்காலம் பற்றி விசாரணை செய்வதற்காக இளைப்பாறிய உயர் நீதிமன்ற நீதியரசர் சன்சோனி தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை ஜே.ஆர். நியமித்தார். விசாரணை முடிவில் சன்சோனி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் அவர் குறிப்பிடுகையில், இந்த இனக்கொலைக்கு காவற்றுறையின் பொறுப்புணர்ச்சியற்ற போக்கும், அரசியல்வாதிகளின் பேச்சுக்கள், வதந்தி என்பனவே காரணமென அடையாளப்படுத்தினார்.

இந்த இனக்கொலையில் எல்லாமாக முன்னூறு வரையிலான தமிழர்கள் கொல்லப்பட்டதாக எடுத்துச் சொன்னார். ஆனால் வேறு அரசசார்பற்ற நிறுவனங்களினால் சேகரிக் கப்பட்ட தரவுகளின்படி ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக தெரியவருகின்றது. பல நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர் என்றும் கத்திக்குத்து, கத்திவெட்டு, இரும்புக் கம்பிகள், பொல்லுகள் என்பனவற்றால் இவை ஏற்படுத்தப்பட்டவை என்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டன. இனக்கொலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கும்படி விசாரணைக்குழு பரிந்துரை செய்தபோதும், எத்தகைய நட்டஈடும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசால் வழங்கப்படவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சாம்பல்தோட்டப் படுகொலை 1984

வவுனியா நகரின் மன்னார் ரோட்டிலிருந்து மூன்று கி.மி.ல் உள்ளது, சாம்பல் தோட்டம் கிராமம். இன்று இவ்விடம், நாவலர் பாணி என்று அழைக்கப்படுகிறது.

1984 திம்பு பேச்சு வார்த்தைக்கு முன்னர் இங்கு நடைபெற்ற படுகொலையைப்பற்றி அவ்வூரைச்சேர்ந்த பெயர் சொல்ல விரும்பாத ஒரு மங்கை கூறியாது,

"ஒரு திருமண நிகழ்ச்சி முடிவுற்று தனியாருக்க சொந்தமான ஒரு பேருந்திருந்தில் 70 தமிழர்கள் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்பேருந்தை பம்மைமேடு என்ற இடத்தில் சிங்கள இராணுவம் தடுத்து நிறுத்தி, அதிலிருந்த அனைவரையும் தேக்கவத்தை என்ற இடத்திலுள்ள தேக்கு மரத்தோப்புக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் 15 பெண்களையும், குழந்தைகளையும் தனியே பிரித்து அழைத்துச் சென்றனர். மீதமிருந்த ஆண்களை தேக்கு மரத்தைப் பார்க்கச் சொல்லி விட்டு, தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கண்முடித்தனமாய் சுட்டு தள்ளினார்கள்.


சிங்கள இராணுவம், அங்கு குண்டடிபட்டு கிடந்த உடல்களை பூட்ஸ் காலால் உதைத்து புரட்டிப் பார்த்து, எவரேனும் உயிருடன் இருக்கின்றனரா, என சோதனையிட்டனர். அங்கு ஏவராவது வலியால் புலம்பும் சப்தம் கேட்டால், திரும்பவும் அவர்கள் சாகும்வரை சுட்டனர். ஆரம்பத்தில் துப்பாக்கியால் சுட்டபோது, ஒருவர் மயக்கமுற்று கீழே விழுந்து விட்டதால், அவருக்கு குண்டு எதுவும் பாயவில்லை. ஆனால் குண்டடிபட்ட வேறு நபர்கள் இருவர் இவர் மீது இரத்த வெள்ளத்தில் விழுந்தனர். இதனால், மயக்கமுற்றிருந்தவர் உடல் மீது இரத்தம் படிந்தது. இராணுவத்தினர் மயக்கமுற்றிருந்தவரை உதைத்த போது, அவர் ஏதும் சப்தம் எழுப்பாதினால், மயக்கமுற்றவரும் இறந்திருப்பார் என எண்ணி சென்று விட்டனர். இராணுவம் அங்கிருந்து சென்றது தெரிந்தவுடன், எழுந்து அருகில் உள்ள தாலம்பொக்காணை என்ற கிராமத்திற்கு ஓடினார். அக்கிராமத்தில் தமிழர்களின் நண்பராகவும் விடுதலைப்புலி ஆதரவாளராகவும் ஒரு இஸ்லாமிய தலைவர் ஒருவர் இருந்தார். அந்த தலைவர் ஒரு கடை வைத்திருந்தார். தப்பி வந்த தமிழர், நடைபெற்ற சம்பவம் குறித்து அந்த இஸ்லாமிய தலைவரிடம் சொல்லிவிட்டு, அக்கிராமத்திலிருந்த காவல் துறைக்கு சொல்ல பயந்து, யாழ்ப்பாணதிற்கு சென்றுவிட்டார். இஸ்லாமியரும் கிராம மக்களும் படுகொலை நடந்த இடத்திற்கு சென்று பார்த்தனர், செய்தி காட்டுத் தீயாய் பரவியது.



தப்பி வந்த அந்த தமிழருக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு பாதுகாப்பாய் அனுப்பிவைக்கப்பட்டார். நாங்கள் படுகொலை நிகழ்ந்த இடத்திற்கு சென்று பார்த்தோம். எங்கள் இருப்பிடம் அருகிலேயே இது நடந்துள்ளது. படுகொலை நடந்த இடத்தில் பெண்களின் உடல்கள் காண முடியவில்லை. அப்பெண்கள் எங்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்பதும், அவர்களின் கதி என்ன என்பதும் தெரியவில்லை என தப்பி வந்தவர் கூறினார்."

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)

# 1977 ஆகத்து மாதம் தமிழின அழிப்பின் புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்




ஆரம்பம் : எரிந்த பனையோலைக் கூடகம்



தீயில் கருகிய ஜீப் வண்டி




கொள்ளையடிக்கப்பட்ட 'லக்சலா'




(மேல்) அடையாளம் காணப்படாத உயிர்ப்பலி.
(கீழ்) உதாரணத்துக்கு ஒரு சைக்கில்.



எரிந்து... உடைந்து ... சிதறி....




பாவிகள் இட்ட தீயில் பாழடைந்த தையல் கடைகள்



எரிந்து முடிந்த பழைய மாக்கற்



அடித்து நொருக்கப்பட்ட மோட்டார் வண்டி.



வலது காலை இழந்த வரதராசன்



வந்து சேர்ந்த அகதிகளில் ஒரு பகுதியினர்



தொடைகளைத் துளைத்த சன்னங்கள் - எதிர்வீரசிங்கம்



துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான இளைஞர்கள்
பாக்கியராசா (ரவி) - ஆனந்தவேல்.



வான் நோக்கும் வள்ளுவர் - நிலம் நோக்கும் ஔவை



சிதைந்து கவிழ்ந்த சிவகுமாரன் - சோமசுந்தரப் புலவர்

# 1977 ஆகஸ்ட் மாதம் தமிழினப் படுகொலை புகைப்பட காட்சிகள் யாழ்ப்பாணம்



# பூந்தோட்டச்சந்திப்படுகொலை 10.08.1985

வவுனியா நகரிலிருந்து கிழக்கே மூன்று கி.மீ. தூரத்தில் பூந்தோட்டம் அமைந்துள்ளது.

வயல்களாற் சூழப்பட்ட இக்கிராமத்தில் அதிக மானவர்கள் விவசாயிகளாவர்.

10.08.1985 அன்று காலை 7மணியளவில் வழமைபோல் மக்கள் தமது அன்றாட செயற் பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சந் தைக்குப் பொருட்கள் வாங்க மற்றும் விற்கச்செல்வோர், வைத்தியசாலைக்குச் செல்வோர், பாடசாலை செல்வோர் எனப் பூந் தோட்டம் வீதியால் அதிகளவான மக்கள் பயணம் செய்தனர். அந்த நேரம் அவ்வீதியால் வாகனத்தில் வந்த காவற்றுறையினர் வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபொதுமக்கள் மீது துப்பாக்கியால் சுட்டதில் பத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர்காய மடைந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 வெள்ளையன் தேவதாஸ் - லொறிகிளினர் - 20
02 பொன்னம்பலம் வில்வராஜ் - வியாபாரம் - 22
03 கதிரேசு சுந்திரசேகரம் மருந்துத் - தொழிலாளர் - 25
04 சிங்காரம் நாகலிங்கம் - தொழிலாளி - 33
05 முனியாண்டி மூக்கன் - தொழிலாளி - 34
06 வீரமாரெட்டியார் கோவிந்தராஜ் - வியா பாரம் - 38
07 சின்னக்கருப்பன் கிட்ணசாமி - தொழி லாளி - 40
08 துரைராஜா நடேசபிள்ளை - உதவி முகாமையாளர் - 43
09 கறுப்பையா ராமராஜ் - வியாபாரம் - 48
10 கோவிந்தசாமி சிங்காரவேலு - கமம் - 63

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)



# கள்ளம்பற்றைச்சந்திப் படுகொலை 10.08.1985

திருகோணமலை மாவட்டத்தின் புகழ் பெற்ற இடங்களில் ஒன்றான திரியாய்க் கிராமம் திருகோணமலையிலிருந்து ஒரு கி.மீ தூரத் தில் அமைந்துள்ளது.1985ஆம் ஆண்டு இனக்கலவரத்தினால் பாதிப்படைந்த மக்கள் அகதி முகாம்களிற் தஞ்சமடைந்திருந்தனர். முகாமிற்கு வந்த இராணுவத்தினர் வன் முறைகளால் இடம் பெயர்ந்து வந்திருந்த மக்கள் ஒன்பது பேரைக் கைது செய்து அழைத் துச் சென்றார்கள். இவ்வாறு கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட மக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாக கள்ளம் பற்றைச் சந்தியிலிருந்து மீட்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்து வந்த தமிழர்கள் ஆவர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01 நாராயணன் ஜெகநாதன் - கல்லுடைத்தல் - 48
02 சுப்பிரமணியம் நாராயணபிள்ளை - கிராமசேவகர் - 45
03 மாணிக்கம் கிருஸ்ணமூஉத்தி - -
04 நாகேஸ் -

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)



# துவரங்காடு வரோதயநகர் படுகொலை 17.08.1985

திருகோணமலை நகரிலிருந்து நான்கு மைல் தொலைவில் வரோதயநகர்க் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்திற் பெரும் பாலானவர்கள் விவசாயிகளும் கூலித் தொழி லாளர்களும் ஆவர். 17.08.1985 அன்று நண்பகல் 12.30 மணியளவில் ஆயுதம் தரித சிங்களக் குழுவினர் வெள்ளை வாகனத்தில் கிராமத்திற்குள் நுழைந்து அப்பகுதி மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் பத்துப் பேர் உயிரிழந்தனர். எட்டுப் பேர்படுகாய மடைந்தனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01 இரத்தினம் குபேந்திரராசா - குழந்தை - 01
02 கந்தன் மாணிக்கம் - முதியவர் - 70
03 கதிர்காமு நாகேஸ்வரி - தொழிலாளி - 42
04 குணராசா மதியழகன் - மாணவன் - 08
05 குணராசா கெங்காதேவி - தொழிலாளி - 33
06 குணராசா வசிகரன் - குழந்தை - 01
07 தேசிங்கம் இன்பமலர் - சிறுமி - 06
08 தேசிங்கம் ஜெயந்தி - தொழிலாளி - 12
09 வெள்ளையன் திருச்செல்வம் - தொழிலாளி - 32
10 சீனியர் மாணிக்கம் - தொழிலாளி - 67

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956- 2008)

# வயலூர் படுகொலை 24.08.1985

1972ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவிற் பிரதேச செயலர் பிரிவில் காணி இல்லாதிருந்த ஏழை மக்களுக்கு வயலூர்ப் பிரதேசத்தில் காணியினை வழங்கி அம்மக்களைக் குடியேற்றியதன் மூலம் இக்கிராமம் உருவாகியது. வயலூர்க் கிராமத்தில் வாழ்ந்தவர்கள் விவசாயத்தையே தமது பிரதான தொழிலாக மேற்கொண்டார்கள். இக்கிராமம் எத்தகைய அபிவிருத்திகளும் இன்றி வறிய மக்கள் வாழும் பிரதேசமாகும்.

1985.08.24 ஆம் திகதி அதிகாலையில் வயலூர்க் கிராமத்தினைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடுகளில் இருந்த பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்களைக் கைதுசெய்து தங்களுடன் அழைத்துச் சென்றார்கள். தமது கணவன்மாரை இராணுவத்தினர் கைதுசெய்து கொண்டு செல்ல அவர்களின் பின்னால் மனைவிமாரும் பிள்ளைகளும் சென்றார்கள். குமரன்குளம் நோக்கி காட்டுப் பாதையூடாக கைதுசெய்து கொண்டு செல்லப்பட்ட ஆண்களின் பின்னால் சென்ற பெண்களை சிறிது தூரம் சென்றதும் திரும்பிப் போகுமாறு இராணுவத்தினர் பயமுறுத்தியதுடன், ஆண்கள் தங்களுக்கு பாதை காட்டிவிட்டுத் திரும்பி வருவார்கள் எனவும் கூறினார்கள்.

ஐம்பது பேர் வரையான ஆண்கள் இராணுவத்தினராற் குமரன்குளம் நோக்கி அழைத்து செல்லப்பட்டார்கள். இவர்களில் ஒரு சிலரே தப்பி மீண்டும் வயலூர்க் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் சுட்டும் வெட்டியும் கொலை செய்யப்பட்ட உடல்கள் குமரன்குளம் பகுதி முழுவதும் காணப்பட்டன. காயத்துடன் தப்பிய இருவரில் ஒருவருக்கு வாயினுள் துப்பாக்கியை வைத்துச் சுட்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து வயலூர்க் கிராமத்து மக்கள் உடுத்த உடுப்புடன் இடம் பெயர்ந்து வேறு ஊர்களுக்குச் செல்ல வயலூர்க் கிராமம் மக்களற்ற சூனியப் பிரதேசமாக மாறியது.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# நெல்லியடிச் சந்தைப்படுகொலை 29.08.1990

யாழ். குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் நெல்லியடி, கரவெட்டிப் பிரதேசங்கள் அமைந்துள்ளன. இது யாழ் - பருத்தித்துறை வீதியில் பருத்தித்துறையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் அமைந்துள்ளது. வடமராட்சியின் தெற்கு மற்றும் மேற்குப் பிரதேசங்களுக்கு மையமாக நெல்லியடி நகரமும் வடமராட்சியின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கு மையமாக பருத்தித்துறை நகரும் அமைந்துள்ளது. நெல்லியடிப் பிரதேசத்தில் வாழ்கின்ற இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களின் தேவைகளை நிறைவு செய்வதாக நெல்லியடிச் சந்தை உள்ளது.

29.08.1990 காலை 9:30 மணியளவில் வழமைபோல தமது அன்றாட தேவைகளை நிவர்த்தி செய்யும் முகமாக நெல்லியடி மத்திய சந்தைக்குப் பல தரப்பட்ட கிராமத்திலிருந்தும் மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். வடமராட்சி வான் பரப்பிற்குள் பிரவேசித்த இரண்டு பொம்பர் விமானங்களும் ஒரு அவ்ரோ விமானமும் இணைந்து நெல்லியடி மத்திய சந்தைப் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதலை நடத்தின. காலைவேளையில் சந்தையில் பொருட்களை வாங்குவதற்கும் விற்பதற்குமென வந்த மக்களில் சிறுவர்கள், பெண்கள் உட்பட பதினாறு பேர் சம்பவ இடத்தில் உயிரிழக்க இருபத்துநான்கு பேர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இராசையா புஸ்பவதி - வியாபாரம் - 50
02. ஜப்பான் - 50
03. நாகராசா ஆனந்தரவி - வியாபாரம் - 20
04. கிட்டினன் ஞானரூபன் - மாணவன் - 12
05. மகேசன் சண்முகேஸ்வரமூர்த்தி - கமம் - 36
06. முருகையா நிர்மலேஸ்வரன் - கமம் - 18
07. அப்புத்துரை குணரட்ணம் - வியாபாரம் - 54
08. பொன்னம்பலம் சோமஸ்காந்தசிவம் - அத்தியட்சகர் - 58
09. பொன்னையா மகேந்திரன் - அதிகாரி - 48
10. சோமாஸ்கந்தசிவம் மங்களநாயகி அம்மை - அதிபர் - 58
11. செல்வன் - மாணவன் - 14
12. சந்திரசேகரம் வல்லிபுரம் - கமம் - 70

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மண்டைதீவில் காணாமற்போனோர் 25.08, 23.09 1990

யாழ். நகரத்திற்குத் தெற்காக வேலணைப் பிரதேசசேயலகப்ப பிரிவினுள் ஆயிரத்து இருநூறிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மண்டைதீவுப் பிரதேசம் அமைந்துள்ளது.

25.08.1990 அன்று சிங்கள இராணுவத்தினர் ஊர்காவற் துறையிலிருந்து மண்டைதீவு நோக்கி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்நடவடிக்கையின் போது மக்களைப் பாதுகாப் புக்கருதி ஆலயங்களிற் தங்குமாறு முதல் நாள் உலங்குவானூர் தியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு அறிவித்தனர். இதன்படி மண்கும்பான், அல்லைப் பிட்டி போன்ற கிராமத்து மக்கள் மண்கும்பான் அந்தோனியர் தேவாலயத்திலும், அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் ஆலயத்திலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

24.08.1990 அன்று மண்கும்பான் அந்தோனியார் ஆலயத்திலும், இருபத்தைந்தாம் திகதி அதிகாலை அல்லைப்பிட்டி பிலிப்நேரியார் கோயிலிலும் தஞ்சமடைந்த மக்களில் பதினைந்து வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்டவர்களை சிங்கள இராணுவத்தினர் கைதுசெய்தனர். இதில் ஒரே குடம்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர் என மண்டைதீவில் இருபத்தெட்டுப் பேரும், அல்லைப்பிட்டியில் முப்பதிரண்டு பேரும், மண்கும்பானில் பத்துப்பேருமாக மொத்தம் எழுபது பேர் கைது செய்யப்பட்டனர்.

28.08.1990 இல் கைதுசெய்தவர்களில் ஒரு சிலர் விடுவிக்கப்பட்டனர். பின்பு 23.09.1990 சிங்கள இராணுவத்தினரும், துணைக் குழுக்களும் சேர்ந்து மண்கும்பான் அ.த.க பாடசாலையிலிருந்து பதினெட்டு மாணவர்களைக் கைது செய்தனர். எல்லாமாக மூன்று கிராமத்திலும் எண்பத்தெட்டுப் பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் எவரும் இன்று வரை விடுதலையாகவில்லை.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த விஜயரட்ணம், சுகிர்தரட்ணம், பிரேமரட்ணம் ஆகிய மூன்று பிள்ளைகளின் தந்தையான யேசுரட்ணத்திடம் இது தொடர்பாகக் கேட்ட போது:

“கைது செய்யப்பட்ட என் பிள்ளைகளின் நிலை தொடர்பாக 1991 ஆம் ஆண்டு முதல் வாரத்தில் நாங்கள் சீறிதர்வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்திற்குச் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டோம். அப்போது அவர் அநேகமாக மூன்று பிள்ளைகள் என்றால் ஒன்றும் நடந்திருக்காது நான் அனுராதபுரம் போய்வந்து சொல்கிறேன் என்றார். அப்போது நாங்கள் பிள்ளைகளின் ஆவணங்களைக்



கொடுத்தபோது அதைப் பிரதி பண்ணித் தரும்படிகேட்டார். அதன்படியே நாங்கள் அடுத்த நாள் அவரிடம் கையளித்தோம். அதன் பின்பு கூட்டுப்படைத் தளபதியாக இருந்த டென்சில் கொப்பேகடுவ அவர்களிடம் மனு செய்தோம். நேரிலும் அவரிடம் பல தடவைகள் கேட்டோம். ஒவ்வொரு முறையும் டக்ளஸ் தேவானந்தாவோடுதொடர்பு கொண்டீர்களா என்றுதான்


# மண்டைதீவில் காணாமற்போனோர் 25.08, 23.09 1990

கேட்பார். கடைசி முறையாக 13.05.1992 நானும், அப்போதைய கல்விப்பகுதி பிரதி அமைச்சர் இராஜமனோகரி புலேந்திரன் அவர்களும் டென்சில் கொப்பேகடுவ அவர்களைக் கேட்டபோது, அவர் நான் இம்முறை தீவுப் பகுதிக்குப் போய்வந்து உங்கள் பிள்ளைகளைக் காட்டுகிறேன் என்றார். அதன்பின்னர் 1992 ஆனி மாதம் இறுதி வாரத்தில் கொழும்பு பார்க் வீதியில் இருக்கும் ஈ.பி.டி.பி செயலகத்தில் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டோம். அவரும் தான் இம்முறை தீவுப்பகுதிக்குப் போய் வந்து சொல்லுவதாகக் கூறினார். 14.08.1992 திருமலை சீ.சீ.எம்.பி சிறையில் எமது பிள்ளைகள் உட்பட எண்பது பேர் மதிய உணவின் பின்னர் பாதுகாப்பாக வெளியே கொண்டு செல்லப்பட்டனர் என தகவல் கிடைத்தது. அதன் பின்னர் 23.12.1994 இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் மனு பண்ணினோம். அப்போது அவர் ஆணைக்குழு விசாரணை செய்யப் போவதாகவும், அதற்கு எங்களை விண்ணப்பம் பண்ணும்படியும் சொன்னார். அதன்படியே ஆணைக்குழு விசாரணைக்கு விண்ணப்பித்தோம். 12.06.1996 இல் ஆணைக்குழு விசாரணைக்கு வரும்படி அழைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அப்போது ஆணைக்குழுவினர் உங்கள் பிள்ளைகளைப்பற்றி டக்ளஸ் தேவானந்தாவிடம் கேளுங்கள் என்று கூறினார்கள். ஆனால் நாங்கள் கேட்கமுடியாது நீங்கள் கேட்டுச்சொல்லுங்கள் என்று கூறினோம். அதன்படி தாங்கள் கேட்டுச்சொல்லுவதாகக் கூறினார்கள். ஆனால் இதுவரை எவ்வித பதிலும் எனக்குக் கிடைக்கவில்லை."

சிறீலங்கா இராணுவத்தினராலும் துணைக் குழுக்களாலும் கைது செய்யப்பட்டு காணாமற் போனவர்களில் பலர் சித்திரவதைகளின் பின் உயிரிழந்ததாகவும், அவர்களது உடல்களை மண்டைதீவில் வீட்டு வளவினுள் உள்ள கிணற்றிற் போட்டதாக ஊர் மக்கள் தெரிவித்தனர். இவர்களிற் சிலரின் எலும்பு கூடுகளும் மீட்கப்பட்டன. இவ்வாறு காணாமற் போய் உயிரிழந்தவர்களின் நினைவாக மண்டைதீவில் நினைவுக்கல் கட்டப் பட்டுள்ளது.

25.08.1990 - 23.09.1990 வரை மண்டைதீவில் கைது செய்து காணமற் போனவர்கள் விபரம்:

1. சூசைப்பிள்ளை செல்வ நாயகம் (35)
2. இ. சுதாகரன் (20)
3. இ. விபுலானந்தர் (30)
4. இரட்ணம் ஜெயசீலன் (23)
5. உதயகுமார் (-)
6. ந. குகானந்தராசா (24)
7. பாலசிங்கம் (30)
8. பத்திநாதர் டயஸ் (22)
9. பத்திநாதர் சென்யூட் (27)
10. பழனித்துரை சத்திய பாலன் (34)
11. பி.தவம் (18)
12. பி. ஜெயச்சந்திரன் (18)
13. பி. சதீஸ்வரன் (-)
14. பி. பத்மராசா (20)
15. ரி. இருதயராசா (26)
16. ரி. ஆரோக்கியநாதன் (23)
17. ரி. அருள்நேசன் (22)
18. ரி. யோகராசா (18)
19. ரி. ஞானேந்திரன் (25)
20. ரி. செல்வரட்ணம் (20)
21. ரி. சுந்தரலிங்கம் (24)
22. ரி. சாந்தலிங்கம் (20 )
23. ரி. சிமோன் (20 )
24. ரி. ராஜ்குமார் (32)
25. ரி. ராதாகிருஸ்ணன் (-)
26. ரி. ரவீந்திரன் (21)
27. வை. எட்வேட் (21)
28. த. பாலரட்ணம் (20)
29. திரநாயகம் சட்டநாத பிள்ளை (32)
30. மா. தவசீலன் (24)
31. மடுதீன் ஸ்ரானிக் (21)
32. மிசேல் ஸ்ரானிக் (19)
33. மிசேல் சில்வஸ்ரார் (32)
34. அ. அழகராசா (19)
35. அ. ஜெயசீலன் (23)
36. அன்ரன் அசில்லாஸ் (28)
37. அன்ரன் அருள்தாஸ் (26)
38. அந்தோனி ஆரோக்கிய ராசா (23)
39. அந்தோனி றொபேட் (20)
40. ஆர். முருகானந்தன் (21)
41. ஆர். ரவீந்திரன் (20)
42. அலம்பின் றொபேட் (18)
43. ஜெயக்குமார் (22)
44. ஜோர்ச் சில்வஸ்ரார் (20)
45. ஜேசுதாஸ் (-)
46. யோ. விஜயபாலன் (21)
47. நோபேட் ரமேஸ் (19)
48. கே. இந்திரகுமார் (21)
49. கே. இராசசேகரன் (21)
50. கே. பிரமாதீஸ்வரன் (22)
51. கே. பீற்றர்போல் (17)
52. கே. விஜயகுமார் (19)
53. பொ. காந்தலிங்கம் (24)
54. செ. சுவக்கிப்பிள்ளை (30)
55. சொர்ணலிங்கம் லிங்கேஸ்வரன் (21)
56. ச. சதானந்தராசா (28)
57. சாள்ஸ் அன்ரனி அன்ன தாஸ் (27)
58. சி. அரவிந்தன் (20)
59. சி. சந்தியசீலன் (29)
60. சி. விமலதாஸ் (20)
61. சிவபாலசிங்கம் (28)
62. வி. டொன்போஸ்கோ (19)
63. விஜயரட்ணம் ரவி (23)
64. வில்பிரேட் தேவராசா (25)
65. எஸ். விறேமரட்ணம் (16)
66. எஸ். திருச்செல்வம் (-)
67. எஸ். மகேந்திரன் (20)
68. எஸ். அன்பழகன் (19)
69. எஸ். அருள்நேசன் (28)
70. எஸ். செல்வநாதன் (21)



71. எஸ். சுகிர்தரட்ணம் (19)
72. எஸ். சிவரூபன் (16)
73. எஸ். சிவகுமார் (19)
74. எஸ். சிவபாலன் (19)
75. எஸ். ரஞ்சித்குமார் (19)
76. எஸ். ரவீந்திரன் (15)
77. எஸ். லிங்கேஸ்வரன் (22)
78. என். இரட்ணசிங்கம் (21)
79. என். ஜேசுதாஸ் (45)
80. எம். சிந்தாத்துரை (28)
81. என். விஜயரட்ணம் (35)

வேறு நாட்களில் காணாமற் போனவர்களின் விபரம்

1. நிசோலஸ் டயஸ் எட்வின் (17) – 17.07.1996
2. பி. வரோதயநாதன் (18) – 25.05.1993
3. தாவீது பென்ஜமீன் (25) – 1992 ஓகஸ்ட்
4. என. சச்சிதானந்தராசா (24) – 1986
5. வி. பாலரஞ்சன் (39) – 1991 பெப்ரவரி

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலை கள் (1956-2008)



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**



# வவுனிக்குளப் படுகொலை 26.09.1996, 15.08.1997

வடக்குக் கிழக்கில் காடுகளால் அதிகம் சூழப்பட்டுள்ள மாவட்டமான முல்லைத்தீவின் தென்மேற்குப் பகுதியை அண்டிய மாந்தை கிழக்குப் பிரதேசெயலர் பிரிவினுள் வவுனிக்குளம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பாரிய குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் அமைந்துள்ளது.

வவுனிக்குளத்திலுள்ள மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் அமைந்துள்ளது. 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனிக்குளக் கிராமத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற பலவேறு பகுதிகளிலுமிருந்து உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களை அமைத்து நெருக்கடிக்குள் வாழ்ந்து கொண்டிருந்த மக்களின் மீது 26.09.1996 அன்று பிற்பகல் 02:10 மணியளவில் சிறீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஆறிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் சம்பவ இடத்தில் உடல்சிதறி உயிரிழந்ததுடன், பன்னிரண்டு பேர் வரையில் காயமடைந்தனர்.

1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவத்தினர் வவுனியாவின் ஓமந்தைப் பகுதியூடாக "ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கை ஒன்றினை கண்டி வீதியினை பிரதான நகர்வு மையமாகக்கொண்டு மேற்கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கையின் போது இராணுவத்தினர் ஏவிய எறிகணைகளும், துப்பாக்கிச் சன்னங்களும், விமானக்குண்டுகளும் பொதுமக்களைத் தாக்கின. இராணுவ நடவடிக்கையினாற் பயந்த மக்கள் கோயில்களிலும், தேவாலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களில் வவுனிக்குள மக்களும் உள்ளடங்குவர்.

15.08.1997 அன்று ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்குப் பயந்து வவுனிக்குள மக்கள் தமது பகுதியில் அமைந்துள்ள கிறித்தவ தேவாலயம் ஒன்றினுள் தஞ்சம் புகுந்தனர். இவர்களில் குழந்தைகள், சிறுவர்கள், முதியவர்களென பலதரப்பட்டவர்களும் காணப்பட்டனர். இதைவிட ஏனைய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களும் இவ்வாலயத்தினுள்ளேயே தஞ்சம் புகுந்தனர். இவர்கள் அனைவருமே கர்த்தரே எம்மைக் காப்பாற்றுங்களென மனதாலும், வார்த்தைகளாலும் மன்றாடிய வண்ணமே இருந்தனர்.

15.08.1997 அன்று காலை 9 மணியளவில் விமானப்படையின் இரண்டு "கிபீர்" குண்டு வீச்சு விமானங்கள் பொதுமக்கள் இருந்த தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் பதினொரு பொதுமக்கள் அவ்விடத்திலேயே உடல் சிதறிப் பலியாகினர். பதினாறிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். தேவாலயமும் பலத்த சேதத்திற்குள்ளானது. படுகாயமடைந்த மக்களை உயிர் பிழைத்த மக்கள் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள மல்லாவி வைத்தியசாலைக்கு வாகனத்திலும், மோட்டார் சைக்கிள்களிலும் கொண்டு சென்றனர். கொண்டு செல்லப்பட்டவர்களில் ஒருவர் 18.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார்.

அன்றைய தினம் மீண்டும் மு.ப 11.00 மணியளவில் அப்பகுதியில் அதே விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் எட்டுப் பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இவர்களும் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் 20.08.1997 அன்று வைத்தியசாலையில் இறந்தார். இவ்வாறாக வவுனிக்குள கிறித்தவ தேவாலயம் மீதான விமானக்குண்டு தாக்குதலில் எல்லாமாகப் பதினொரு பொதுமக்கள் உயிரிழந்ததுடன், இருபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சின்னத்தம்பி வடிவேலு - விவசாயம் - 51
02. பெரியதம்பி சின்னராசா - விவசாயம் - 67
03. சின்னராசா புஸ்பமாலா - மாணவி - 20
04. வல்லியர் சின்னத்தம்பி - தொழிலாளி - 55
05. சந்திரசேகரம் இராஜேஸ்வரி - 32
06. இரத்தினசாமி சிவஞானசுந்தரம் - ஓய்வூதியம் -69
07. பழனியாண்டி மாரிமுத்து - மாணவர் - 18
08. இரத்தினம் இராசகுமாரி - வீட்டுப்பணி - 24
09. குணரத்தினம் சண்முகராசா - தொழிலாளி - 23
10. அருளானந்தம் விமலானந்தம் - சுயதொழில் - 30
11. தேசிங்கராஜா தங்கமணி - 48
12. தேசிங்கராஜா வசந்தகுமாரி - மாணவன் - 17
13. நடராசா புஸ்பமலஉ - 41
14. நடராசா கஜன் - 04
15. அன்னமலர் - 40
16. துரைரெட்ணம் பரமேஸ்வரி - 46
17. நவரத்தினம் சாந்தி - வீட்டுப்பணி - 21

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சுனில் - 60
02. சின்னராசா கேதீஸ்வரன் - 16
03. சின்னராசா ரவிமாலா - மாணவி -12
04. சிவஞானசுந்தரம் ஐசேசன் - 22
05. தமலிங்கம் - மாணவி - 6
06. சுனில் ஜெய்சன் - 22
07. சுனில் கிளி - 24
08. நடராசா பூரணம் - 52
09. நடராசா பிரபு - 24
10. அம்பிகாவதி இந்துமதி - மாணவி - 14
11. அம்பிகாவதி கங்கையமரன் - மாணவன் - 11
12. சின்னராசா வசந்தமாலா - 24
13. எஸ்.நாகபூரணி - 32
14. பொன்னுத்துரை சுரேஸ் - 27
15. எஸ்.யோகமோகன் - 18
16. ஜெயச்சந்திரன் - மாணவன் - 15
17. ஆர்.பாஞ்சாலி - 32
18. ஜெ.மதுசன் - குழந்தை - 02
19. எம். இராசமலர் - 55
20. கௌரி - 22
21. நாகசாந்தி - மாணவி - 13
22. வி.தயானி - 18
23. வி.தர்மினா - மாணவி - 09
24. எஸ்.விஜயராஜா - 16
25. எஸ்.சந்தனம் - 59
26. எஸ்.செல்வராணி - 22
27. எஸ்.ஞானீதரி - குழந்தை - 3
28. எஸ்.காணிக்கைராஜா - 38

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# புதுமுறிப்பு இடம் பெயர்ந்தோர் மீது செல்வீச்சு 30.08.2008



2006ம் ஆண்டு நடுப்பகுதியில் மன்னாரில் ஆரம்பித்துத் தொடர்ந்த மக்கள் இடப்பெயர்வு ஆகத்து 2008 இல் நெருக்கடி நிலையை அடைந்தது. அச்சமயம் வன்னியிலிருந்து அண்மையில் இடம் பெயர்ந்தோரின் எண்ணிக்கை 150,000 வரை எட்டிவிட்டிருந்தது.

ஆகத்து 2008 இல் கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பில், இடம் பெயர்ந்த மக்கள் தொகை மிக நெரிசலாகக் காணப்பட்டது. மன்னார் மாவட்டத்தின் பரப்புக்கடந்தான் கிராமத்திலிருந்த மூன்று இளங்குடும்பத்தினர் ஆகத்து 2007 அளவில் இடம்பெயர ஆரம்பித்திருந்தனர். முதலில் மன்னாரிலுள்ள கள்ளியடிக்கும், பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவிலுள்ள பாலியாற்றுக்கும் அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் முழுங்காவிலுக்கும் அதன் பின்னர் அதே மாவட்டத்தின் வன்னேரிக்குளத்துக்கும் இக் குடும்பத்தினர் இடம் பெயர்ந்திருந்தனர். அவர்கள் மீதான ஷெல் தாக்குதல் இடம் பெறுவதற்கு பத்து நாட்களின் முன்பதாகவே அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புதுமுறிப்புக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

30 ஆகத்து அன்று சிறீலங்கா இராணுவம், இந்த மூன்று குடும்பங்களும் ஒரு காணியில் அமைத்திருந்த மூன்று இருப்பிடங்களின் மத்தியில் ஷெல்களை வீசியது. இதன் விளைவாக, இன்னமும் பெயரிடப்படாத ஒரு மாதக் குழந்தை, மேலும் ஒரு குழந்தை உட்பட, இந்த மூன்று குடும்பங்களையும் சேர்ந்த ஐவர் கொல்லப்பட்டனர். இப் படுகொலைகளின் தாக்கம் இந்த இளம் பெற்றோரையும் குழந்தைகளையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. விசுவநாதன் திலகேஸ், 35
02. கருப்பையா ஆனந்தராசா, 28
03. ஆனந்தராசா கௌதம், 02



04. குழந்தை,0

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)









JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# பெரிய புளியங்குளம் தமிழ்க் கல்வெட்டும் முள்ளியான் குடிமனை அழிபாடுகளும்!

வன்னியில் 700 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிப்பு.

வன்னியில் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் தொல்லியற் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்கள் திரு. கபிலன், திரு. மணிமாறன் ஆகியோர் இணைந்து மேற்கொண்டு வரும் தொல்லியல் ஆய்வின் போது வன்னியில் மறையடித்த குளத்திற்கு அருகே பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டொன்றை அடையாளம் கண்டுள்ளனர். இக்கல்வெட்டு அப்பிரதேச மக்களால் அங்குள்ள வயல்வெளியில் இருந்து எடுத்து வரப்பட்டு அங்குள்ள வைரவர் ஆலயத்தில் தெய்வச் சிலைகளை வைப்பதற்கான பீடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அக்கல்லில் உள்ள எழுத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்த வவுனியா பிரதேசசபை ஆய்வு உத்தியோகத்தர் திரு. ஜெயதீபன் இது பற்றிய செய்தியை திரு. மணிமாறனுக்கு தெரியப்படுத்தியதன் பேரில் இக்கல்வெட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினரின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது.

பல வரிகளில் எழுதப்பட்டிருந்த கல்வெட்டின் உடைந்த கீழ்ப் பாகமே தற்போது எமக்கு கிடைத்துள்ளது. அதில் ஐந்து வரிகள் காணப்படுகின்றன. அதன் முதலாவது வரியில் உள்ள எழுத்துக்கள் பல பெருமளவு சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அதனால் அவ்வரியில் சொல்லப்பட்ட பெயர்களை அல்லது செய்திகளை அறியமுடியவில்லை. ஏனைய நான்கு வரிகளையும் தெளிவாக வாசிக்க முடிகிறது. அவற்றைத் தமிழக கல்வெட்டு அறிஞர், பேராசிரியர் சுப்பராயலு பின்வருமாறு வாசிக்கிறார்.

1. ............................
2. ஆஞ்ஞை மூந்று த
3. (ன்ம) ஆஞ்ஞை வல்ல-
4. வரையன் சத்தியம் இ-
5. து அழிப்பார் நர(கம்) புகவார்.

ஒரு ஆலயத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை அல்லது அரசால் அல்லது ஒரு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீறி நடப்போர் அழிந்து நரகத்திற்கு போவது நிச்சயம் என்ற செய்தியைச் சொல்வதே இக்கல்வெட்டை எழுதியதன் நோக்கம். இதில் வரும் 'மூந்று த (ன்ம)' என்ற சொல் 12-13 ஆம் நூற்றாண்டில் வன்னியில் செயற்பட்ட தமிழ் வணிக கணங்களை அல்லது வேளக்காரர், இடங்கை, வலங்கை ஆகிய தமிழ் படை அமைப்புக்களை குறிக்கலாம். வல்லவராயன் என்ற பெயர் வன்னியில் ஆட்சி புரிந்த அரசனை அல்லது விநாயகக் (கணபதி) கடவுளைக் குறித்திருக்கலாம். தமிழகத்தில் 11-12 ஆம் நூற்றாண்டு காலத்திற்குரிய கல்வெட்டுக்களில் வரும் வல்லவராயன் என்ற பெயர் விநாயகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஆயினும் கல்வெட்டின் எஞ்சிய பாகம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஊகமாகச் சொல்லப்பட்ட விளக்கம் உறுதிசெய்யப்படும் என எதிர்பார்க்கலாம்.



புளியங்குளம் கல்வெட்டு



முள்ளியான் கட்டட அழிபாடுகள் ஆய்வின்போது

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தற்போது கிடைத்த கல்வெட்டு, அங்குள்ள காட்டுப்பகுதியில் ஒரு கட்டிட அழி பாடுகள் இடையே இருந்து எடுக்கப்பட்டமை தெரியவந்துள்ளது. இதனால் இக்கல்வெட்டின் மிகுதிப்பாகம் அக்கட்டிட அழிபாடுகள் இடையே இருக்கும் என எதிர்பார்க்கலாம். தொடர்ந்தும் இங்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் கல்வெட்டின் எஞ்சிய பாகமும், வேறு கல்வெட்டுக்களும் அங்கு கிடைக்க வாய்ப்புண்டு. எவ்வாறாயினும் வன்னிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டென்ற வகையில் வன்னி பற்றிய ஆய்வில் இக்கல்வெட்டுக்கு தனி முக்கியத்துவம் உண்டு என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

முள்ளியான் காட்டுப் பகுதியில் யாழ்ப்பாண இராசதானிக்காலக் குடிமனையின் அழிபாடுகள்

கிளிநொச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட இயக்கச்சிக் கோட்டையில் இருந்து தென்கிழக்கே ஏழு கிலோமீற்றர் தொலைவில் உள்ள நித்தியவெட்டை முள்ளியான் என அழைக்கப்படும் காட்டுப் பகுதியில் அழிவடைந்த புராதன வீடு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இப்பகுதியில் களவாய்வில் ஈடுபட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியற் சிறப்புக்கலை மாணவர்களுக்கு அவ்வூர் மக்கள் அங்குள்ள காட்டுப்பகுதியில் அழிவடைந்த அரண்மனை ஒன்று இருப்பதாகக் கூறப்பட்ட தகவலை அடுத்து அவ்விடத்திற்குச் சென்று தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டோம்.

இக்கட்டிட அழிபாடுகளை அவ்வூர் மக்களில் பலர் அரண்மனை எனவும், வேறு சிலர் இயக்கச்சி கோட்டையுடன் தொடர்புடைய சிறைக்கூடம் எனவும் அழைக்கின்றனர். ஆனால் கட்டிடத்தின் அமைப்பையும், அதன் காலத்தையும் நோக்கும் போது, அது முன்பொரு காலத்தில் அங்கு வாழ்ந்த மக்களது வீடாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ்வீடு காட்டின் நடுவேயுள்ள பெரியகுளத்திற்கு அருகேயுள்ள உயர்ந்த மேட்டு நிலத்தில் செங்கட்டிகள், களிமண், சுதை என்பன கொண்டு கட்டப்பட்டுள்ளது. இரண்டு அறைகளைக் கொண்ட இக்கட்டடம்



முள்ளியான் கட்டட அழிபாடுகள் ஆய்வின்போது


ஏறத்தாழ ஒன்பது மீற்றர் நீளமும், நான்கரை மீற்றர் அகலமும் கொண்டது. இவ்வீட்டின் பின்பக்க அறைச் சுவரில் சிறிய யன்னல் ஒன்று இருந்ததற்கான அடையாளம் காணப்படுகிறது. கட்டிடத்தின் பெரும்பாலானசுவர்கள் அழிவடைந்து விட்டாலும், கட்டத்தின் மூன்றுபக்க அத்திவாரங்களை தெளிவாகப் பார்க்க முடிகிறது. கட்டிடத்தின் முன்பக்கம் அடர்ந்த காடாக இருப்பதால் அதன் அத்திவாரத்தை தற்போது அடையாளம் காணமுடிய வில்லை. ஏனைய மூன்று அத்திவாரங்களில் இருந்தும் எழுப் பப்பட்ட சுவர்கள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஒருமீற்றர் தடிப்பைக் கொண்டன. அதிலும் இரண்டு அறைகளைப் பிரித்து நிற்கும் நடுச் சுவரின் தடிப்பு ஏனைய அத்திவாரச் சுவர்களைவிடச் சற்றுக் கூடுதலாகக் காணப்படுகிறது. பேராசிரியர் பொ. இரகுபதி சுவர்களின் தடிப்பை ஆதாரமாகக் காட்டி இக்கட்டிடம் இரு மாடிகளைக் கொண்ட வீடு எனக் குறிப்பிடுகிறார். இவ்வீட்டின் கூரை, ஒடுகளைக் கொண்டு வேயப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் இதன் கூரை, மரங்கள் - பனை ஓலைகள் கொண்டு வேயப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம்.

இவ்வீட்டை அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் அளவும், அவற்றின் தொழில் நுட்பமும் ஐரோப்பியர் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட செங்கட்டிகளின் காலத்திற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகக் காணப் படுகின்றன. மேலும் இக்கட்டிட அழிபாடுகளிடையே இருந்து எடுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், சுடுமண்ணால் செய்யப்பட்ட நீர்ப்பாசனக் குழாய்கள் என்பவற்றின் காலம் ஏறத்தாழ கி.பி. 15 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகக் காணப்படுகிறது. இவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வீடு அமைக்கப்பட்ட காலம் யாழ்ப்பாண அரசுகாலம் அல்லது அதற்கு முந்திய காலத்தைச் சேர்ந்ததெனக் கூறமுடியும். ஆகவே வடஇலங்கையில் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய குடிமனையாக இதைக் கருத முடியும்.

வடஇலங்கையில் புராதனக் குடியிருப்புக்களைக் கொண்ட இடங்களில் வடமராச்சி கிழக்குப் பிரதேசமும் ஒன்றாகும். 1980 களில் பேராசிரியர் இரகுபதியும், பின்னர் இக்கட்டுரை ஆசிரிய ரும் வெற்றிலைக்கேணி, உடுத்துறை, செம்பியன்பற்று, முள்ளி யான், கட்டைக்காடு ஆகிய இடங்களில் மேற்கொண்ட ஆய் வுகளில் இவ்விடங்களில் இற் றைக்கு 2000 ஆண்டு களுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற் கான சான்றுகள் கிடைத் துள்ளன. யாழ்ப்பாண அரசு காலத்தில் கடல் வழியா கவும், வன்னியில் இருந்து தரை வழியாகவும் கொண்டு வரப்பட்ட பொருட்களுக்கான வரி அறவிடும் கடவைகள் மேற் கூறப்பட்ட இடங்களில் இருந்ததற்கு வரலாற்று இலக் கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் போத்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து இவ் விடங்களில் வாழ்ந்த மக்கள் படிப்படியாகப் பிற இடங்களுக் குச் சென்றதாக இவர்களின் ஆட்சிக்கால ஆவணங்கள் கூறுகின்றன. ஆயினும் இவ் விடங்களில் இருந்து கடல் வழியாகவும், தரை வழி யாகவும் பொருட்கள் கடத்தப் பட்டதால் அவற்றைத் தடுப் பதற்காகவே ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் காட் டிலும்அதிக எண்ணிக்கையி லான கோட்டைகளை இயக்கச்சி, ஆனையிறவு, வெற்றிலைக் கேணி போன்ற இடங்களிலும், கடற்கரையை அண்டிய இடங் களில் காவல் அரண்களையும் அமைத்தனர். இந்நிலையில் முள்ளியான் காட்டுப் பகுதியில் கண்டுபிக்கப்பட்ட கட்டிட அழிபாடுகள் ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் செறிவான தமிழர் குடியிருப்புக்கள் அங்கிருந்ததன் அடையாளமாகக் காணப்படுகிறது. இது போன்ற வீடுகளின் சிதைவுகளும், பாழடைந்த ஆலயங்களின் அழிபாடுகளும் இவ்வட்டாரத்தின் காட்டுப் பகுதிகளில் இருப்பதாக இப்போது தெரிய வந்துள்ளது. எதிர்கால ஆய்வுகளால் அவை புது வெளிச்சம் பெறலாம்.




முள்ளியான் கட்டட அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள்



ஒல்லாந்தர் கால காவல் அரண்

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம்

நன்றி: எழுநா இணையத்தம்





# CANADIAN TAMIL COLLECTIVE
# கனேடியத் தமிழர் கூட்டு

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

13.08.2024

பெறுநர்:
கனடாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள தமிழர்கள்

பெறுநர்:
மாண்புமிகு Justin Trudeau
கனேடியப் பிரதமர்
Email: pm@pm.gc.ca

மாண்புமிகு Pierre Poilievre
எதிர்க் கட்சித் தலைவர்
Email: pierre.poilievre@parl.gc.ca

மாண்புமிகு Jagmeet Singh
தலைவர் - புதிய ஜனநாயகக் கட்சி
Email: jagmeet.singh@parl.gc.ca

மாண்புமிகு Mélanie Joly
வெளியுறவு அமைச்சர்
Email: melanie.joly@international.gc.ca

மாண்புமிகு Gary Anandasangaree
பழங்குடிகள் உறவுகள் அமைச்சர்
Email: gary.anandasangaree@rcaanc-cirnac.gc.ca

Doug Ford
Ontario முதல்வர்
Email: doug.ford@ontario.ca

Patrick Brown
Brampton நகர முதல்வர்
Email: patrick.brown@brampton.ca

Olivia Chow
Toronto நகர முதல்வர்
Email: mayor_chow@toronto.ca

எமது அன்புக்குரிய தமிழ் மக்களே, பிரதமர் Trudeau, தலைவர் Poilievre மற்றும் தலைவர் Singh, அமைச்சர் Joly, அமைச்சர் Anandasangaree, முதல்வர் Ford, நகர முதல்வர் Brown, நகர முதல்வர் Chow,

Torontoவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரக அதிகாரி Thushara Rodrigo, Brampton நகர முதல்வர் Patrick Brownனுக்கு, May 3, 2024 அன்று அனுப்பி, கனேடியத் தமிழர் கூட்டினால் ('கூட்டு') அவர்களிடம் இருந்து தற்போது பெறப்பட்டுள்ள கடிதம், கனடியத் தமிழர் பேரவைக்கும் (CTC), இலங்கை அரசு மற்றும் Torontoவில் உள்ள இலங்கை அரசின் துணைத் தூதரகம் ஆகியவற்றுக்கிடையிலான உறவு குறித்த உண்மையை அம்பலப்படுத்துகிறது. இலங்கை அரசாங்கத்துடனான அனைத்துத் தகவல் தொடர்புகளையும் பகிரங்கப்படுத்துமாறு 'கூட்டு' விடுத்த கோரிக்கைக்கு CTC இதுவரை பதிலளிக்கவில்லை. May 3, 2024 அன்று அனுப்பப்பட்ட துணைத்தூதரது கடிதம், இத்தரப்புக்களின் உறவு தொடர்பில் குறிப்பிடத்தக்க புரிதலை வழங்குகிறது.

நகர முதல்வர் Patrick Brownனுக்கு எழுதிய இக்கடிதம், இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எவ்வாறு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை வலியுறுத்த முனைகிறது. தமிழ் இனப்படுகொலை நினைவுத்தூபியை (Brampton இல்) அமைப்பதற்கு முதல்வரால் அளிக்கப்படும் எந்த ஒரு உதவியும், அத்தகைய நல்லிணக்கத்தையும், அமைதியையும் பாதிக்கும் என பல தவறான தரவுகள் மற்றும் வலியுறுத்தல்கள் ஊடாக, இந்தக் கடிதம் எச்சரிக்கிறது. மேலும், தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியை அமைப்பது, இலங்கையில் CTC போன்ற தமிழ் அமைப்புகளால் எடுக்கப்படும் முயற்சிகளையும் தடம் புரளச் செய்யும் எனவும் அந்தக் கடிதம் எச்சரிக்கிறது.

குறிப்பாக, கனடியத் தமிழர் பேரவை, கொழும்பில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தின் பங்கேற்புடன் இலங்கையில் தமது மனிதாபிமான நடவடிக்கைகளை ஆரம்பித்ததை நீங்கள் அறிந்திருக்கலாம் எனவும் சுட்டிக்காட்டி, நல்லிணக்க முயற்சிகளை ஆதரிப்பதற்காக இமயமலைப் பிரகடனக் கட்டமைப்பின் கீழ், பௌத்த பிக்குகளுடன் CTC முக்கியமான ஈடுபாடுகளைக் கொண்டிருந்தது எனவும் Rodrigo கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

இந்தக் கடிதம் பின்வருவனவற்றை தெளிவுபடுத்துகிறது;

தமிழ் மக்களின் நீதி மற்றும் சுதந்திரத்திற்கான போராட்டத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் உத்திகளில் தமது பங்கை CTC தீவிரமாக மூடிமறைத்து, தமிழ் மக்களைத் தவறாக வழிநடாத்தியுள்ளது.

இமாலயப் பிரகடனத்துடன் தொடர்பில்லை என CTC மறுத்தாலும், இந்தக் கடிதம் உண்மையை அம்பலப்படுத்துகிறது. CTC தவிர, வேறு எந்த அமைப்பும் இந்தப்பணியை மேற்கொள்வதாவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை. மிக முக்கியமாக, Brampton நகரில் இனப்படுகொலை நினைவுச் சின்னம் அமைக்கப்படுவதை எதிர்க்க CTC பயன்படுத்தப்படுகிறது என்பதை இந்தக் கடிதம் வெளிப்படுத்துகிறது. தமிழர் வரலாற்றை அழிக்கவும், போரில் இறந்தவர்களை நினைவு கூருவதைத் தடுக்கவும், இலங்கையுடன் இணைந்த CTC யின் பணிகள் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது. CTC இன் நடவடிக்கைகள், கனடாவில் இலங்கையின் வெளிநாட்டுத் தலையீட்டுக்குத் துணைபோவதோடு, கனடாவில் உள்ள தமிழர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை மலினப்படுத்துகிறது.

இலங்கையுடனான CTC யின் கூட்டுறவானது, தமிழ் இனப்படுகொலையை மூடிமறைத்து, அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த தவறான புரிதலை உருவாக்கி, தமிழர்களின் உண்மையான வரலாறு மற்றும் தொடரும் போராட்டங்களைப் புறக்கணிக்கும் அரசின் திறனை வலுப்படுத்துகிறது.

இலங்கை அரசாங்கம் தனது சொந்த நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்காக CTCயின் முயற்சிகள் எவ்வாறு கையாளப்பட்டுள்ளன என்பதை இந்தக் கடிதம் அம்பலப்படுத்தியுள்ளது. தமிழ் இனப்படுகொலை நினைவுத் தூபியின் நிர்மாணத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கில், கனடாவில் மக்கள் தொடர்பு பிரச்சாரத்தை நடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் CTC இன் முன் முயற்சிகளை ஒரு கவசமாகப் பயன்படுத்தியுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நயவஞ்சக மூலோபாயம், தமிழ்ச் சமூகத்தின் நியாயமான மனக்குறைகளை வலிமை யற்றதாக்குவது மட்டுமன்றி, வரலாற்று ரீதியாக தமிழர்கள் எதிர்கொள்ளும் அநீதிகள் குறித்த உண்மைகளையும் அழிக்க முனைகிறது. இதுபோன்ற செயற்பாடுகள், நீதி மற்றும் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, CTC யின் தலைமைத்துவத்தையும், பரப்புரையையும் எதிர்பார்க்கும் கனேடியத் தமிழர்களின் நம்பிக்கைக்கு இழைக்கப்படும் துரோகமாகும். புலம்பெயர்ந்த தமிழர்களின் குரல்களை மௌனிக்கவும், இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூருவதற்கும் மற்றும் மரியாதை செய்வதற்கும் தடைகளை ஏற்படுத்தும் வெளிச்சக்திகளின் பணிகளுக்கு, CTC ஒத்துழைக்க முடியாது என்பதைத் தமிழ்சமூகம் உறுதி செய்யவேண்டும்.

இனப்படுகொலையை அங்கீகரிப்பதிலும், அதில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பைச் சுட்டிக் காட்டுவதிலும் கனேடிய அரசியல்வாதிகள் மத்தியில் முன்னோடியாக விளங்கும் நகர முதல்வர் Patrick Brownக்கு நன்றியையும், பாராட்டுகளையும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம். எனினும், கனடாவின் நகர முதல்வர் ஒருவர் மீது, இலங்கையின் தலையீடு என் பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதோடு, பிரதமர் இவ்விடயத்தை நுட்பமான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

முதலில், இலங்கை அரசாங்கம், Torontoவில் உள்ள இலங்கையின் துணைத் தூதரகம் மற்றும் CTC ஆகிய தரப்புக்களுடனான அனைத்துத் தகவற் தொடர்பாடல்களையும் வெளிப்படுத்த வேண்டும் எனக் கனேடிய அரசாங்கம், Ontario மாகாண அரசாங்கம், Toronto நகரம் மற்றும் Brampton நகரம் ஆகிய தரப்புக்களுக்கு 'கூட்டு' அழைப்புவிடுக்கிறது. இந்த விடயத்தில், தகவல் அறியும் உரிமையின் பிரகாரம், முறையான கோரிக்கைகளை 'கூட்டு' ஆரம்பிக்கும் நிலையில், தமிழர்களின் நலன் சார்ந்த கோரிக்கையாக இவற்றைப் பெறும் வகையில் நகர்வுகளை விரைவுபடுத்துமாறு அரசாங்கங்களை 'கூட்டு' வலியுறுத்துகிறது.

இரண்டாவதாக, கனடாவின் நகராட்சி அரசின் மீதான தலையீடும், கோரிக்கைகளுமான இலங்கைத் துணைத்தூதரக அதிகாரி Thushara Rodrigoவின் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில், மத்திய அரசாங்கம் பதிலளிக்கவேண்டும் எனவும் நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

மூன்றாவதாக, இமாலயப் பிரகடனம் தொடர்பாக, கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் உட்பட, கனேடிய அரசாங்கத்தின் ஈடுபாடுகள் மற்றும் தொடர்பாடல்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் வெளியிடுமாறு மத்திய அரசை நாங்கள் கோருகிறோம்.

மேலும், CTC எமது மக்களுடன் இணைந்து செயல்படுவதை உறுதிசெய்வதிலும், இனப்படுகொலையின் குற்றவாளிகளான இலங்கை அரசாங்கத்தை நீதியின் முன்கொண்டுவருவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளிலும், எங்களுடன் இணையுமாறு கனேடியத் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம். சமாதானம், நீதி மற்றும், உண்மை ஆகியவற்றை அடைவதற்கான எமது போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் எந்த ஒரு அமைப்பு மற்றும் நிறுவனத்துக்கு எதிராகவும், நாம் ஒற்றுமையுடன் எதிர்த்து நிற்கவேண்டும்.

இறுதியாகவும் மற்றும் மிக முக்கியமாகவும், இலங்கையின் வெளிநாட்டுத் தலையீட்டைச் செயற்படுத்துவதையும், கனடா மற்றும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் CTC நிறுத்த வேண்டும். கனடாவில் இலங்கை அரசின் தலையீட்டை CTC உடனடியாகக் கண்டிக்கவேண்டும். அதேவேளை, இனப்படுகொலை நினைவுச் சின்னம் தொடர்பான தனது நிலைப்பாட்டையும் அது தெளிவுபடுத்தவேண்டும். துரதிருஷ்டவசமாக, இந்த விடயத்தில் CTC யின் மௌனம், இலங்கை அரசாங்கத்துடனான அதனது கூட்டுச்சதியாகவும் கருதப்படலாம். இது போன்ற துரோகங்களை எமது சமூகம் அமைதியுடன் பார்த்துக் கொண்டிருக்காது. இந்தச் சமூகத்திற்கு ஏற்படுத்தியுள்ள தீங்கை, CTC அங்கீகரிக்க வேண்டியது கட்டாயமானதாகும். இதனால்

ஏற்பட்ட உளவியல் ரீதியிலான தாக்கத்திற்காக CTC நிபந்தனையற்ற முறையில் மன்னிப்புக் கோருவதுடன், கனேடியத் தமிழர்களின் ஒரு குரலாக தன்னை மீளவும் அர்ப்பணித்துக்கொள்ளவேண்டும்.


நாம் ஒன்றுபட்டால், தமிழர்களின் குரல்கள் செவிமடுக்கப்படுவதையும், தமிழர் வரலாறு ஏற்றுக்கொள்ளப்படுவதையும், நீதி வழங்கப்படுவதையும் நாம் உறுதி செய்யலாம்.

May 3, 2024 அன்று, Brampton நகரமுதல்வர் Patrick Brownக்கு இலங்கைத் துணைத்தூதரகம் அனுப்பிய கடிதம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு: (+1) 647-560-7013 அல்லது CanadianTamilCollective@gmail.com

உண்மையுள்ள,
கனேடியத் தமிழர் கூட்டு

CC: அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், Brampton நகர சபை உறுப்பினர்கள், Toronto நகர சபை உறுப்பினர்கள் மற்றும் இலங்கையில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகர் (கொழும்பு)



CONSULATE GENERAL OF SRI LANKA
TORONTO, CANADA
1, Eglinton Avenue East, # 501, Toronto, Ontario M4P 3A1
Tel : 001-416-323-9133/416-323-0729 Fax : 001-416-323-3205 E-mail : srilanka@bellnet.ca

03.05.2024

His Worship Patrick Brown
Mayor of Brampton

Dear Sir,


I take this opportunity to recall my first meeting with you in your office in the City Council of Brampton and the details we discussed about the Sri Lankan conflict protracted for thirty years.

Kindly note that several Sri Lankan Canadian Community Associations have brought to my attention that a certain group of Sri Lankan Canadians intends to construct a so-called Tamil Genocide Monument in a location within your city limit and the City Council of Brampton has granted approval for the proposed construction. Opposing the proposed construction, this group of Sri Lankan Canadians highlighted that all Sri Lankans, irrespective of their ethnicities were affected by the conflict and the proposed construction will severely disturb the unity and reconciliation efforts among all affected Sri Lankans. Also, it will have a negative impact on the multi-ethnic social coherence and harmony of the Sri Lankan Canadian Community, as well as among communities in Sri Lanka.

I would like to reiterate that no authority including the United Nations has made any finding on genocide allegedly committed by Sri Lanka during the three decades long conflict. It is well documented that during the conflict, the Government of Sri Lanka provided necessary funds to continue the operation of public institutions and provision of all essential material which included food and medicines to the people of the conflict-affected areas. Services available to all Sri Lankans such as free education, free health facilities as well as public and private sector employment are equally enjoyed by Tamils at all times.

As I previously mentioned in our first meeting, the conflict with the Liberation Tigers of Tamil Eelam (LTTE), an organization which was internationally banned (including in Canada as well) ended in 2009.

Even though Sri Lanka experienced a series of difficulties triggered by the COVID pandemic, natural disasters etc the Government of Sri Lanka has given the priority to strengthen the post-conflict ethnic reconciliation, addressing the root causes of the conflict through a set of broader measures.



The Government has taken measures to heal the physiological wounds of the conflict affected people through strengthening of required democratic institutional mechanisms. The Government has established the Truth, Unity and Reconciliation Commission; the Office of the Missing Persons; the Office for Reparations; the Office for National Unity and Reconciliation; the Office for Overseas Sri Lankan Affairs; and a Special unit established under the Presidential Secretariat to promote reconciliation and economic development in Northern and Eastern provinces (conflict affected areas) are fully operational. Further, the Government of Sri Lanka has opened the platform for the civil society to constructively engage through these institutional mechanisms to promote the reconciliation efforts.

Also, the Government has released LTTE combatants and handed over the lands in the conflict areas which were previously held by the security forces to the original owners. These recipients are Tamils. The Sri Lankan Internally Displaced Persons in India had been issued "All Country " Sri Lankan passports, ensuring their freedom of mobility. Also, the "Religions to Reconcile" national inter-religious symposium was organized by the National Peace Council of Sri Lanka, which was attended by the civil society, including the 'Representatives of Plural Action for Conflict Transformation" project.

As you may be aware, the Canadian Tamil Congress (CTC), one of the leading Tamil Organization in Canada, commenced their humanitarian activities in Sri Lanka with the participation of the Canadian High Commission in Colombo. Also, the CTC has made important engagements with Buddhist monks under the framework of Himalaya Declaration to support the reconciliation efforts.

I am pleased to share with you the outcome of the progressive approach of the Consulate General of Sri Lanka in Toronto towards the constructive engagements with the Tamil community members, Tamil business community and business chambers, facilitating their increasing demand for business opportunities and investments in Sri Lanka. Also, the Consulate General processes an increasing number of dual citizenship applications from Tamils in Canada on a daily basis and the majority of them are from the business community, who intend to initiate their economic engagement with Sri Lanka. I observe that there is a tremendous increase of Canadian Tamils visiting Sri Lanka as tourists for long holidays to renew their ancestral heritage and family reunion.

In the above context, I urge you to draw your kind attention towards these developments on the reconciliation efforts in Sri Lanka which can benefit the people of Sri Lanka who represent the multi-ethnic communities including Tamils, as well as the overseas Sri Lankans in Canada, who can exploit this opportunity to further strengthen Canada-Sri Lanka relations.

In view of the above, I urge you to extend your valued support for the ongoing reconciliation efforts of Sri Lanka through a constructive approach to secure and promote the best interests of the Tamils with Sri Lankan origins, rather than divisive and unhelpful initiatives such as the construction of the proposed so-called Genocide Monument in Brampton which would severely disrupt communal harmony and social coherence in the multi-ethnic Sri Lankan Canadian community, as well as reverse the reconciliation efforts of Sri Lanka. It also communicates a false version of recent history of Sri Lanka and conveys a deeply distorted and false message of violence to present and future generations of Canadians of Sri Lankan origin, as well as to Sri Lankans.

Thushara Rodrigo
Consul General of Sri Lanka
Toronto



**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**




# ஜனாதிபதித் தேர்தல் களம்: திரட்டுவதா சிதறடிப்பதா?

04.08.2024



“இம்முறை ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் எதிர்வுகூற முடியாதவை மட்டுமல்ல, ஊகிக்க முடியாதவைகளுந்தான்” என்று ஒரு மேற்கத்திய தூதராக அதிகாரி சொன்னார். இலங்கைதீவின் நவீன வரலாற்றில் குறிப்பாக ஜனாதிபதி முறைமை அமலபடுத்தப்பட்ட பின், ஒரு பிரதான வேட்பாளர் அதுவும் ஜனாதிபதியாக இருப்பவர், சுயேட்சையாக கட்டுப்பணம் செலுத்தியிருப்பது என்பது இதுதான் முதல்தடவை. முன்னெப்பொழுதும் தேர்தல் களத்தில் இந்த அளவுக்கு நிச்சயமின்மைகள் நிலவியதில்லை. இது எதை காட்டுகிறது ?

போட்டி அதிகமாக இருப்பதை மட்டும் காட்டவில்லை பெரும்பான்மையானவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர் யாரும் இல்லை என்பதையும் காட்டுகிறது.

நாடாளுமன்றத்தில் தாமரை மொட்டு கட்சிதான் பலமாக உள்ளது. அதன் தயவில்தான் ஜனாதிபதி தங்கியிருக்கிறார். ஆனாலும் அவரை வரும் ஜனாதிபதி தேர்தலில் தனது வேட்பாளராக நிறுத்த தாமரை மொட்டுக் கட்சி தயாரில்லை என்று தெரிகிறது. கடந்த பல மாதங்களாக அது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிகிறது.

வெற்றியளிக்கவில்லை மட்டுமல்ல அவை முரண்பாடுகளை தவிர்க்க உதவவில்லை என்றும் தெரிகிறது. அண்மையில் நாமல் ராஜபக்ச ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் அதைத்தான் காட்டுகின்றன. ரணில், தமது கட்சியைப் பிளவுபடுத்த முயற்சிக்கிறார் என்ற பொருள்பட நாமல் கருத்து தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிளவு படுத்தியதைப்போல அவர் தமது கட்சி பிரமுகர்களைக் கழட்டி எடுக்க முயற்சிக்கிறார் என்ற பொருள்பட நாமல் பேசியிருக்கிறார். கிடைக்கும் தகவல்களின்படி தாமரை மொட்டுக் கட்சியைச் சேர்ந்த பலர் ரணிலை நோக்கிப் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மனோகணேசன் தனது முகநூற்பதிவில் கூறியது போல, ராஜபக்சக்கள் ரணிலை தமது வேட்பாளராக்கினால் தம்மைப் பாதுகாக்கலாம் ஆனால் கட்சியைக் காப்பாற்ற முடியாது. ரணில் கட்சியைச் சாப்பிட்டு விடுவார் என்பதே சரி.

ஒரு சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கி வளர்ச்சிப் போக்கில் பல்வேறு தரப்புக்களின் பொது வேட்பாளராக அவர் மாறக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன. அதன் மூலம் ராஜபக்சக்களின் தவறுகளுக்குப் பொறுப்புக் கூறத் தேவையில்லாத ஒரு வெற்றியைப் பெற அவர் முயற்சிக்கிறாரா?

இப்போதுள்ள நிலைமைகள் இதேபோக்கில் தொடர்ந்தும் வளர்ந்து சென்றால் தேர்தல் களத்தில் மூன்றுக்கும் மேற்பட்ட பிரதான வேட்பாளர்கள் நிற்க முடியும். சரத் பொன்சேகாவும் விஜயதாச ராஜபக்சவும் ஜனாதிபதியின் நோக்கங்களை நிறைவேற்றும் டம்மி வேட்பாளர்கள் என்ற ஒரு கருத்தும் தென்னிலங்கையில் உண்டு. சரத் பொன்சேகா அனுரவிற்குப் போகக்கூடிய படைத்தரப்பினரின் வாக்குகளை கவர்ந்து எடுப்பார். அவரும் விஜயதாச ராஜபக்ஸவும் ரணில் விக்கிரம சிங்கவின் போட்டியாளர்களுக்கு கிடைக்கக்கூடிய வாக்குகளை கவரும் நோக்கத்தோடு களமிறக்கப்பட்டார்களா என்ற சந்தேகங்களும் உண்டு. எதுவாயினும் தென்னிலங்கையில் தேர்தல் களம் முன்னெப்பொழுதையும் விட நிச்சயமற்றதாகக் காணப்படுகின்றது. இது சிங்கள வாக்காளர்களைக் குழப்பும் சிதறடிக்கும். விளைவாக தெரிவு செய்யப்படப் போகும் ஜனாதிபதி பருமனில் கூடிய பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வருவாரா என்பதும் சந்தேகம்தான். அவருக்குக் கிடைக்கக்கூடிய சிங்கள மக்களின் ஆணை ஒப்பீட்டளவில் பலவீனமாகவே இருக்கும்.

இந்தப்பின்னணியில் தமிழ்த் தரப்பில் ஒரு பொது வேட்பாளர் தமிழ் வாக்குகளை கவர்வாராக இருந்தால் தெரிவு செய்யப்படப்போகும் ஜனாதிபதி மிகப்பலவீனமான ஆணையோடு பதவிக்கு வருவார். அவருக்கு தமிழ் மக்களின் ஆணையும் கிடைக்காது; கிடைக்கக்கூடிய சிங்கள, முஸ்லீம் மக்களின் அணையும் பலவீனமாக இருக்கலாம்.

இது அடுத்த ஆண்டு தென்னிலங்கை அரசியலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்? பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை வெற்றிகரமாக மீட்டெடுப்பது என்று சொன்னால் அதற்குப் பலமான ஒரு அரசுத் தலைவர் வேண்டும். ஆனால் ஒப்பீட்டளவில் பலவீனமான மக்கள் ஆணையோடு தெரிவு செய்யப்படக்கூடிய ஒரு ஜனாதிபதி பொருளாதார நெருக்கடி தொடர்பில் துணிகரமான முடிவுகளை எடுக்கக் கூடியவராக இருப்பாரா? அவ்வாறு பொருளாதாரத்தை சீர் செய்ய முடியாவிட்டால் நாடு இன்னும் கொதிநிலைக்கு போகும். இது முதலாவது விடயம்.

இரண்டாவது விடயம், அவ்வாறு ஒப்பிட்டுளவில் பருமன் குறைந்த ஒரு வெற்றியை பெறக்கூடிய புதிய ஜனாதிபதி நாடாளுமன்றத் தேர்தலும் உட்பட ஏனைய தேர்தல்களை உடனடியாக வைக்கக்கூடிய நிலைமைகள் இருக்குமா? ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறப்போகும் கூட்டு ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அந்த வெற்றியை மேலும் உறுதிப்படுத்தவும் பலப்படுத்தவும் முயற்சிக்கும். ஆனால் தெரிவு செய்யப்படப்போகும் ஜனாதிபதிக்கு கிடைக்க கூடிய வெற்றி ஒப்பீட்டளவில் பலமாக இல்லையென்றால் அந்தக்கூட்டு பொதுத் தேர்தலை வைத்து ஒரு விசப்பரீட்சையைச் செய்யுமா? அல்லது பருமனில் சிறியது ஆனாலும் அந்த வெற்றி அடுத்தடுத்த தேர்தல்களில் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும் என்று நம்பி தேர்தல்களை வைக்கக்கூடுமா? அல்லது அப்படிப்பட்டதோர் சூழலில் ஒரு தேர்தலை வைத்தால் பலமான பெரும்பான்மையைக் கொண்ட ஒரு நாடாளுமன்றம் தெரிவு செய்யப்படுமா?

எனவே கூட்டிக்கழித்துப் பார்த்தால் தென்னிலங்கையில் இப்பொழுது காணப்படும் போட்டி நிலை எனப்படுவது அல்லது நிச்சயமற்ற நிலை எனப்படுவது அல்லது ஊகிக்கமுடியாத நிலை எனப்படுவது நாடு ஒரு நிச்சயமற்ற ஆண்டை நோக்கிச் செல்கிறது என்ற ஊகங்களைப் பலப்படுத்துமா?

இதில் தமிழ்மக்கள் எடுக்கக்கூடிய முடிவுகள் நிர்ணயகரமானவைகளாக இருக்கும் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தமிழ்மக்கள் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு அதிகமாக வாக்களிக்கிறார்களோ அவர் பெறக்கூடிய வெற்றியின் பருமன் அதிகரிக்கும். அது அதன் தர்க்கபூர்வ விளைவுகளை தென்னிலங்கையில் ஏற்படுத்தும். இப்படிப்பட்டதோர் நிர்ணயகரமான அரசியல் சூழலில் தமிழ்மக்கள் என்ன செய்ய வேண்டும்? தென்னிலங்கை வேட்பாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

தமிழ்மக்கள் தென்னிலங்கை அரசியலுக்குப் பதில் வினையாற்றும் ஓர் அரசியலை தெரிந்தெடுப்பதா? அல்லது செயல் முனைப்புடன் இயங்கி தென்னிலங்கை வேட்பாளர்களை தங்களை நோக்கி வரச்செய்வதா?

தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருக்க வேண்டும் என்று கூறும் தமிழ் அரசியல்வாதிகள் அவர்களோடு பேரம் பேசலாம் என்று நம்புகிறார்கள். அப்படியென்றால் தென்னிலங்கை வேட்பாளர்களில் யாராவது ஒற்றை ஆட்சி முறைமையை மாற்றி சமஸ்ரியை ஏற்றுக் கொள்ளத் தயாரா? இல்லையென்றால் எது தொடர்பில் அவர்களோடு பேரம் பேசுவது?

அடுத்தது, அவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடும் வரை காத்திருப்பது என்பது தென்னிலங்கையின் நகர்வுகளுக்காகக் காத்திருக்கும் ஒரு அரசியல். இது சரியா?

அடுத்தது அவர்கள் எப்பொழுது தேர்தல் அறிக்கையை வெளியிடுவார்கள்? பெரும்பாலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர்தான். அப்பொழுது அவர்களுடைய தேர்தல் அறிக்கைகளில் பேரம் பேசக்கூடிய வாய்ப்புகள் இல்லையென்றால் என்ன முடிவை எடுப்பது? எந்த முடிவையும் எடுக்க முடியாது. யாரோ ஒருவருடன் ஏதோ ஒரு டீலுக்குப் போவதைத் தவிர. அதாவது தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளுக்காகக் காத்திருப்பது என்பது அதன் தர்க்கபூர்வ விளைவைப் பொறுத்தவரை டீலுக்குக் காத்திருப்பதுதான். இனப்பிரச்சினைக்கான தீர்வைக் குறித்துப் பேரம் பேசுவதற்காக அல்ல.

அவர்கள் தேர்தல் அறிக்கைகளுக்காக காத்திருக்கவில்லை. முடிவெடுக்காமல் காலத்தைக் கடத்துகிறார்கள் என்பதே சரி. தேசியவாத அரசியல் எனப்படுவது அதன் பிரயோக வடிவத்தில் பிறத்தியாரின் முடிவுகளுக்காக காத்திருப்பது அல்ல. தானே முடிவெடுத்து, அதற்காக உழைத்து பிறத்தியாரை தன்னை நோக்கி வரச்செய்வது. தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவு அதுதான்.

ஆனால் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவை பொறுத்திருந்து எடுக்க முடியாது. ஏனென்றால் கடந்த 15 ஆண்டுகளாக சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை கூட்டிக்கட்டுவது என்ற முடிவை எப்பொழுதோ எடுத்திருந்திருக்க வேண்டும். அதை இனிமேல்தான் தென்னிலங்கை வேட்பாளர்களின் முடிவைக் கண்டு எடுப்பது என்பது தந்திரோபாயத் தவறு மட்டுமல்ல, தோல்விகரமானது.

தங்களை ஒரு தேசமாகக் கருதும் தமிழ்மக்கள் வெளியாருக்காகக் காத்திருப்பதை விடவும் தங்களை செயல்முனைப்போடு கட்டியெழுப்பதுதான் தேசியவாத அரசியல். அதுதான் தமிழ்ப் பொது வேட்பாளர்.

எனவே தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்காக காத்திருப்பது என்பது திட்டவட்டமாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரிப்பதுதான். தமிழ்ப் பொது வேட்பாளரை நிராகரிப்பது என்பது தமிழ் அரசியல் சக்தியை ஒரு மையத்தில் குவிக்கும் செயற்பாட்டுக்கு எதிரானதுதான். அதாவது தமிழ் மக்களை ஐக்கியப்படுத்திப் பலப்படுத்தும் செயற்பாட்டுக்கு எதிரானது. இதை இன்னும் அதன் தர்க்கபூர்வ விளைவின் அடிப்படையில் கூறின் தமிழ் மக்களைச் சிதறடிக்கும் சக்திகளுக்குச் சேவை செய்வது.

எவ்வாறெனில், ஒரு பொது வேட்பாளரை ஆதரிக்காவிட்டால் சில அரசியல்வாதிகள் தமிழ் வாக்குகளை சஜித்தை நோக்கிச் சாய்த்துச் செல்வார்கள். இன்னொரு பகுதி குறிப்பாக ஆங்கிலம் தெரிந்த படித்த நடுத்தர வர்க்கும், ரணில் நாட்டின் பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தியிருப்பதாகக் கருதி அவருக்கு வாக்களிக்கும். இன்னொரு பகுதி மாற்றத்தை வேண்டி அனுரவுக்கு வாக்களிக்கும். ஒரு பகுதி தேர்தலைப் பகிஷ்கரிக்கும். இவ்வாறு பலவாறாக தமிழ் வாக்குகள் சிதறும்போது ஒரு பகுதி தமிழ் வாக்காளர்கள் சலிப்படைவார்கள்; வாக்களிப்பில் ஆர்வமிழப்பார்கள். அதாவது ஒரு வாக்களிப்பு அலை ஏழாது. அது வாக்களிப்பில் கலந்து கொள்வோரின் தொகையைக் குறைக்கும் மொத்தத்தில் தமிழ் வாக்குகள் பலவாகச் சிதறும். எனவே தமிழ்ப் பொது வேட்பாளர் அல்லாத எந்த ஒரு தெரிவும் தமிழ் வாக்குகளைப் பலவாகச் சிதறடிக்கும்

இப்பொழுது மிக எளிமையான ஒரு கேள்வி தான் உண்டு. தமிழ் மக்களை சிதறு தேங்காயாகச் சிதறடிப்பதா? அல்லது ஒவ்வொரு நெல்மணியாகக் கூட்டிக் கட்டுவதா?

நன்றி: நிலாந்தன்

**முக்கிய அறிவித்தல்**

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
MY EVERYDAY SHOPPING
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
10
20
40
80
160
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM

# அழிவின் கைகள்

–இளவேனில்




முற்றத்திலிருந்து மரக்குற்றியின் மேல் முத்தன் அசைவற்று இருந்தான். அவன் விழிகள் ஆகாயவெளியின் எல்லையில் எதையோ வெறுப்புடன் தேடிக் கொண்டிருந்தன.

“இன்னிக்கு என்ன செய்யிறது” அவனது இதயம் தவித்தது. குடிசையின் இறந்துயோன முகட்டு ஓலைகளை காற்று அசைத்து துன்பப்படுத்தியது. அந்தக் குடிசைக்கு உள்ளே தான்… அவனது உயிருக்குயிரான ஜீவன்கள்… நேற்று முழுவதும் ஒன்றுமில்லாமல்.

“செ… எத்தென நாளிக்கு தான் இப்பிடி…” ஒரு முடிவுக்கு வந்தவன் போன்று எழுந்தவன் நெஞ்சை அகட்டி கைகளை ஒரு தரம் அகலவிரித்து வீசினான். எழுந்து நடந்தவன் வேலிக் கரையில் நின்ற வாய்க்குள் வைத்துச் சப்பினான். வெறுக்கத் தக்க கசப்பு நாவெங்கும் பரவியது. வாயில் கூடிய உமிழ்நீரை கறாப்பித் துப்பி விட்டு கண்டாயத்தை பார்க்க நடந்தான்.




திரும்பி வந்தவன், குடத்து நீரை எடுத்து வாயை அலசிவிட்டு அதே மரக்குற்றியில் தன்னைச் சோரப் போட்டுக் கொண்டு பழைய படியும் அசைவற்று இருந்தான்.

தேனீர் நாக்கை நனைத்தது. “வெறுமையான வவுத்தை நிரப்ப இந்த சாயத்தால எப்படித் தான் முடியுதோ…” பார்வதிக்கு வியப்பாக இருந்தது. முத்தனுக்கு முன்பாக ஒரு நாரையை போல கழுத்தை உள்ளுக்கு இழுத்து கால்களை மடக்கிக் கொண்டு அவளும் இருந்தாள்.

முத்தன் நிமிர்ந்து தனது மனைவியைப் பார்த்தான். பார்வதி முகம் மெலிந்து இளைத்துப் போயிருந்தாள். உதடுகள் இறுக்கமாக முடியிருந்தன. தலையில் சில நரைகள் தெரிந்தன. வறுமை மனிதர்களை எப்படி எல்லாம் தின்று தீர்க்கிறது.

“பிள்ளைங்க எழும்பலையா”

“இன்னமும் இல்லீங்க” பார்வதி இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள் “அதுவ எந்திருச்சு பசின்னா…” நினைக்கவே அவளுக்கு அழுகை வந்தது. இதயம் பாரமாக கனத்தது.

“நான் ஒருக்கா வெளியில போய்த்து வாறப்ப” அவன் வேகமாக நடந்தான். மனது உறுத்தியது. கால்கள் நடக்க முடியாமல் தயங்கின.

“பிள்ளைங்க எந்திரிச்சு அதுவ பசியின்னு அழுதா அதை எப்படித் தான் பொறுத்துக்கப் போறாளோ…!” முத்தன் வீதிக்கு வந்து நடந்தான். “வெடிஞ் செழும்பி மொத மொதலா… கடனுக்குப் போயினிக்கிறது…’ அவனுக்கு கூச்சலாகவும் அச்சமாகவும் இருந்தது. நடையில் சோர்வு புகுந்து கொண்டது. ஆனாலும் என்ன செய்வது…

தரிசாய் கிடந்த வயல் வெளிகளிற்கு நடுவில் பட்டிகள் பரவி நின்றன. வீதிக்கு அருகாக வாய்க்காலில் தண்ணீர் சத்தமிட்டு பாய்ந்து கொண்டிருந்தது. கட்டுக்குப் பழுதென்று குளத்து துலுசை யாரோ திறந்து விட்டிருந்தார்கள்.

செ… இதென்ன அநியாயம். வயல்கள் வெறுமையாய் கிடக்கின்றன. தண்ணி விழலுக்கு பாயுது… சீ… இது பெரும் கொடுமை… வழமையான நாட்களென்றால்…! இப்போ உழவு காலம் இந்தச் சேத்து நிலத்தில் அவன் நீந்திக் கொண்டிருப்பான்.

1977. தமிழர் சிங்களவர் கலவரம் ஒன்று நடந்தது. அதை ஏன் தமிழர் சிங்களவர் கலவரம் என்று சொல்வான்? சிங்களவருக்கெதிராக தாங்கள் அழிபட்டுப்போகும் இறுதிக் கணம் வரைக்கும் எந்தத் தமிழனும் ஒரு துரும்பைக் கூட தூக்கவில்லையோ? சரி, அப்போது தான் அந்தச் சிங்கள மிருகங்கள் மனிதர்கள் மீது பாய்ந்த அந்த நாட்களில் தான் மாத்தளையிலிருந்து முத்தன் ஓடி வந்தான்.

ஐயோ! அதுவொரு பயங்கர இரவு. இருளில் தீப்பந்தங்களுடன் வந்த சிலர் அந்த தோட்டத்து லயன்கள் மீது மிருகங்களைப் போல் பாய்ந்தர்கள். அவலச் சத்தம் மலைகளில் மோதி மீண்டும் அவர்களின் காதுகளுக்கே திரும்பி வந்தது.

அதன் பின்பு, முத்தன் அவன் அப்பனையோ, தாயையோ அவனது அன்புக்குரிய தங்கையையோ காணவே இல்லை. எப்படியோ கூட்டத்தோடு கூட்டமாக வன்னிக்கு வந்து சேர்ந்தான்.

இங்குதான் என்ன மாறுதல், ஒன்றுமில்லை. அங்கு கொழுந்து பறித்தவன் இங்கு அருவி வெட்டினான். பத்தாததற்கு மிளகாய்க் குள்ளும், வெங்காயத்திற்குள்ளும் நின்றான்.

அவனது வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவே இல்லை. ஆனாலும் இரண்டு வருடங்கள் கழிந்து போது அவன் ஒரு திறமையான கூலியாக மாறி இருந்தான்.

அந்த வருடம்தான்… ஓர் அறுவடை காலம் காளியப்பன் தன் மகளை முத்தனுடன் இனைத்து வைக்க ஒப்புக் கொண்டான். பார்வதிக்கும் மனதிற்கு நிறைவாக இருந்தது.

கிராமத்து ஆண்டி அதன் முடிவோடு காட்டுத் துண்டை வெட்டி முத்தன் தனது வாழ்விடத்தை அமைத்துக்கொண்டான். விதானையாருக்கு அது அடியோடு பிடிக்காது விட்டாலம் எப்படியோ முத்தன் அங்கேயே இருப்புக்கொண்டு விட்டான்.

மனமொத்த தம்பதிகள்… மகிழ்ச்சிக்கு என்ன குறைவிருக்கிறது? அவர்கள் இருவரும் சேர்ந்தே வேலைக்கு சென்றனார். வயல்களிலும் தோட்ட நிலங்களிலும் வருடம் முழுவதும் அவர்களுக்கு வேலை இருந்தது.

பார்வதி அடுத்தடுத்து இரண்டு பெண் குழைந்தைகளுக்கு தாயானாள். அதன் பின்பு அவர்களுக்கு குழந்தைகள் கிடைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல முத்தனின் மனதில் புதிதாக ஓர் ஏக்கம் பற்றிக் கொண்டது. பார்வதியும் தான் அளவுக்கு அதிகமாக அதை விரும்பினாள். மனிதர்கள் எப்போதும் அப்படித்தானே. கிடைக்காததிற்காக ஏங்கித் தவிப்பது மனித இயல்பு தானே.

முடிவாக எட்டு வருடங்களின் பின்பு அவர்களுக்கு ஆண் குழந்தை கிடைத்தது. அதன் பின்பு முத்தன் பார்வதியை வயலுக்கு வரவேண்டாம் என்று சொல்லி விட்டான். மனைவியும் பிள்ளையும் அவனுக்கு புனிதப் பொருட்களாக போய் விட்டார்கள். அவன் வயல்களில் நின்றான். ஒரு மாட்டைப் போல் ஓய்வு ஒழிசல் இல்லாமல் உழைத்தான்.

பார்வதியும் குழந்தைகளும்தான் அவனது உலகமாக போய் விட்டது. இப்போதெல்லாம் வெளியில் நேரத்தை செலவிடுவதை குறைத்து விட்டான். வேலை முடிந்ததும் வீட்டுக்கு வருவான். உடலை அவசரமாக கழுவிவிட்டு பிள்ளைகளிடம் ஓடுவான்.

கடைசி மகன் அப்பாவின் மயிரடரந்த நெஞ்சில் ஏறுவான். உதைப்பான். தவளுவான். அப்பாவின் முகத்தில் அடித்து மயிரைப்பிடித்திழுப்பான். அவனது செல்லச்சிரிப்பும். தலையை ஆட்டிக்கதை சொல்லும் அழகும் முத்தனை இயக்கும் ஜீவசக்தியாக இருந்தது. அவர்களின் மகிழ்ச்சியான விளையாட்டுத்தான் அந்த குடிசை முழுமைகும் வெளிச்சத்தை வீசியது.

நாட்டில் இப்படி மாற்றங்கள் வரும் என்று யார் கனவு கண்டார்கள். பொருளாதாரத் தடை என்றார்கள். தமிழ் நிலத்திற்கு

எனி எதுவுமே வராது என்றார்கள் முத்தனுக்கு விளங்க வில்லை.

“தமிழன்களெண்டால் அடி வாங்கணும், எப்போதும் அடிமை யாய் இருக்கணும் எண்டு நினைக்கிறாங்க. செ… இந்தக் கொடுமைய்ங்க எப்ப தொலையப்போவுது.” அவன் அடிக்கடி முணுமுணுத்தான்.

உழவுக்கு எண்ணெய் இருக்கவில்லை. அப்படியே உழுதாலும் பசளையோ கிருமி நாசினியோ கிடைக்கவில்லை. வயல் வெளிகள் தரிசாகின. தோட்டங்களும் கைவிடப்பட்டன.

பொருட்களின் விலையோ மலைபோல உயர்ந்தது. முத்தன் ஆடிப் போனான். வறுமை அவனது வீட்டை ஆக்கிரமித்து, பசியும் பட்டினியும் வீட்டிற்குள் இருப்புக் கொண்டன.

“நமக்கென்னா உணவு தேவையில்லை, மருந்து தேவை யில்லை, ஏன்… உயிரே தேவையில்லை…” முத்தனின் நெஞ் சம் சிங்கள அரசின் கொடிய செயல்களை எண்ணிக்கொதிக் கும். வாழ்வை ஓட்டுவதற்கு அவன் போராடிப் பார்த்தான். உண்மையில் செல்வதானால் அவனுக்கு பிழைப்புக்கு எந்த வழியுமே இருக்கவில்லை. காட்டுக்கு வேட்டைக்கு போனான். சில வேளைகளில் கிடைத்த உடும்பும், தேனும் வீட்டுக்கு சாப்பாடு போட்டது. ஆனால், ஒல்லியாய் சோர்ந்து போன கிழட்டு நாயால் அவனுடன் எப்படி வேட்டைக்கு போக முடியும்.

முத்தனின் கண்களுக்கு முன்பாகவே அவனது மனைவியும் குழந்தைகளும்… பட்டினியுடன் போராடினார்கள். பிள்ளை களின் நிலையைப் பார்க்க கவலை நெஞ்சைப் பிளக்கும். அவர்களை பார்க்காமல் விலகி ஓடப்பார்ப்பான், அது எப்படி முடியும்? தவிர்க்க வேண்டுமென்றே நினைத்துக் கொண்டே அது முடியாமல் கடைசி மகனைப் பார்ப்பான். அவனது கதைகள் சொல்லும் கண்கள் எங்கேயோ குழிக்குள் விழுந்து நெஞ்சு வற்றிப் போய் விலா எலும்புகள் வெளிக்கிளம்பி… முத் தனின் கண்கள் கலங்கும். வேதனையை தாங்க முடியாமல் அவன் நெஞ்சம் தவிக்கும். அந்தக் குடிசையை விட்டு ஓடப் பார்ப்பான், பார்வதியின் பரிதாபமான பார்வை அவனைத் தடுத்து நிறுத்தும்.

இந்த நிலையில் ஒரு வருடம் எப்படி கடந்து போனது?

முத்தன் தொளில் கிடந்த துண்டை எடுத்து உதறிவிட்டு முகத்தை அழுத்தித் துடைத்தான்.

கடன்… கடன்… - எப்ப என்னென்று கொடுக்கப் போறன். அவனது உடல் ஒருதரம் நடுங்கியது.

“இஞ்சரப்பா இவன் முத்தன் வந்திருக்கிறான்” மணியத்தார் வழமை போல தனது மனைவிக்கு அறிவித்தல் விடுத்து விட்டு முத்தனை உற்றுப் பார்த்தார். அவன் வந்த நாட்தொடக்கம் அவருக்கு அவனும் ஒரு பிள்ளை.

“அம்மா ரெண்ணு முணு நாளா… வீட்டில் ஒண்ணுமில்லை… பிள்ளையளும்…”. “எட படுபாவி, ஏன்ரா நேற்றே வரவில்லை” அந்தக் கிழவி திட்டிக்கொண்டே வீட்டுக்குள் போனாள். ஒரு துணிப்பையில் இரண்டு மூன்று கொத்து அரிசி.

“இந்தா கொண்டோடு, பிறகு வந்து கதை” முத்தன் நடந்தான். இல்லை ஓடினான். எது எப்படியோ அவன் கால்கள் நிலத்தில் படவில்லை.

எதிராக ஒரு பெண் தலைவிரி கோலமாக கையில் என்ன…? பார்வதி…?

“ஐயோ, ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க… காப்பாத்துங்க” பார்வதி பதறிக் கொண்டிருந்தாள்.

ஆசுபத்திரி பதினாலு கட்டைக்கு அங்கிட்டு இப்ப எப்படி… திரும்பவும் முத்தன் ஓடினான்.
வைத்தியசாலைக்கு,

அந்த அனுபவம் மிகுந்த நரைவிழுந்த வைத்தியர் அமைதியாக மரணத்தைத் தேடிப் போகும் எந்த மனிதரையும் காப்பாற்றும் வலுவற்று நடந்து கொண்டிருந்தார்.

“ஐயா எண்ட பிள்ளையை காப்பாத்துங்க”

வைத்தியர் மெதுவாக முத்தனின் பிள்ளையைத் தூக்கி நன் றாகப் பார்த்தார். கண்கள் குழிவிழுந்து, விலா எலும்புகள் சிரிக்க கால்கள் சூம்பிப் போய்… வயிறு மட்டும் வற்றாமல்… வறுமை அவனைக் கொல்கின்றது. இல்லை, தமிழ்க் குழந்தை என்பதற் காக அவன் சாகடிக்கப்படுகின்றான்.

அந்தக் கிழவரின் கண்கள் கலங்கியது. குழந்தையை வளர்த்தி விட்டு விலகி நடந்தார்.

“ஐயா. கையை விரிச்சுப் பிடாதீங்க. ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க” பார்வதி கதறி அழுதாள்.

வைத்தியர் திரும்பியும் பாராமல் நடந்து கொண்டிருந்தார். கால்கள் பின்னித் தள்ளாடின. அவர் விழுந்து விடுவார். அருகில் வந்த தாதி ஒருத்தி அவரைத் தாங்கிப் பிடித்தாள். அவரின் கண்களில்…

“ஐயா அந்தப் பிள்ளை தயக்கத்துடன் அவள் வார்த்தைகள் வெளிவந்தன” அந்தக் குழந்தையை சாகவிட எனக்கு விருப் பமில்லை. அந்தக் குழந்தையை மட்டுமல்ல இங்கு யாரையுமே சாகவிட எனக்கு விருப்பமில்லை. ஆனா… எதை வைச்சுக் கொண்டு நான் யாரை காப்பாத்துறது. இந்த ஆஸ்பத்திரி முழு வதும் தேடி எங்காவது மருந்திருந்தா கொண்டுவா. நான் எல் லோரையும் காப்பாத்துறன்” வைத்தியர் நடந்து கொண் டிருந்தார்.

“ஐயோ ஏண்ட பிள்ளை போட்டானே” காற்றில் படர்ந்த பார்வதி யின் குரல் அவரின் இதயத்தில் பாரமாக கனத்தது.

களத்தில் 24.7.1992

# சுதுமலைப் பிரகடனம்

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் யாழ்ப்பாணம் சுதுமலை என்னும் இடத்தில் 04.08.1987அன்று முதன்முதலில் தமிழீழ மக்கள் முன் தோன்றி உரையாற்றினார். இவ் உரையே வரலாற்றுச் சிறப்பு மிக்க சுதமலைப் பிரகடனமாகும்.**



**“இந்திய – இலங்கை ஒப்பந்தமானது எமது தேசிய இன்ப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தராது” என்பதை மிகத் தீர்க்கதரிசனமாக அவ் உரையில் கூறியிருந்தார் தலைவர் அவர்கள்.**

2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203


www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# திருக்கோணேச்சரப் பிரச்சினையை தீர்க்கவும்!

## திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.எஸ் குகதாசன்

06.08.2024

திருக்கோணேச்சர ஆலய சூழலில் சட்ட விரோதமாகக் கட்டப் பட்ட கடைகளினால் கோயிலின் புனிதத் தன்மை கெடுவதோடு இங்கு சில சமூக விரோதச் செயல்பாடுகளும் இடம் பெறு கின்றன. எனவே இக்கடைகளை வேறு ஒரு தகுந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என 2019 மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப் பட்டது எனினும் இம் முடிவு இது வரையிலும் செயற்படுத்தப்பட வில்லை என விச னம் தெரிவித்த இலங்கை தமிழரசுக்கட்சியின் திருகோண மலை மாவட்ட எம்.பி.யான கே.எஸ். குகதாசன் இந்த முடிவை விரைந்து செயற்படுத்துமாறும் வலியுறுத்தினார்.



பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (06)இடம்பெற்ற மாத் தறை நில்வலா கங்கை அண்மித்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பு காரணமாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை' தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கன்னியுரையாற்று கையிலேயே இவ்வாறு வலியுறுத்திய அவர் மேலும் பேசு கையில்.

திருக்கோணேச்சரம் வரலாற்று புகழ்மிக்க ஒரு புனிதத் தலம் இக்கோவிலுக்கு பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வருகின் றனர் இவர்கள் இந்த இடத்தின் அழகைக் கண்டு களிக்க விரும்புகின்றனர். சட்ட விரோதமாகக் கட்டப்பட்ட கடைகள் இதற்குத் தடையாக உள்ளன. மேலும் இக்கடைகளினால் கோயிலின் புனிதத் தன்மை கெடுவதோடு இங்கு சில சமூக விரோதச் செயல்பாடுகளும் இடம் பெறுகின்றன. எனவே இக் கடைகளை வேறு ஒரு தகுந்த இடத்திற்கு மாற்ற வேண்டும் என 2019 மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஒருமனதாக முடிவு எடுக்கப் பட்டது எனினும் இம்முடிவு இது வரையிலும் செயற்படுத்தப்பட வில்லை இந்த முடிவை விரைந்து செயற் படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவதாக நமது நாட்டின் ஜனாதிபதியும் அரசும் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று மக்களிடம் வேண்டு கோள் விடுக்கின்றனர். எனினும் அரசின் ஓர் அங்கமான வனத் துறை திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ நாற் பதாயிரம் ஏக்கர் நிலைத்தையும் தொல்பொருள்துறை 2600 ஏக்கர் நிலைத்தையும் கையகப் படுத்தி வைத்துள்ளனர்.

இந்தக் காணிகள் 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் ஆகும். 1985ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் பயிர் செய்த நிலங்கள் விடுவிக்கப்படும் என்று குடியரசுத் தலைவர் கூறிய பொழுதும் அது நடைபெறவில்லை. இந்தக் காணிகளை விடுவிக்க அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ள பகுதிக்குள் 80 சிறு குளங்கள் உள்ளன. வனத்துறை இந்த நிலங்களை விடுவித்து இக்குளங்களை திருத்தி அமைப்பதன் மூலம் சில ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்தை நெற்செய்கையின் கீழ் கொண்டு வர முடியும். இவற்றின் மூலம் நாட்டின் நெல் உற்பத்தியை பெருக்குவதோடு உழவரது பொருண்மிய நிலையையும் மேம் படுத்தலாம்.

மூன்றாவதாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள கடற் தொழிலாளர் எதிர்கொள்ளும் சிக்கல்களை பற்றி தங்கள் கவ னத்திற்கு கொண்டுவருகின்றேன். இந்த மாவட்டத்தில் ஏறத் தாழ 23.000 ஆயிரம் குடும்பங்கள் கடற் தொழிலை நம்பி வாழ்கின்றனர் எனினும் நவீன மீன்பிடி முறைமைகள் எதுவும் பின்பற்ற படுவதில்லை. பன்னாள் மீன்பிடிப் படகு வைத்திருக் கும் மீனவர்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றனர். பெரும் பாலும் ஓர் எந்திரம் பூட்டிய படகில் சென்று மீன் பிடிப்பவர்களே மிகப் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்களால் அதிக மீன் களையும் பிடிக்க இயலவில்லை கடலுக்குச் செல்லும் பொழுது அடிக்கடி காணாமலும் போகின்றனர். அப்படி துன்பப் பட்டு போராடி பிடித்த மீன்களுக்கு சரியான விலையும் கிடைப் பதில்லை பெரும்பாலும் இடைத் தரகர்களே இலாபம் ஈட்டு கின்றனர்.

இதற்கான தீர்வாக ஏழை மீனவர்களுக்கு பன்னாள் மீன்பிடிப் படகு கொள்வனவு செய்வதற்கு மானியத்துடன் கூடிய கடன் கொடுக்கும் திட்டங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும்.

மேலும் பன்னாள் மீன்பிடிப் படகுத் துறைகள் திருக்கோண மலை மாவட்டத்தில் உள்ள இலங்கைத் துறை முகத்துவாரம், சம்பூர் மற்றும் சல்லி ஆகிய மீன்பிடி கிராமங்களில் நிறுவப்பட வேண்டும். இதனால் மீன் பிடியையும் மீனவர் பொருண் மியத்தையும் கூட்ட இயலும் என்பதோடு கடலில் காணாமற் போவோரின் எண்ணிக்கையும் குறையும். அதுமட்டுமின்றி படகுகள் காணாமற் போகுமிடத்து அப்படகுகளை வானூர் திகள் மூலம் தேடும் நடவடிக்கைகளை அரசு செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்டக் கடற்தொழிலாளர் எதிர்கொள்ளும் மற்றுமொரு சிக்கல் சுருக்குவலையில் மீன் பிடிப்பதாகும். இதன் காரணமாக கடல் வளம் வரம்பை மீறிச் சுரன்டப் படுவதோடு 100 ஏழை மீனவர் பிடிக்கும் மீன்களை ஒரே ஒரு பெரும் முதலாளியின் சுருக்குவலை படகு பிடிக்கின்றது. சுருக்குவலை சிக்கலுக்குத் தீர்வு எட்டப்பட வேண்டுமாயின் சட்டங்கள் கடுமை யாக்கப்பட்டு அவற்றை முழுவதுமாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

நான்காவதாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் நிலவும் கல்வி தொடர்பான சிக்கல்களை தங்கள் மேலான பார்வைக்கு கொண்டு வருகின்றேன் இம் மாவட்டத்தில் 166 தொடக்க கல்வி ஆசிரியர் பற்றாக்குறையும் 116 கணித ஆசிரியர் பற்றாக்குறை யும் 53 ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையும் 60 அறிவியல் ஆசி ரியர் பற்றாக்குறையும் 52 கணினி ஆசிரியர் பற்றாக்குறையும் 53 தமிழ் ஆசிரியர் பற்றாக்குறையும் ஆக மொத்தம் 500 ஆசி ரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.இதனால் மாணவர் களது கல்வி மிகவும் பாதிக்கப் படுகிறது எனவே ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு போதிய ஆசிரியரை மாவட் டதிற்கு ஒதுக்கி தர வேண்டும்.

இப்பொழுது உள்ள முறையில் ஆசிரியர் வளப் பங்கீடு சரியான முறையில் அமையவில்லை மாகாணங்களுக்கு ஆசிரியர் நிய மிக்கும் பொழுது பெரும்பாலான ஆசிரியர் திருக்கோணமலை மாவட்டத்திற்கு வருகின்றார்கள். வந்த சில காலங்களில் தத்தம் மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுகொண்டு சென்று விடு கின்றனர்.



இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்குக் கல்வியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கும் பொழுது பிரதேச செயலாளர் மட்டத்தில் உள்ள வெற் றிடங்களுக்கு அவ்வவ் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்தால் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். உள்நாட்டு அமைச்சு கிராம அலுவலர்களை நியமிக்கும் பொழுது பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள வெற்றிடங்களுக்கு. அவ்வவ் பிர தேச செயலாளர் பிரிவுகளில் உள்ளவர்களையே நியமிக்கின் றார்கள் இதே முறையை கல்வி அமைச்சும் பின் பற்றினால் ஆசிரியர் பற்றாக்குறைச் சிக்கலுக்கு தீர்வு காணலாம்.

மேலும் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை. கல்வித் துறைக்கு 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.3% நிதி மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது.



2024 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 1.5% ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் குறைந்தது 5% ஆவது உயர்த் தப்பட வேண்டும்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் மாவட்ட மருத்துவமனையில் 54 மருத்துவர் பற்றாக்குறையும் 9 துறைசார் மருத்துவ நிபுணர் 7 செவிலியர் பற்றாக்குறையும் 3 மருந்தாளர் பற்றாக்குறையும் 39 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் 3 சாரதிகள் பற்றாக்குறையும் மேலும் மாகாண அரசின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் 40 துறைசார் மருத்துவ நிபுணர் பற்றாக்குறையும் 21 மருத் துவர் பற்றாக்குறையும் 27 செவிலியர் பற்றாக்குறையும் 22 மருந்தாளர் பற்றாக்குறையும் 6 மிகைஒலி ஊடுகதிர் தொழில் நுட்பவியலாளர் பற்றாக்குறையும் 100 சுகாதாரப் பணியாளர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையில் ஒரு பகுதி கட்டப்பட்ட நிலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு உள்ளன. இப்பிரிவில் அதிகளவில் நோயாளிகள் அனுமதிக்கப் படுவதால், நோயாளிகளை நிர்வகிக்க போதிய இடவசதி இல்லாத நிலை உள்ளது. இக்கட்டடத்தை கட்டி முடிக்கப்பட வேண்டும்.

மேலும் திருக்கோணமலை மாவட்டத்தில் புற்றுநோய் சிகிச் சைக்கான பிரிவு ஒன்று இல்லை இதனால் இம் மாவட்ட மக்கள் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். இவர்கள் வெளி மாவட் டங்களுக்கு சிகிச்சைக்காகச் செல்கின்றனர். இதன் விளைவாக இம்மக்கள் பணச் செலவு, போக்குவத்து, நேரம், மொழி, தங்கு மிட வசதி முதலிய சிக்கல்கள்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றை தீர்ப்பதற்கு புற்றுநோய் பிரிவு ஒன்றை இம்மாவட்ட மருத்துவமனையில் நிறுவ வேண்டும்.

அடுத்ததாக திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள இளை ஞர்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற முடியாமல் இருப் பதற்கு முக்கிய காரணம் விளையாட்டு அரங்கு இல்லாமல் இருப்பதே ஆகும். இம்மாவட்டத்தில் உள்ள முதன்மையான மிகச் சிறந்த பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய Mc.Heizer விளையாட்டு அரங்கு நீண்ட காலமாக மறுசீரமைக் கப் படாமல் புதர் மண்டிபோய் உள்ளது. இதை மறுசீரமைப் பதன் மூலம் திருக்கோணமலையில் விளையாட்டு துறையில் சாதிக்க எண்ணும் பல நூற்றுக்கணக்கான இளையோர்கள் முன்னேறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதோடு பன்னாட்டு விளையாட்டு போட்டிகளை இங்கே நடத்தமுடியும் இதன் வழியாக நாட்டிற்கு அந்நிய நாணய மாற்று வருவாயை கொண்டு வர முடியும்.

அடுத்ததாகத் துறைமுக அதிகார சபையானது, பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பதினொரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 5572 ஏக்கர் நிலத்தை கையகப் படுத்தியுள்ளது. இதில் 1868 ஏக்கர் நிலத்தில் 30 ஆண்டு களுக்கு மேலாக மக்கள் வாழ்கின்றார்கள். துறைமுக அதிகார சபையின் கையகப் படுத்தல் காரணமாக மக்கள் தங்கள் நிலத் தில் எந்தவித செயற்பாடுகளையும் செய்ய இயலாமல் உள்ளது ஆகவே இவ்விடங்களை அங்கு வாழும் மக்களுக்கு கை யளிக்க வேண்டும்.

அடுத்ததாகத் திருக்கோணமலை மாவட்டத்தில் ஏறத்தாழ 10,000 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் உள்ளன இவர்கள் போதிய படிப்பறிவு, பட்டறிவு மற்றும் வினைத்திறன் அற்றவர்களாக காணப்படுகின்றனர் ஆகவே இவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை கொடுத்து கமத்தொழில், கைத் தொழில், கால்நடை வளர்ப்பு, சேவைத் துறை முதலியவற்றில் சுயதொழில் செய்வதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

திரு கோணமலை மாவட்டத்தில் உள்ள பல பிரதேச செயலாளர் பிரிவுகளின் எல்லைகள் தெளிவாக இல்லை இதனால் அதிகாரி களும் பொது மக்களும் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். இந்த எல்லைகளை தெளிவு படுத்த வேண்டும் என்றார்.

# 30 ஆம் ஆண்டு வீரவணக்கம்

**16.08.1994 அன்று**
**யாழ் – காங்கேசன்துறை**
**கடற்பரப்பில் சிறீலங்கா**
**கடற்படையினரின் கட்டளைக்**
**கப்பல் மீதும், டோறா விசைப் படகு**
**மீதும் நடத்திய கரும்புலித் தாக்குதலில்**
**வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்**





**கடற்கரும்புலி**
**கப்டன் அங்கயற்கண்ணி**
**(துரைசிங்கம் புஸ்பகலா)**

## அங்கயற்கண்ணி அனல் திறந்தாள்
## அலைகடல் ஏறிடும் கடற்புலி ஆனாள்.
## கரும்புலி ஆகியே... கப்பலைத் தகர்த்தாள்
## காவியம் எழுதியெம் கண்களில் நிறைந்தாள்


தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஒல்லாந்த நிர்வாகத்துக்கு அடிபணியாத இலங்கை நாராயண வன்னியனார்


***இலங்கை நாராயண வன்னியனார் ஒல்லாந் தருக் கெதிரான நடவடிக்கைகளை மேற் கொண்ட வன்னியர்களுள் குறிப்பிடத் தக்கவர். 1967 ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்திற்குச் சமூக மளிக்குமாறு கேட்கப்பட்டபோது ஏனைய வன் னியர்களான நல்ல மாப்பாணர், புவிநல்லமாப் பாணர், அம்பலவாணர் ஆகியோருடன் சேர்ந்து இலங்கை நாராயணரும் செல்லவில்லை. ஒல் லாந்தருக்குக் கொடுக்கவேண்டிய திறையான யானை களை ஒழுங்காகச் செலுத்தவில்லை. ஒல்லாந்தரை ஏமாற் றுவதில் இவர் ஆர்வம் காட்டியுள்ளார்.***

வன்னிப்பிரதேசம் ஈழத்தின் பல பாகங்களிலும் பரந்திருந்தது. அடங்காப்பற்று, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வன்னிமைகள் இருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகளுண்டு. இவற்றைவிடச் சிங்களப் பிரதேசங்களிலும் வன்னிமைகள் இருந்திருக்கின்றன. இங்ஙனம் இராஜரட்டை, மாயரட்டை, ரோகணம் ஆகிய இலங்கையின் பல பிரிவு களிலும் வன்னிமைகள் இருந்தபோதும் அடங்காப்பற்றே வன்னி என்னும் பெயருக்கு உரிமை பூண்டு நிற்கிறது.

வன்னிப்பிரதேசம் மிகவும் பழைமையான வரலாறுள்ள பிரதேசம். ஈழத்தமிழர்களின் வரலாற்றில் வன்னியின் வரலாறு மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கிறிஸ்துவுக்கு முற் பட்ட நூற்றாண்டுகளிலேயே இங்கு சிற்றரசுகள் சில தோன்றி இருந்தன. இற்றைக்கு ஈரயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வன்னியில் நாகமன்னன் என்பானும் அவனுடைய மகள் அநுராதியை மணம் முடித்த உத்திமன்னன் என்பானும் ஆட்சி நடத்தியது பற்றிப் பெரிய புளியங்குளத்திலுள்ள நான்கு கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம். இவர்கள் காலத்திலே வன் னியிலிருந்த தமிழ் வணிகன் விசாகன் போன்ற பல பிரமுகர்கள் பற்றியும் பிறர் பற்றியும் அறிவதற்கு இதுவரை 54 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இவர்கள் காலத்தின் பின் வன்னிக் குறுநில




படம் - 4: 1719 ஆம் ஆண்டில் யெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படத்தின்படி வன்னிப்பிரிவுகளைக் காட்டும் படம்.



அரசுகள் வீழ்ச்சியடைய அநுராதபுர மன்னரது ஆதிக்கம் அங்கு பரவியது. அநுராதபுரத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் வன் னிச் சிற்றரசுகள் எழுச்சி பெற்றன எனப் பேராசிரியர் கா. இந்திர பாலா குறிப்பிடுகின்றார்.

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற் றாண்டுவரை விட இலங்கையில் வன்னிச் சிற்றரசுகள் இருந் திருக்கின்றன. "வட இலங்கையில் யாழ்ப்பாண அரசு எழுச்சி பெற முன்பே வன்னிமைகள் தோன்றியிருந்தன" எனப் பேராசிரியர் சி. பத்மநாதன் கூறுகின்றார்.

## அடக்காப்பற்று வன்னிமைகள்

வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவி யாற்றையும், நுவரகலவிய மாவட்டத்தையும், மேற்கே மன் னார் மாவட்டத்தையும், கிழக்கே திருகோணமலை மாவட் டத்தையும் எல்லையாகவுடைய பரந்த பிரதேசம் அடங்காப்பற்று என அழைக்கப்பட்டது.

இப்பிரதேசம் செட்டிகுளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளிய வளை, கரிக்கட்டுமூலை, தென்னன்மரவடி, கருநாவற்பற்று என்னும் வன்னிமைகளை உள்ளடக்கியது. இப்பிரதேச ஆட்சித் தலைவர்கள் வன்னிபம், வன்னியனார் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டனர். நாட்டுப்பற்றும் வீரமும் அஞ்சாநெஞ்சும் சுதந்திர வேட்கையும் உடையவர்களாக இவர்கள் திகழ்ந்தனர். பெயரளவில் யாழ்ப்பாண அரசின் ஆணைக்கு உட்பட்டதாக இருந்தபோதும் நடைமுறையில் இவர்கள் சுதந்திர ஆட்சித் தலைவர்களாகவே இருந்தனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகளும் பின்னர் வந்த போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வன்னிமைகள் மீது தமது மேலாணையை நிலைநிறுத்தும் நோக்குடன் இவர்களிடம் திறை பெற விரும் பினர். ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற தர் பாருக்கு சமூகமளிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். இவர் களின் சிலர் திறை செலுத்த ஒப்புக்கொண்ட போதும் அவற்றை ஒழுங்காகச் செலுத்தாமலும் பின்போட்டும் வந்தனர். இன்னும் சிலர் முற்றாகத் திறை செலுத்துவதைத் தவிர்த்தனர்.

வன்னியர்கள் தங்கள் அந்தஸ்துக்கேற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலியவற்றையும், சிறப்புச் சின்னங்களையும்



வரிசைகளையும் கொண்டிருந்தனர். ஆதிக்கம் செலுத்துவதற்கு ஏதுவான படை பலத்தையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். ஆட்சியுரிமை பரம்பரை வழியாக இருந்தது. நிர்வாகத்திற்கும் நீதிபரிபாலனத்திற்கும் அவர்களே பொறுப்பாக இருந்தனர். தமது ஆள்புலத்தில் எல்லா அதிகாரிகளையும் அவர்களே நியமித்தார்கள்.

வன்னித் தலைவர்களின் கயிலை வன்னியன், பண்டார வன்னியன், இலங்கை நாராயண வன்னியன் முதலானோர் பலவிதத்திலும் சிறப்புடையவர்கள். காக்கை வன்னியன் என்னும் ஒருவன் வன்னிமைகளில் என்றும் ஆட்சி புரிந்ததற்குச் சான்றில்லை. போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆவணங்களிலும் இப்பெயர் இடம் பெறவில்லை. ஊர்காவல்துறைத் தலைவனாகக் காக்கை வன்னியன் இருந்தான் எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை "சங்கிலி" நாடகத்தில் குறிப்பிடுகிறார்.



## இலங்கை நாராயண வன்னியன்

வன்னி நாட்டுக் குறுநில மன்னன் ஒருவன் சிதம்பரத்திற்குத் தானமளித்ததைப் பற்றிக் கள்ளியங்காட்டுக செப்பேடு குறிப்பிடுகின்றது. இது கயிலை வன்னியனார் சிதம்பர தருமசாதனப் பட்டயம் என அழைக்கப்படுகின்றது. 1722 ஆம் ஆண்டைச் சேர்ந்த இப்பட்டயம் கயிலை வன்னியனார் பேரில் அவருக்குப் பின் வந்த வன்னியர்கள் சிதம்பரத்திற்கு அளித்த தானம் பற்றியது. இப்பட்டயத்தில் பல வன்னிக் குறுநில மன்னர்கள் பற்றிய குறிப்புண்டு.

"... சுபகிருது வரும் சித்திரை மாதம் 22 ஆம் திகதியும் பூர்வ பட்சத்தில் பறுவமும் சுவாதி நட்சத்திரமும் குருவாரமும் கூடின சுபதினத்திலே சிதம்பரம் பரராசசேகர மகாராசாவின் கட்டளை நடத்தும் சூரிய மூர்த்தித் தம்பிரான் அவர்களுக்குப் பனங்காமத்து வன்னிபம் நிச்சயச் சேனதிராய முதலியார் அவர்களும், கரிக்கட்டு மூலைப்பத்து, தென்னமரவடிப்பத்து வன்னிபம் புவிநல்ல மாப்பாண வன்னியனார் அவர்களும், புண்ணியப்பிள்ளை வன்னியனாரவர்களும் மேற்பத்து வன்னிபம் ரணசூர ரணத்ரராக வன்னியராய முதலியார் அவர்களும், கந்தையினா வன்னியனாரவர்களும் மேற்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களும் மயிலாத்தை உடையார் அவர்களும்... இவர்களும் இவர்களைச் சேர்ந்த ஊரிற் குடியானவர்களும் தங்கள் கயிலைப்பிள்ளை வன்னியனாரவர்கள் மடதருமத்துக் குத்தர்ம சாதனப் பட்டையம் குடுத்தபடி கமத்துக் மூன்று மரக்கால் நெல்லு மடதருமத்துக்குச் சந்திரா தித்திய வரைக்கும் புத்திர பவுத்திர பாராம்பரியமும் குடுத்துவரக் கடவோமாகவும்..."

இச்செப்பேட்டில் குறிப்பிட்ட "மேற்பத்து முள்ளியவளை வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் அவர்களை ஒல்லாந்தக் குறிப்பில் காணப்படும் தொன்கஸ்பார் இலங்கை நாராயண முதலியாருடன் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறது" என செ. குணசிங்கம் கூறுகின்றார். ஒல்லாந்தக் குறிப்பில் தொன் கஸ்பார் எனக் குறிப்பிட்ட அவரை ஒரு கிறிஸ்தவர் என நிலை நாட்ட முனைவது கவனிக்கத்தக்கது. ஒல்லாந்தக் குறிப்புக்களில் கயிலை வன்னியனைத் தவிர ஏனைய வன்னியர்களின் பெயரின் முன்னால் கிறிஸ்தவப் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவர்களே சிதம்பரத்திலுள்ள சைவ ஆலயத்திற்குத் தானம் செய்திருக்கிறார்கள். ஒல்லாந்த அதிகாரிகள் தமது தலைமைப்பீடத்திற்கு அனுப்பும் அறிக்கைகளில் வன்னித் தலைவர்கள் மதம் மாறித் தமக்கு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதற்காகக் கிறிஸ்தவ பெயர்களைச் சூட்டியுள்ளனர் என்றே கருதலாம்.

இலங்கை நாராயணர் வன்னிப் பதவியைப் பெறுவதற்கு முன்பு முதலியாராக இருந்திருக்கிறார். வன்னிப் பதவி பெற்ற பின்பும் முதலியார் என்ற முந்திய பதவிப்பெயர் நிலைத்திருக்கிறது. இதனாலேயே முள்ளியவளை மேற்பற்று வன்னிபம் இலங்கை நாராயண முதலியார் எனக் குறிப்பிடப்படுகின்றார். ஒல்லாந்தக் குறிப்பின்படி பனங்காம் வன்னிபம் நல்லமாப்பாணரின் மருமகனாக இவர் இருந்திருக்கிறார். சிலவேளை நல்ல மாப்பாண வன்னியனாரின் மகளை இவர் மணஞ் செய்திருக்கலாம். இத்தகைய உறவுமுறை மேற்பற்று, முள்ளியவளை வன்னிபப் பதவியைப் பெறுவதற்கும் பின்னர் பனங்காம வன்னிப் பதவியைப் பெறுவதற்கும் உதவியிருக்கலாம்.

இலங்கை நாராயண வன்னியனார் ஒல்லாந்தருக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட வன்னியர்களுள் குறிப்பிடத்தக்கவர். 1967ஆம் ஆண்டில் ஒரு கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டபோது ஏனைய வன்னியர்களான நல்லமாப்பாணர், புவிநல்லமாப்பாணர், அம்பலவாணர் ஆகியோருடன் சேர்ந்து இலங்கை நாராயணரும் செல்லவில்லை. ஒல்லாந்தருக்குக் கொடுக்கவேண்டிய திறையான யானைகளை ஒழுங்காகச் செலுத்தவில்லை. ஒல்லாந்தரை ஏமாற்றுவதில் இவர் ஆர்வம் காட்டியுள்ளார்.

1697 ஆம் ஆண்டு ஒல்லாந்த அறிக்கையின்படி நாம் இவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

1967ஆம் ஆண்டில் றைக்கு லொ டி பீற்றர் என்ற ஒல்லாந்த அதிகாரி நல்லமாப்பாணரையும் இலங்கை நாராயணரையும் அழைத்து அவர்களுக்கிடையேயான பகைமைக்கான காரணத்தை அறிய விரும்பினார். நீண்ட நேரம் அவர்களுடன் உரையாடியபின் அவர்களுக்கிடையே எவ்வித பகையையும் இல்லையென்பதனையும் ஒல்லாந்தரை ஏமாற்றுவதற்காகக் காட்டப்பட்ட போலிப் பகைமை என்பதையும் அறிந்து கொண்டார்.

திறையைச் செலுத்தாமைக்குரிய காரணத்தைக் கேட்டபோது அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டினர். முதலில் கொடுக்கவேண்டிய யானைத் திறைகள் அனைத்தையும் செலுத்திவிட்டதாகக் கூறினர். நல்லமாப்பாணர் தாம் திறை செலுத்தியதற்கு ஆதாரமான பற்றுச்சீட்டைக் காட்டினார். செய்வதறியாது திகைத்த இலங்கை நாராயணர் தமது பங்கையும் நல்லமாப்பாணரே செலுத்தியிருக்க வேண்டும் என்று சாட்டு சொன்னார்.

***வன்னித் தலைவர்களில் கயிலை வன்னியன் பண்டார வன்னியன், இலங்கை நாராயண வன்னியன் முதலானோர் பலவிதத்திலும் சிறப்புடையவர்கள்***

எனினும் இலங்கை நாராயணக்கெதிராக எந்த நடவடிக்கையையும் ஒல்லாந்தர் எடுக்கவில்லை. வன்னியர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தால் அவர்கள் கண்டியரசனுடன் சேர்ந்து தம்மை எதிர்க்கக்கூடும் என அஞ்சினர். திறைகளை ஒழுங்காகச் செலுத்தாவிட்டாலும் தமது மேலாணையை வன்னியர் பெயரளவிலேனும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே ஒல்லாந்தரின் கொள்கையாக இருந்திருக்க வேண்டும். இலங்கை நாராயணரும் நேரடியாக ஒல்லாந்தரை எதிர்க்காமல் அவர்களின் ஆணையை மறைமுகமாகத் தட்டிக் கழித்தார் என்றே கருத இடமுண்டு. இவ்வாறு இராஜதந்திர முறைகளைக் கையாண்டு வன்னியின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்தவர் இலங்கை நாராயண வன்னியராவார்.

நன்றி: தமிழ்மணி, முல்லைமணி வே. சுப்பிரமணியம் - எரிமலை ஆகத்து 2002

# கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஷோன் ஷென் (Shaun Chen) நோக்கி முன்வைக்கப்படும் மனு!

யூலை 05, 2024

**E-5058 மனவில் கையொப்பமிடுவது எப்படி?**
**https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058**

இவ்வாறாக:

★ இலங்கைத் தீவிலுள்ள தமது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மரபுவழித் தாயகமான தமிழீழத்தில் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நீட்சியான இன அழிப்பை எதிர்கொண்டுவரும் ஈழத்தமிழர் தேச மக்களிற் புலம்பெயர்ந்த பெருந்தொகையானோருக்குப் புகலிடமாகக் கனடா விளங்குகிறது (என்பதாலும்);

★ இலங்கை அரசு ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அப்பட்டமாக மீறிவந்துள்ளது (என்பதாலும்);

★ அவ்வரசின் ஊக்கத்தோடு 1956 ஆம் ஆண்டு தொட்டு தமிழருக்கு எதிரான இனப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, அவை பெரும் படுகொலைகளாகத் தொடர்ந்து, 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஓர் இன அழிப்புப் போர் ஊடாக மெய்நடப்புத் தமிழீழம் முற்றாக அழிக்கப்படுவது ஈறாகச் சரீர (பௌதிக) இன அழிப்பு பலவேறு வழிகளில் வெளிப்பட்டுள்ளது (என்பதாலும்);

★ தமிழ் இன அழிப்பு நீட்சியான தனித்துவத் தன்மையைக் கொண்டது, ஏனெனில் இன அழிப்பின் பத்துப் படிநிலைகளும் இதில் நடந்தேறியுள்ளன, அதுவும் இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஆம் ஆண்டுச் சாசனத்தின் அடிப்படையில் விசாரிக்கப்படக்கூடிய ஆரம்ப நியாயாதிக்க காலம் எப்போதிருந்து ஆரம்பிக்கிறதோ அப்போதிருந்தே அவை நடைபெற்றுவருகின்றன என்பதோடு அவை (எதிர்காலத்திலும்) மீள்நிகழும் ஆபத்துக் கடுமையாக நிலவுகிறது (என்பதாலும்);

★ இன அழிப்பு என்ற குற்றச்சாட்டை ஐ.நா. விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்றத்தில் 2019 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாளன்று நிறைவேற்றப்பட்டிருந்த பிரேரணை, ஒன்ராரியோ மாகாண சட்டவாக்க அவையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 104 ஆம் சட்டமூலம் ஆகிய இரண்டையும் இலங்கை அரசு மறுதலித்துவிட்டது (என்பதாலும்);

கீழே ஒப்பமிட்டுள்ளோராகிய கனடாவின் குடிமக்களும் வதிவிடவுரிமை கொண்டோருமான நாம் கனேடிய நாடாளுமன்றத்திடம் வேண்டிக்கொள்வது (என்னவெனில்)

**1.** கனடா தனக்குரிய இரண்டு பொறுப்புகளின் அடிப்படையில் - (முதலாவதாக, புலம்பெயர்) ஈழத்தமிழ் மரபுரிமையின் பாற்பட்ட குடிமக்களைத் தன்னகத்தே கொண்டிருக்குங் காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஓர் அரச தரப்பாகவும் (இரண்டாவதாக, நேரடியாகப் பாதிக்கப்படாவிட்டாற் கூட எந்த ஓர் அரசுக்கும் பொதுவானதாயுள்ள சர்வதேசக்) கட்டாய நியமத் தரப்புக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்புள்ள ஓர் அரச தரப்பாகவும் - (இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான 1948 ஐ.நா.) சாசனத்தின் ஒன்பதாம் உறுப்புரை வரையறுத்துள்ள பொறுப்பின் அடிப்படையிற் செயலாற்றி தமிழ் இன அழிப்பு மீது இலங்கைக்குரிய அரச பொறுப்பை அச் சாசனம் வழங்குகின்ற முழுமையான கால நியாயாதிக்கத்தையும் (சாசனத்தின் சட்ட அமுலாக்கம் செல்லுபடியாகும் முதலாம் நாளான 1951 ஜனவரி 12 ஆம் நாள் தொடக்கம் இற்றை நாள் வரை மட்டுமல்ல மீள்நிகழும் ஆபத்தைக் கருத்திற்கொண்டு எதிர்காலக் கரிசனையையும்) உள்ளடக்கி சர்வதேச (உலக) நீதிமன்றில் விசாரிப்பதற்குரிய வழக்குத் தொடரும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்; அத்தோடு

**2.** ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்திலுள்ள (ஈழத்தமிழ்) மக்களிடையேயும் (அவர்தம்) புலம்பெயர் மக்களிடையேயும் (மேற்குறித்த இன அழிப்பில் இருந்து பாதுகாக்கப்படுவதற்கான பரிகார நீதியாக) சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழ அரசின் உருவாக்கத்தை முடிவுசெய்வதற்கான பொதுவாக்கெடுப்பு ஒன்றை சர்வதேச நிர்வகிப்புடன் நடாத்தக் கோருதல் வேண்டும்.




**PETITION TO THE CANADIAN GOVERNMENT**

**1: TAKE SRI LANKA TO THE INTERNATIONAL COURT OF JUSTICE (ICJ) AND;**

**2: CALL FOR AN INTERNATIONALLY ADMINISTERED REFERENDUM OF INDEPENDENT AND SOVEREIGN STATE OF TAMILEELAM**

**HOW TO SIGN?**

**STEP 1:** SIGN THE ELECTRONIC PETITION ON HOUSE OF COMMONS WEBSITE (https://www.ourcommons.ca/petitions/en/Petition/Details?Petition=e-5058)

**STEP 2:** CONFIRM SIGNATURE VIA E-MAIL



SCAN ME

## PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

PURPOSE OF SIGNING THE PETITION e-5058

**This Petition has been revised and uploaded to ourcommons.ca to comply with the House of Commons' word count limit (adherence to the submission guidelines).*

Canada is a diasporic home to largest number of Eelam Tamils, a nation of people without their own state, who fled their occupied traditional homeland, Tamileelam, in the island of Ceylon/Sri Lanka, facing protracted genocide over 75 years;

The Sri Lankan state has grossly violated the Right of Self-Determination of the Eelam Tamils with constitutionally entrenched clauses and amendments imposing *unitary system of government* and giving *foremost place* to a particular religion concentrating power over affairs and wealth of the island in the hands of the Sinhala ethnic community, as well as imposing the Sixth Amendment against the democratic aspiration of Eelam Tamils;

The State-sponsored physical genocide has manifested in various ways since 1956 from anti-Tamil ethnic pogroms, military and paramilitary conducted massacres, and finally, a genocidal war that ended in May 2009 in total annihilation of the de-facto Tamil Eelam administration, which remained committed to internationally brokered peace process since 2002;

The protracted nature of genocide is a unique feature of Sri Lanka's genocide and an overwhelming majority of Tamils perceive that all ten stages of genocide have occurred since the beginning of invocable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention and Punishment of the Crime of Genocide (the Genocide Convention) and the risk of recurrence remains also high post-2009;

The Sri Lankan State has disputed both The House of Commons motion passed on 19th June 2019 that called on the UN to investigate into allegations of genocide and the Legislative Assembly of Ontario enacted Bill 104;

**WE, THE UNDERSIGNED**, residents and citizens of Canada

**CALL UPON THE** Member of Parliament

**TO**

**Firstly, invoke Canada's responsibilities on two grounds – as an *injured State* party on behalf of its citizens of Eelam Tamil heritage and as a State party exercising its *erga omnes partes* obligation owed to the international community as a whole – to initiate proceedings against the Republic of Sri Lanka at the International Court of Justice to investigate that State's responsibility on Tamil genocide under the Genocide Convention's Article IX covering entire temporal jurisdiction period; and**

**secondly, to call for an internationally-administered referendum among the people of North and East descent in the island, in the diaspora and among the refugees in India and elsewhere, to decide on the creation of an independent and sovereign state of Tamil Eelam.**

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

**Background information**

**Canadian citizens of Eelam Tamil diaspora origin should urge Canada to institute case against the Republic of Sri Lanka at the International Court of Justice (ICJ) to investigate Sri Lankan State responsibility on Tamil genocide, covering temporal jurisdiction of the 1948 Genocide Convention in its entirety**

Canada is a diasporic home to the largest number of exiled Eelam Tamils, who fled genocidal onslaught in their traditional homeland, which is the northern and eastern parts of the island of Ceylon/'Sri Lanka. The homeland, which was de-facto Tamil Eelam prior to May 2009 is now Occupied Tamil Eelam.

The discourse of state formation in the island severed the legal continuity of sovereignty ties with the British Queen, who continued to be the repository of Tamils sovereignty until 1972. It unilaterally abolished even the meagre constitutional safeguards in the British-given 1947 Soulbury Constitution that had also been enacted disregarding Tamil concerns.

The unitary State of Sri Lanka has constitutionally negated Tamils their collective right of Self-Determination is the mainstream and unanimous view of the Tamils. Their democratically expressed political aspiration in 1977 for the establishment of a sovereign, secular and independent Tamil Eelam as the last-resort remedy, in the last- ever free and fair democratic election in the context of democratically exercising their self-determination, has been totally denied through the 6th Amendment to the Sri Lankan constitution since August 1983.

The Eelam Tamils, who commenced a passive resistance struggle since 1930s have been systematically subjected to a series of state-sponsored genocidal pogroms since 1956 that triggered them to seek last-resort defensive warfare as thousands fled seeking security within and outside the island. During the war, there were a series of genocidal massacres committed against Tamils by the armed military and paramilitary forces of the State. When Tamils achieved diplomatic and military parity of status with the Sri Lankan State, that State allegedly decided to genocidally annihilate the Eelam Tamils, which culminated in the genocidal war of 2009.

The widespread protests in the World capitals ended futile as the International Community failed to prevent the genocide within the Responsibility to Protect (R2P) framework. The UN's investigation into its own conduct during the last months of the war admitted "systemic failure" and concluded that the "events in Sri Lanka mark a grave failure of the UN" and recommended that the UN should in future "be able to meet a much higher standard in fulfilling its protection and humanitarian responsibilities".

However, the UN Human Rights Council based discourse in Geneva has also failed to deliver justice post-2009. There has been no meaningful transition from the root causes behind the conflict even though the armed struggle was ended through the genocidal onslaught. Cultural and structural genocide continues post-2009 with high risk of recurrence of physical genocide.

Since the systematic and protracted State-sponsored genocide against Eelam Tamils in the island manifest in various ways, it is crucial to place the acts of genocide from the very beginning of invokable temporal jurisdiction of the 1948 UN Convention on the Prevention of Genocide (hereafter be cited as the Convention) and the genocidal war in 2009 in the broader context of Ceylon/Sri Lankan States conduct towards Eelam Tamils during the last 75-year-long protracted genocide.

All the ten stages of genocide have taken place and continue to take place post-2009. The protracted nature of genocide is a uniquely unique feature of Sri Lanka's genocide. "Never again" has become "time again" in the island. Unless the State-responsibility for all acts under Article III of the Convention is properly investigated by the International Court of Justice (ICJ), there is a great danger of recurrence.

Narrowing the temporal jurisdiction to 2006-2009 without considering the protracted nature of the genocide would make it challenging to establish the intention as one would be limited to infer the intent from relevant facts and circumstances of a limited scope. In addition to reasonable inference[1], there are open and clear-cut reference to establish the definitional element of intent, which is often referred to as *dolus specialis* or *specific intent.*

[1] The International Criminal Tribunal for the former Yugoslavia (ICTY) has held that genocidal intent "may, in the absence of direct explicit evidence, be inferred from" circumstantial evidence. The International Criminal Court's (ICC's) Elements of Crimes, also states, "Existence of intent and knowledge can be inferred from relevant facts and circumstances". However, the UN Human Rights Council reports on Sri Lanka have limited such inferences only towards War Crimes and Crimes Against Humanity on crimes committed in Sri Lanka during the final phase of the war, even though the former High Commissioner of Human Rights did not rule out the interpretation of plausibile genocide based on the findings in the future."That is not something that we perceive at this stage. Had we thought that acts of genocide had been committed of course we would have raised this in the findings – that is not to say that at a subsequent stage once investigations were conducted that it implausible. But for the time being that is not something that we perceive as having allegedly happened," responded UN High Commissioner for Human Rights Zeid Ra'ad Al Hussein responding to question on genocide during OHCHR press conference on OISL Report (Geneva, 16 September 2015).

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

**Open for signature**
July 05, 2024, at 10:01 A.M. (EDT)

**Closed for signature**
September 03, 2024, at 10:01 A.M (EDT)

The North-East Secretariat of Human Rights (NESOHR), which was subjected to genocidal annihilation, has extensively documented the genocidal massacres since 1956[2].

The Permanent Peoples' Tribunal (PPT) on Sri Lanka, an international opinion tribunal independent from any State or UN authority, found Sri Lanka guilty of genocide in January 2014 at its Bremen Session[3]. Apart from the crime of genocide, the Tribunal has also defined the protected group according to the Convention as the nation of Eelam Tamils.

The House of Commons has passed a motion on 19th June 2019 calling upon "the United Nations to establish an international independent investigation into allegations of genocide against Tamils committed in Sri Lanka, including during the last phase of the armed conflict in 2009". Furthermore, the Legislative Assembly of Ontario has enacted Bill 104 in 2021 proclaiming the seven-day period in each year ending on May 18 as Tamil Genocide Education Week.

The Sri Lankan State has disputed the Canadian resolution and the legislature recognition of Tamil genocide remembrance. As such, a clear dispute has already been established for the Canadian State to institute a case at the ICJ.

As the largest diasporic home country of the Eelam Tamils, Canada that has a concern for its citizens, is entitled to invoke its responsibility as an injured State as well as being entitled to invoke its obligation *erga omnes partes* as recently demonstrated by The Gambia in its case against the Myanmar State-responsibility on genocide (2022) and by South Africa in the case of Israel's crimes against Palestinians (2024). Both the cases have been accepted by the ICJ as having plausible rights to protection from genocide.

Prevention of State Responsibility under the Convention is a clearly accepted obligation stemming from the peremptory norm of general international law (jus cogens).

Professor Francis Boyle, an eminent American expert in international law at the University of Illinois College of Law, who has single-handedly won two ICJ orders for the Republic of Bosnia Herzegovina against Yugoslavia to cease and desist all acts of genocide committed against its population, has held that the genocide against Eelam Tamils must be investigated by the ICJ and that he is prepared to appear as the Chief Prosecutor. [4]

While addressing the State Responsibility at the ICJ, the most proper avenue to address the criminal responsibility would be a specifically constituted (ad hoc) International Criminal Tribunal on Sri Lanka (ICT-SL) with dedicated statutes. The International Criminal Court has limited scope of temporal jurisdiction as the ICC can only exercise jurisdiction over crimes committed after July 1, 2002 (the date that the Rome Statute went into force).

Denial of Right of Self-Determination is also widely regarded as a jus cogens norm. Canada could also initiate a separate case in the ICJ on Sri Lankan States violation of the Right of Self-Determination of Eelam Tamils.

Canada has also incorporated the obligations of the Rome Statute into its national laws when it adopted the Crimes Against Humanity and War Crimes Act (CAHWCA) on June 24, 2000.

As such it could also apply Universal Jurisdiction to prosecute any individual present in Canada for crimes listed in the CAHWCA regardless of that individual's nationality or where the crimes were committed.

However, when making representations to The House of Commons or any Canadian government authority, the Tamil diaspora activist groups should not mix jurisprudence, territorial and temporal jurisdiction and they type of courts in one and same document when initiating a particular type of action. For example, a request to initiate proceedings at the ICJ on State Responsibility at the ICJ should not be mixing criminal responsibility or universal jurisdiction. Similarly, one should also pursue ICT over ICC as both entails the route.

[2] Report by, North East Secretariat on Human Rights (NESOHR), Karadipokku Junction Kilinochchi, Sri Lanka, First Edition in Tamil - 2005, First Edition in English - 2007, Information Collected by Statistical Centre for North East (SNE)

[3] Peoples's Tribunal on Sri Lanka (PTSL), Bremen, Germany, 07-10 December 2013, Report of the findings published by the Permanent People's Tribunal (PPT) and the International Human Rights Association - Bremen (IMRV), Bremen 2014

[4] Speech at the second international conference on Tamil Nationhood and Genocide in Sri Lanka, held at Carleton University in Ottawa in May 2018.

Please do not copy, modify, or use this text without the petitioner's consent.

**www.sangathamil.ca**

# பொதுவேட்பாளர் வந்து விட்டார்!

13.08.2024

தமிழ்ப்பொது வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது. ஆனால் கடந்த சில வாரங்களாக அந்த கேள்வியை முன்வைத்து பல்வேறு விதமாக விமர்சிக்கப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச்சபையும் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பினால் ஒரு பொது வேட்பாளரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது ஒரு மிகப்பெரிய பலவீனமாக உருப்பெருக்கிக் காட்டப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன ?

தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அடக்கப்படும் அமைப்புக்கான முதலாவது கருநிலைச் சந்திப்பு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வவுனியாவில் இடம் பெற்றது. அதன் பின் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஜூன் மாதம் 29 ஆம் திகதி இறுதியாக்கப்பட்டது. அதன் பின் ஜூலை மாதம் 22 ஆம் திகதி அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கையெழுத்திடப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு பொதுக் கட்டமைப்பு இயங்கத் தொடங்கியது. அத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது ஒரு பொது வேட்பாளரை கண்டுபிடிப்பதற்காக அன்றிலிருந்து இயங்கத் தொடங்கியது. கடந்த எட்டாம் திகதி ஒரு பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டிருக்கிறார். அப்படிப் பார்த்தால் மொத்தம் 18 நாட்கள்தான் ஒரு பொது வேட்பாளருக்கான தேடல் மும்முரமாக இடம்பெற்றது. ஒரு சமூகத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயகரமான விதங்களில் தடம் மாற்றக்கூடிய ஒரு குறியீட்டு வேட்பாளரை கண்டுபிடிப்பதற்கு 18 நாட்கள் சென்றன என்பது ஒப்பீட்டளவில் குறைவுதான். அதற்காக 18 மாதங்களை எடுத்துக் கொண்டால் கூட குற்றமில்லை.


ஒரு பொது வேட்பாளர் ஒரு பொதுக் குறியீடு என்று தொடக்கத்திலிருந்தே கூறப்பட்டு வந்தது. அவ்வாறு ஒரு பொதுக் குறியீட்டை ஏன் தேட வேண்டி வந்தது? ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைவர்கள் அநேகமாக இல்லை. தமிழ் மக்களை ஆகக்கூடியபட்சம் ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ்; ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைமைகள் இருந்திருந்தால் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளருக்கு தேவையே இருந்திருக்காது. எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை தேடுவதில் உள்ள சவால் என்னவென்றால், தமிழ் மக்களை ஒரு பொதுக் குடையின் கீழ் ஒன்றிணைக்க வல்ல தலைமைகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பதுதான்.

இப்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் அவ்வாறு எல்லாத் தகமைகளும் உடையவர் என்று இக் கட்டுரை கூறவரவில்லை. அரசியலில் மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையில் எதிலுமே 100% பூரணமானது என்று எதுவும் கிடையாது. இருப்பவற்றில் சிறந்தவற்றை வைத்துத்தான் அரசியலைக் கொண்டு போகலாம். ஏனென்றால் அரசியல் எனப்படுவது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகள் என்று பார்த்தால் இருக்கின்றவைகள்தான் சாத்தியக்கூறுகள். இல்லாதவைகள் அல்ல.

இந்த அடிப்படையில்தான் ஒரு பொது வேட்பாளரை பொதுக் கட்டமைப்பு முன் வைத்திருக்கின்றது. தமிழ்ப் பொது நிலைப்பாடு என்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடு தான். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டின் பிரதான மூலக்கூறு தாயக ஒருமைப்பாடு. அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உணர்வுபூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான விதத்திலும் ஒன்றிணைக்கும் தேவைகளை அடிப்படையாக வைத்து கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அவர் ஒரு குறியீடுதான். தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் காணப்படும் கருத்துருவாக்கிகள் ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக கட்டியெழுப்பிய கருத்துருவாக்கம் என்னவென்றால், கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளர்தான். அவரும் அரசியல் கட்சிகள் சாராதவராக இருந்தால் உத்தமம் என்று கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் அப்படி ஒரு பெண் வேட்பாளரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நெருக்கடிகள் இருந்தன. மட்டுமல்ல, நாட்களும் குறைவாக இருந்தன. ஒரு பெண் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஓர் ஆண் வேட்பாளரை அதாவது கட்சிசாரா ஆண் வேட்பாளரை கண்டுபிடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் அங்கேயும் வரையறைகள் இருந்தன. அதன் பின்னர்தான் கட்சி சார்ந்த யாராவது இருப்பார்களா என்று தேட வேண்டி வந்தது.

ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து பொதுக் கட்டமைப்புக்கு சட்டரீதியாக சில வரையறைகள் இருந்தன. தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தலாம். அல்லது ஒரு முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுயேட்சையாகக் களமிறங்கலாம். இந்த இரண்டு சாத்தியக் கூறுகளுக்குள்ளும்தான் ஒரு பொது வேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது. அதாவது தேர்தல் சட்டங்களின்படி ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி வேண்டும். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும்.



தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் அவ்வாறு சின்னத்தை தருவதற்குத் தயாராகக் காணப்பட்டன. சில கட்சிகள் தரத் தயங்கின. பொதுகட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை ஒரு பொது நிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்தி அதன்மூலம் திரட்டப்பட்ட வாக்குகளையும் பிரபல்யத்தையும் அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனது தனிப்பட்ட கட்சி தேவைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் ஆண்டுகளாகக் காணப்படும் ஓர் அரசியல் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து வரக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தமது கட்சி சின்னத்தைப் பயன் படுத்தாமல் விடுவது தொடர்பில் கட்சிகள் அதிகமாக யோசித்தன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஒரு சுயேச்சை வேட்பாளரைப் பொதுக் கட்டமைப்பு முன் நிறுத்தியமை என்பது கட்சிச் சின்னம் கிடைக்காத காரணத்தால் அல்ல. அதைவிட முக்கிய மாக வடக்குக் கிழக்கு ஒருங்கிணைந்த தாயகத்தை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கு நிலையில் இருந்துதான் என்று, தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

மேலும் தமிழரசுக் கட்சிக்குள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை பொதுகட்டமைப்பின் வேட்பாளராக நிறுத்துவது என்பது பரந்தகன்ற தளத்தில் கட்சிகளைக் கடந்த தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான அடித்தளமாகவும் அமையும்.

கடந்த 15 ஆண்டுகளாக கருத்துருவாக்கமாக காணப்பட்ட ஒரு விடயம், இப்பொழுது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வந்து விட்டது. தமிழ்ப் பொது வேட்பாளர் பரந்தகன்ற தளத்தில் தமிழ் மக்களை ஒன்றுதிரட்டுவாராக இருந்தால், அதுவே கடந்த 15 ஆண்டுகளில் கிடைத்த மகத்தான வெற்றியாக அமையும்.

தமிழ்மக்கள் எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? சில நினைவு கூர்தல்களைத்தவிர மற்றெல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாகப்; பலவாக நிற்கிறார்கள். வடக்காக, கிழக்காக; சாதியாக, சமயமாக; கட்சிகளாக, கொள்கைகளாக; தியாகிகளாக, துரோகிகளாக; கட்சிகளுக்குள் அணிகளாக; முகநூலில் குழுக்களாக; திருச்சபைக்குள் அணிகளாக; ஆலய அறங்காவலர் சபைகளுக்குள் அணிகளாக; பழைய மாணவர் சங்கங்களுக்குள் அணிகளாக; புலம்பெயர்ந்த நாடுகளில் அமைப்புகளாக; அமைப்புக்களுக்குள் அணிகளாக... எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் தமிழ் மக்கள் இரண்டாகப், பலவாக நிற்கிறார்கள். எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? ஒன்றாக நிற்கக்கூடாது என்பதில்தானே ஒன்றாக நிற்கிறார்கள்?

தன் பலம் எதுவென்று தெரியாமல் தன்னைத் தானே நம்பாமல்சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை அகக் கூடிய மட்டும் பெருந் திரளாகக் கூட்டிக்கட்டுவதுதான் தேசியவாத அரசியல். ஏனெனில் தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தங்களை தேசமாக உணரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உணர்வே தேசியம் எனப்படுகின்றது. அக்கூட்டு உணர்வுக்கு தலைமை தாங்குவதுதான் தேசியவாத அரசியல். தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவின் முதன்மை நோக்கமும் அதுதான்.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதை வெளி உலகத்துக்கு ஒரே குரலில் கூறுவார்களாக இருந்தால், தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 15 ஆண்டுகளாக இன அழிப்புக்கு எதிராக நீதி கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை.


2009 மே மாதம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது ஆயுதப் போராட்டம்தான். அது ஒரு விளைவுதான். மூல காரணமாகிய ஒடுக்குமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது இன ஒடுக்கு முறை நிறுத்தப்படவில்லை. இன ஒடுக்குமுறை எனப்படுவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் திரண்டிருப்பதை அழிப்பதுதான். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் காரணிகளை அழிப்பதுதான். அதனால், ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெரும் திரளாக்தேசிய இனமாக தமிழ் மக்களைத் திரட்டி எடுப்பதுதான் தேசியவாத அரசியல். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு அந்தக் கொள்கை வழிபட்டதே.

எனவே தமிழ் மக்கள் முன் இரண்டே இரண்டு தெரிவுகள்தான் உண்டு ஒன்று ஒரு தேசமாகத் திரள்வது. அல்லது தன் பலம் எதுவென்று தெரியாத் தன்னைத் தானே நம்பாத் ஒரு மக்கள் கூட்டமாகச் சிதறித் தூர்ந்து போவது.

நன்றி: நிலாந்தன்

# 15.08 1977

# ஈழத் தமிழ் இனப்படுகொலை



**1500க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை**
**10,000 க்கும் மேற்பட்ட தமிழர்கள் காயமடைந்தனர்**
**80,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் சொத்துக்களை இழந்தனர்**
**70 கோடிக்கு மேல் மதிப்புள்ள சேதமடைந்த தமிழர் சொத்துக்கள்**
**இதனால் பல இலட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்**

கொழும்பு –இரத்தினபுரி – களுத்துறை – காலி – மாத்தறை
அம்பாந்தோட்டை – மொனறாகலை – பதுளை – மட்டக்களப்பு
யாழ்ப்பாணம் – அனுராதபுரம் – வவுனியா – மன்னார் – முல்லைத்தீவு
கண்டி – குருநாகல் – கேகாலை –திருகோணமலை – நுவரெலியா
மாத்தளை